# நீதானே என் வசந்தம்...!



1

அந்தி மாலைப் பொழுது

தன் முகம் மறைத்த முகில்களை விலக்கி, சோம்பலாக வெளிவந்து கொண்டிருந்த சூரியன், இரவுப் பெண்ணின் வருகையை எண்ணி, சிவக்க ஆரம்பித்திருந்தான்.

தன் கிளைகளிலிருந்து உதிர்ந்து கொண்டிருந்த மலர்களை அனுப்பி, பூமியின் நலம் விசாரித்துக் கொண்டிருந்தன மரங்கள்!

கம்பீரமாகத் தெரிந்த அந்தப் பள்ளியின், ஒன்பதாவது வகுப்பு மாணவர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்தாள் சபர்மதி!

இதழ்களில் ஜனித்திருக்கும் நிரந்தரப் புன்னகையுடன், கனிவுடன் மாணவர்களை வழி நடத்துபவளை, நட்புடன் பழகுபவளை, அந்தப் பள்ளியில் அனைவருக்குமே மிகவும் பிடிக்கும்.

கொடியிடையைத் தீண்டும் கூந்தலும், தங்க நிறமும், எடுப்பான நாசியும், தன் அழகைப் பற்றி சிறிதும் கர்வமில்லாத எளிமையும், ஒரு வித நிமிர்வும், உடன் வேலை



செய்பவர்களுக்கே, அவளிடம் அதிகமான ஈர்ப்பையும், நட்புணர்வையும் ஏற்படுத்தியிருந்தன.

வகுப்பை முடிக்கப் போகும் நேரத்தில், எப்போதும் போல ஒரு திருக்குறளைக் கூறி, அதற்கான பொருளை அவள் விளக்கி முடிக்கின்ற நேரத்தில், மணி ஒலிக்க ஆரம்பித்தது.

சிறு புன்னகையுடன் மாணவர்களிடம் அவள் விடைபெற்ற போதுதான், அவளுடைய தோழியும், சக ஆசிரியையுமான பிருந்தா, வகுப்பறையின் வாசலில் நின்றிருப்பதை அவள் உணர்ந்தாள்.

வெளியே வந்தபோது "சமதி! நம்ம ஸ்கூல் மேனேஜ் மெண்ட் மாறி இருக்கில்ல.. இன்னிக்கு புது கரஸ்பாண்டன்ட் வந்திருக்கிறாராம்... நம்மையெல்லாம் அவருக்கு அறிமுகப் படுத்தறதுக்காக ப்ரின்சிபால் வரச் சொன்னாங்க!" என்றாள் பிருந்தா.

"ஓ.. ரொம்ப லேட்டாகுமா? சிநேகாவை டாக்டர்கிட்டே அழைச்சிட்டுப் போகணும்" யோசனையுடன் கூறினாள் சபர்மதி.

"ஏன்.. என்னாச்சு சமதி?"

"காலைலே லேசா ஃபீவர் இருந்தது. அம்மா, அப்பாவால அவளைக் கண்ட்ரோல் பண்ண முடியாது! டாக்டர்கிட்டே மட்டும் நான்தான் அழைச்சிட்டுப் போவேன்."

"சரி! நீ அப்பக் கிளம்பு! நான் ப்ரின்சி கிட்ட ஏதாவது காரணம் சொல்லி சமாளிக்கறேன்" ஆதரவாகக் கூறினாள் பிருந்தா.

"இல்லை! நான் மட்டும் இல்லைன்னா, அவங்களுக்கு கோபம் வந்திடப் போகுது.. இரு.. நானும் வரேன்!"



இருவரும் பேசியபடி நடந்தபோது மண் தரையில் சரக்கொன்றை மலர்கள் மஞ்சள் பாய் விரித்திருந்தன.

அதை ரசித்தபடி ப்ரின்சிபாலின் அறையை அடைந்த போது, அங்கு அனைவரும் வந்துவிட்டிருந்தனர்.

சிநேகாவைப் பற்றி யோசித்தபடியே நின்றிருந்தாள். அறையில் நடுநாயகமாக நின்றிருந்த அந்த உயரமான மனிதனைக் கவனிக்கவில்லை.

ஆனால், அந்த அறைக்குள் சபர்மதி நுழைந்த மறுநொடியே அவள் மீது படிந்த அவனுடைய விழிகளில் கடினத்தன்மையும், சிவீரென்று ஒருவித சிகப்பும் பரவின.

முகமும் உடலும் நாணேற்றிய வில்லாய் இறுகிவிட அவளையே ஊடுருவியவனை, ப்ரின்சிபால் விஜயா அழைத்தார்.

"மிஸ்டர் உதய்சரண்! இவங்க எல்லாரும் நம்ம ஸ்டாஃப். ஒவ்வொருத்தரா உங்களுக்கு அறிமுகப்படுத்தலாம்னுதான் அவங்களை இங்கே வரச் சொன்னேன்" என்றபடி, வரிசையாக அறிமுகப்படுத்த ஆரம்பித்தார்.

"உதய்சரண்" என்ற பெயரைக் கேட்டதும் நாடி நரம்பெங்கும் பயத்தாளமிட நிமிர்ந்த சபர்மதியின் விழிகள், அவனுடைய முகத்தை ஸ்பரிசித்தபடியே உறைந்து போயின.

"எவனைச் சந்திக்கக் கூடாதென்று வைராக்யத்துடன் முடிவெடுத்து வளர்ந்த ஊரை விட்டே இடம் பெயர்ந்தாளோ, இன்று அவனையே நேருக்கு நேர் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட, அந்த நிமிடம் காலடியின் கீழ் பூமி இரண்டாகப் பிளப்பது போல் ஒரு உணர்வு!

அவனுடைய அழுத்தமான காலடியோசை அருகே நெருங்க நெருங்க... மனதிற்குள் கோபக் குமிழ்கள் உற்பத்தியாக ஆரம்பித்தன.

"இவங்கதான் மிஸஸ் சபர்மதி! நம்ம ஸ்கூல்லே வெரி பாபுலர் லேடி! மாணவர்களுக்கும், சக ஆசிரியர்களுக்கும்... ஏன் நிர்வாகத்துக்குமே ரொம்பப் பிடிச்ச ஒரு ஆசிரியை..!"

ப்ரின்சிபால் பெருமையுடன் அறிமுகப்படுத்தினார்.

அவள் பார்வை மெதுவாக உயர, எதிரில் நின்றிருந்த வனுடைய முகம் கருங்கல்லின் கடினத் தன்மையுடன் இறுகித் தெரிந்தது.

ஏளனத்துடன் லேசாகச் சுழித்த உதடுகளும், மேலெழும்பிய ஒற்றைப் புருவமும் வேறு ஞாபகத்தை ஏற்படுத்த, மனதெங்கும் பதட்டம் விரவிப் பரவி விட சட்டென்று தொய்ந்து போய் கண்கள் இருட்டி சரிய ஆரம்பித்தாள் அவள்.

உடனே அவளைத் தாங்கிப் பிடித்தவன், "யாராவது உடனே தண்ணீர் எடுத்துட்டு வாங்க" அழுத்தமான குரலில் ஏவினான்.

அடுத்த நிமிடமே, பிருந்தா தண்ணீருடன் வர, அவளைத் தரையிலேயே படுக்க வைத்து, முகத்தில் சிறிது நீரைத் தெளித்தான் உதய்சரண்.

பிறகு ப்ரின்சிபாலிடம் திரும்பியவன், "இவங்களுக்கு இப்படித்தான் அடிக்கடி மயக்கம் வருமா?" யோசனையுடன் வினவினான்.

உடனே, "இல்லை சார்... இதுதான் முதல் தடவை..." கவலையுடன் கூறினாள் பிருந்தா. அதுதான் சாக்கென்று அவன்



கையைப் பிடித்து எழுப்ப ஆரம்பித்தான், உடன் வேலை செய்கின்ற சக ஆசிரியர், ப்ரகாஷ்.

அந்த நிமிடம் பதைபதைப்புடனும் தர்ம சங்கடத்துடனும் எழுந்து அமர்ந்த சமதி, "சாரி மேடம்.." தலைகுனிந்தபடி கூறினாள்.

"பரவாயில்லை சபர்மதி! ஏன்.. உனக்கு உடம்பு ஏதும் சரியில்லையா? பேசாம 'சிக்லீவ்' போட்டுட்டு மத்தியானம் வீட்டுக்குப் போயிருக்கலாமே..?"

வாஞ்சையுடன் வினவியவரிடம், "அதெல்லாம் இல்லை மேடம்! திடீர்னு கண்ணை இருட்டிட்டு வந்திடுச்சு... சாரி!" எழுந்தவள், குற்ற உணர்வுடன் உதய் சரணிடம் திரும்பினாள்.

இரு கைகளையும் தாமரை மொட்டாய் குவித்து வணக்கம் கூறிவிட்டு, "என்னால ஏற்பட்ட அசௌகரியத்துக்காக என்னை மன்னிச்சிடுங்க சார்" என்றபோது, அவள் குரல் வெகுவாகக் கம்மியிருந்தது.

"இட்ஸ் ஓகே!" அசுவாரசியமாகக் கூறிவிட்டு அடுத்த ஆசிரியரிடம் சென்றவனின் மனதிற்குள், எரிதழலாய் பழைய ஞாபகங்கள்!

ஆனாலும், தன்னுடைய குழந்தையை அவள் என்ன செய்திருப்பாள் என்ற ஆர்வமும், எதிர்பார்ப்பும் எழ, உடனே சில நினைவுகள் அவனை ஒரு முடிவிற்கு வரச் செய்தன.

நிச்சயமாக அந்த சிசுவை வயிற்றிலிருக்கும்போதே அவள் அழித்திருப்பாளென்பதை, அவர்கள் பிரிந்த அன்று அவள் கூறிய வார்த்தைகளும், கட்டுக்குலையாத அவளின் தேகமும் பறைசாற்றின.



சட்டென்று மனதில் ஒரு வலி எழ, ப்ரின்சிபாலைத் தொடர்ந்து அவர் அறிமுகப்படுத்தியவர்களை கவனிக்க ஆரம்பித்தான் சரண்.

நெருஞ்சி முள்ளாய் அவனுடைய நினைவுகள் மனதைக் கீறி இதயப் பரப்பை வேதனையால் நனைக்க தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள சமதியும் வெகுவாய் சிரமப்பட்டாள்.

பிறகு, ஒரு வழியாக அறிமுகம் முடிந்து அனைவரும் கிளம்பியபோது, "ஒரு நிமிஷம் மிஸஸ் சபர்மதி... மிஸஸ் தானே...?" குத்தலாகக் கேட்டான் அவன்.

வேதனையுடன் அவள் பின்தங்கியபோது, வேகமாக அருகில் வந்தவன், "ரொம்ப நல்லா ட்ராமா போடறே! மயக்கம் வந்து விழற மாதிரி நடிச்சா, நான் உன்னைத் தாங்கிப் பிடிப்பேன்... உன் மேல பரிதாபப்படுவேன்... உன் அருகாமை யிலே என்னை இழுத்துடுவேன்னு எதிர்பார்த்தா, நீதான் பாவம்...

"இப்பதான் உன் மேல எனக்கிருந்த வெறுப்பு இன்னும் அதிகமாகுது... தெரிஞ்சிக்க! ம்.. எப்பவுமே நீ ஒன்னு நினைச்சா.. வேற மாதிரி நடக்குது இல்லை..

"மூணு வருஷம் ஆச்சா! ஆனா, மனுஷனை விஷம் மாதிரி ஆட்படுத்தற அந்த அழகும், கவர்ச்சியும் கொஞ்சம் கூடக் குறையலை... பாக்கப் போனா இன்னும் அதிகமாயிருக் குன்னுதான் சொல்லணும்... சே.." என்றபடி விலகிச் சென்றான்.

என் மீது இப்படி வெறுப்புச் சேற்றை வாரி இறைத்து கோப வர்ணம் தீட்ட, நான் என்ன தவறு செய்தேன் என்று அவனிடம் கேட்க வேண்டும் போல்...!



மனமும், உடலும் பலவீனமாகி விட, மெதுவாக நடந்து வெளியே வந்தபோது, பிருந்தா அவளுக்காகக் காத்திருந்தாள்.

"திடீர்னு என்னாச்சு சமதி? நான் ரொம்ப பயந்துட்டேன்.. வா.. உடனே வீட்டில கொண்டு போய் விட்டுட்டுத் தான் நான் எங்க வீட்டுக்கு போகப் போறேன்." உரிமையுடன் அவளுடன் வந்தாள் அவள்.

ஆட்டோவில் கிளம்பி வீட்டிற்குச் சென்று சமதியை அவள் தாய் மங்களத்திடம் ஒப்படைத்தாள், அவரிடம் பேசினாள்.

"அம்மா! இன்னிக்கு இவ சரியா சாப்பிடலையா என்னன்னு தெரியலை.. ஸ்கூல்லே மயக்கம் போட்டு விழுந்துட்டா! சிநேகாவை டாக்டர்கிட்டே அழைச்சிட்டுப் போகும்போது, இவளையும் கூட்டிக்கிட்டுப் போய் செக்கப் பண்ணுங்க.."

அவள் கூறியதைக் கேட்டதும், பதறிப் போன மங்களம் "ஏம்மா என்னாச்சு? உடம்பு சரியில்லையா? காலையில நல்லாத்தானே இருந்தே?" மகளைப் பாசத்துடன் அணைத்த படிக் கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்னுமில்லம்மா.. ஸ்நேகா குட்டி எங்கே?"

"உள்ளே தூங்கிட்டிருக்காடா..! எப்பவுமே, நீ அஞ்சு மணிக்கெல்லாம் வந்துடுவியா? உனக்காகக் காத்துட்டிருந்தா! நீ வர லேட்டானதும் பாலைக் குடிச்சிட்டு அப்படியே தூங்கிட்டா" என்றார் அவர்.

உருவத்தில் அப்படியே தந்தையை உரித்து வைத்திருந் தாலும், குணத்தில் சபர்மதியைப் போல் மிகவும் மென்மையானவள் அவள்!

சபர்மதியின் மனம் பலவித யோசனைகளால், பெரும் சஞ்சலமானது. எதையுமே கலபத்தில் மறக்க மறுத்து சத்தியாக்கிரகம் செய்தது.



2

ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் மகளின் அருகில் அமர்ந்து யோசித்தபோது, உதய் சரணைத் தான் இன்னும் மறக்கவில்லை என்ற உண்மை, சபர்மதியின் முகத்தில் வேகமாய் அறைந்தது.

பிறகு விடைபெற்றுக் கிளம்பிய பிருந்தாவை வழியனுப்பி விட்டு உள்ளே வந்தபோது, காபியுடன் தயாராக வந்தார் மங்களம்.

''ஏம்மா... பிருந்தா போயிட்டாளா?'' அவர் கேட்க, யோசனையுடன் தலையசைத்து விட்டுத் தன் அறைக்குள் சென்ற சபர்மதிக்கோ, காற்றடைத்த பந்தாய் மனம் முழுவதும் அவன் நினைவு!

பழைய நினைவுகள் போட்டி போட்டுக் கொண்டு கடலலையாய் கரை புரள, உதய் சரணை முதன் முதல் சந்தித்த அந்த நாள், இன்று நடந்தது போல் மனவானில் வலம் வர ஆரம்பித்தது.

உணர்வுகளின் சுயம்வரமாய், நிகழ்வுகளின் அணிவகுப்பு!

மூன்று வருடங்களுக்கு முன்பு, அவள் பி.எஸ்சி., பி.எட் முடித்து விட்டு வேலைக்காக விண்ணப்பிக்க ஆரம்பித்திருந்த நேரம்! அப்போது அவர்கள் மதுரையில் குடியிருந்தார்கள்.



அவளுடைய தோழி கீதாவின் அண்ணனுடைய குழந்தை அகலினியின் முதல் பிறந்த நாள் விழாவிற்குச் சென்றிருந்தாள் சபர்மதி!

கேக் வெட்டுவதற்கு முன்பு அளிக்கப்படும் பழரசத் தட்டை ஏந்தியபடி அவளும் கீதாவும் வந்தவர்களை வரவேற்க, திடீரென்று ''எங்களுக்கெல்லாம் ஜூஸ் கொடுக்க மாட்டீங்களா?'' ஆழ்ந்த குரல் ஒன்று அவளைத் திடுக்கிட்டுத் திரும்பச் செய்தது.

எதிரில், கூர்மையான பார்வையுடன், உதட்டோரம் இதமான கேலி தொக்கி நிற்க, அலட்சிய பாவத்துடன் உயரமாக நின்றிருந்தவனை வேகமாக அளவிட்டது, சபர்மதியின் பார்வை!

ஏனோ, அந்த நொடியே நெஞ்சக் கதவுடைத்து வேகமாக உள்ளே நுழைந்தது, அந்த நெடிய உருவம்.

ஊர், பெயர் கூட அறியாமல் தன் இதயத்தைக் களவாடிச் சென்றவனையே, பிரமிப்புடன் பார்த்தபடி, அசைவற்று நின்றிருந்தாள் அவள்.. மனமெங்கும், மகிழ்ச்சித் துளிகள் சடசடவென்று விழுந்தன.

நெஞ்ச வயலில் சட்டென்று விழுந்த நேச விதை, ஆழப் புதைந்து மென்துளிர் விட ஆரம்பித்தது.

''மிஸ்...'' அவள் பெயர் தெரியாததால் பாதியில் நிறுத்தி விட்டு, அவள் கண் முன் சொடக்குப் போட்டு அழைத்தவன், ''என்ன... அப்படியே ஃப்ரீஸ் ஆகி நின்னுட்டிருக்கீங்க? ஜூஸ் எடுத்துக்கலாமா..?'' குறும்புடன் கேட்டுவிட்டு எடுத்துக் கொண்டான்.



அப்போது அருகில் வந்த கீதாவின் அண்ணன் வெங்கடேஷ் ''சமதி! இவன் என்னோட நண்பன் உதய்சரண்! ஃபாரின்லே போய் படிச்சிட்டு போன வருஷம் தான் இந்தியாவுக்கு வந்திருக்கான்... இப்ப எக்ஸ்போர்ட் பிசினஸில கொடிகட்டிப் பறந்துட்டிருக்கிற ஒரு இளம் தொழிலதிபர்!'' என்று பெருமையுடன் அறிமுகப்படுத்தினான்.

பிறகு சரணிடம் திரும்பியவன், தணிந்த குரலில் ''இது யாரு தெரியுமா? சதாவோட தங்கை சபர்மதி!'' என்றதும், சட்டென்று ஒருவித விறைப்பு வந்தது அவனிடம்!

பார்வை கூர்மையுடன் அவள் மீது பதிந்து, அவள் செல்கின்ற திசையையே தொடர்ந்தது.

சபர்மதியின் அண்ணன் சதானந்த் அப்போது சாஃப்ட்வேர் இன்ஜினியராக வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருந்தான். அங்கேயே ஒரு பெண்ணைத் திருமணமும் செய்து கொண்டு விட்டிருந்தான்.

சதாவும், வெங்கடேஷும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். அவன் வெளிநாட்டில் இருப்பதால் இப்போது இருவருக்கும் தொடர்பில்லாமல் போயிருந்தது.

அன்று, பிறந்த நாள் விழா முடியும் வரை, ஏதோ ஒருவித மோன லயத்தில் திளைத்திருந்தாள் சபர்மதி.

இதுவரை எத்தனையோ ஆடவர்களைப் பார்த்திருந்தாலும், தனக்கே உரியவனை, காலம் காலமாய் தனக்கென்று காத்திருந்தவனை சந்தித்த உணர்வு, ஏனோ அவளை வெகுவாய் ஆட்படுத்தியது.

மெதுவாகத் திரும்பியபோது, அவனும் அவளையே நோக்கிக் கொண்டிருந்தான். ஆனால் பார்வை மட்டும் வித்தியாசமாய்..!



அங்கு விழிகளின் மௌனப் பரிபாஷை மொழியின்றிப் போக, காதலின் ஆளுமை மட்டும் மாற்ற முடியாமல் அவளுள் மையம் கொண்டது... அவன் போகும் வழியெங்கும் அவளுடைய இதயம் தொடர்ந்தது.

விழா முடிந்து வீடு வரும் போதெல்லாம், அவன் நினைவுகளே மனதிற்குள் சாமரம் வீசிக் கொண்டிருந்தன.

வாசலிலேயே அவளுக்காகக் காத்திருந்த தந்தை அருணாசலத்தைப் பார்த்தபோது, தன் மனதில் புதிதாய் மொட்டு விட்டிருந்த காதல் ரகசியம் அவருக்குத் தெரிந்து விடுமோ என்ற பயம் மெலிதாய் வந்தது.

அமைதியாக உள்ளே சென்றவளையே வியப்புடன் தொடர்ந்த அருணாசலத்துக்கு, அவள் செய்கைகள் புதிதாய்!

எங்கு சென்று திரும்பினாலும் வீட்டிற்கு வந்தவுடனே, தன் தந்தையிடம் அங்கு நடந்த எல்லா விஷயங்களையும் கூறி விடுபவளின் இன்றையச் செயல்கள் புதிராய்..!

பின் தொடர்ந்து சென்று ''என்னம்மா.. பங்ஷன் நல்லா நடந்ததா? நிறையக் கூட்டமா..?'' அவர் கேட்டவுடனே ஒருவித விதிர்ப்புடன் நிமிர்ந்தாள் அவள்.

தான் ஏதோ, தன் நேசத்தை நெற்றியில் ஒட்டிக் கொண்டு திரிவது போல், புதிதான ஒரு அவஸ்தை உணர்வுடன் எழுந்தது, அவளிடம்!

''ம்.. ஆமாம்ப்பா.. நல்ல கூட்டம்!'' ஏதோ உளறிக் கொட்டி விட்டுத் தன் அறைக்குச் சென்று கதவை சாத்தியவளுக்குள், சுகமான ஒரு படபடப்பு!

பிறகு, ஒரு நாள் கோவிலுக்கு சென்றிருந்தபோதுதான் அங்கு அவனைச் சந்தித்தாள் அவள்.

மங்களமும், அவளும் பிரகாரத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தபோது, ஒரு தோழி மங்களத்திடம் பேச ஆரம்பிக்க, ''அம்மா.. நான் குளத்தங்கரைக்குப் போயிட்டு வந்துடறேன்'' என்றபடி பொரி வாங்கிக் கொண்டு உற்சாகமாய் சென்றாள் சமதி.

வேகமாகக் குளக்கரைப் படிகளில் இறங்கியபோதுதான் சிறிது தூரத்தில் தனியே அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்த சரணின் விழிகளில் அவள் பதிந்தாள்.

அசைவற்ற குளத்தின் நடுவே பஞ்சுப் பொதியாய் மேகங்கள் பிரதிபலித்து மிதந்து கொண்டிருக்க, அதைத் துகள்களாய் சிதறடித்தன அவளின் கொலுசணிந்த பாதங்கள்!

அவை நீருக்குள் மூழ்கி தண்ணீர் வளையங்களை உருவாக்க அதிர்வின்றி கலைந்த மேகங்கள், அவளுடைய பாதத்தை ஆசையுடன் தீண்டின.

பிறகு பொரியை வாரி இறைத்தபடி சுக நினைவுகளில் மூழ்கி இருந்தவளை மெதுவாகக் கலைத்தது சரணின் குரல்!

''தினமும் கோவிலுக்கு வருவீங்களா சபர்மதி...?''

சட்டென்று கேட்ட அவனது குரலால் விதிர்த்தவளுக்குள் பெரும் மகிழ்ச்சிச் சாரல்!

மெல்லிய நாணத்துடன் நிமிர்ந்து, ''தினமும் இல்லை.. வாரம் ஒரு தடவையாவது வந்துடுவேன்'' என்றவளுக்கு அவன் பார்வையை எதிர்நோக்கும் தைரியம் மட்டும் வர மறுத்தது.

பிறகு, மீன்கள் கூட்டமாய் பொரியை உண்ணும் அழகையே ரசித்திருந்தாள் சமதி, அம்மாவின் அழைப்பைக் கேட்டு அவசரமாகத் திரும்பினாள்.



தடுமாறி விழப் போனவளை சரிந்து விழாமல் தடுத்தவன், இலகுவாய் அவளைத் தாங்கிப் பிடிக்க, காற்று தீண்டிய அனிச்ச மலராய், உடனே சிலிர்த்துத் தவித்தது அவள் நெஞ்சம்!

''தொடத் தொட மலர்ந்ததென்ன.. பூவே!
தொட்டவனை மறந்ததென்ன..''

பாடல் வரிகள் சட்டென்று நினைவுக்கு வர அவனைத் தன்னால் நிச்சயமாக மறக்க முடியாதென்பது புரிந்தது.

வேகமாக இறங்கி வந்த மங்களம், அருகில் வருவதற்குள் அவளை விடுவித்து நிறுத்தியவன், ''பாத்து.. இந்நேரம் நீ தண்ணியிலே விழுந்திருந்தா..என் எதிர்கால லட்சியமே சிதறிப் போயிருக்கும்... நல்ல வேளை.. நான் பக்கத்தில இருந்து காப்பாத்திட்டேன்'' பொருள் விளங்காத குரலில் கூறி விட்டு, சட்டென்று படியேறிச் சென்று விட்டான்.

அவன் வார்த்தைகள் பனிச்சாரலாய் உட்புகுந்து ஆயிரம் கேள்விகளை அவளுள் விதைக்க ஆரம்பிக்க, பதட்டத்துடன் அருகில் வந்தாள் மங்களம்.

''யாரும்மா அந்தத் தம்பி...? உனக்குத் தெரிஞ்சவரா... நல்லவேளை, நீ குளத்தில் விழுந்திடாமக் கடவுள் மாதிரி வந்து காப்பாத்திட்டாரு!'' தவிப்புடன் கூறினாள்.

''அவர்.. கீதாவோட அண்ணன் வெங்கடேஷ் இருக்காரில்லே.. அவரோட ஃப்ரெண்ட்! அன்னிக்கு பர்த்டே பார்ட்டியில் பாத்திருக்கேன்'' மெல்லிய குரலில் விளக்கினாள்.

''சரி வா! பிள்ளையாருக்கு ஒரு தேங்காய் உடைச்சிட்டுக் கிளம்பலாம்.. என்ன பொண்ணு நீ... பாத்துத் திரும்பறதில்லை.. வா!''



அவர் அழைத்துச் சென்ற போது மகிழ்ந்தவள், பிறகு வரப் போகும் நாட்களைப் பற்றி அறியவில்லை. பிறகு அவனை மறக்கவுமில்லை.. பார்க்கவுமில்லை.

அடுத்த மாதமே கீதாவின் அம்மாவும் அப்பாவும் அவளுடைய வீட்டிற்கு வந்து, சரணின் சார்பில் முறைப்படி பெண் கேட்டனர்.

கீதாவின் அம்மாவையும், அப்பாவையும் மகிழ்ச்சியுடன் வரவேற்ற சபர்மதி, இந்த விஷயத்தை நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை.

அருணாசலத்திடமும், மங்களத்திடமும் தாங்கள் வந்த நல்ல விஷயத்தைப் பற்றி அவர்கள் கூறியபோது, அவள் மனம் லட்சம் சிறகுகளை விரித்துப் பறக்க ஆரம்பித்தது.

வெட்கத்துடன் ஒதுங்கி நின்றவளை ஈர்த்தது, அவர்களது பேச்சு!

''அருணாசலம் சார்! உதய்சரண் சார் பெரிய பணக்காரர், பாரம்பரியமான நல்ல குடும்பத்துல பிறந்தவர். அப்பா, அம்மா சின்ன வயசிலே இறந்துட்டாங்க... ஹாஸ்டல்லேயே பெரும்பாலும் படிச்சவரு.. பெரியப்பா, பெரியம்மாதான் அவருக்கு ஆறுதலா இருந்தாங்க!

''அவங்களை உங்களுக்கு நல்லாவே தெரியும். நம்ம சதா தம்பியோட... முன்னாள் மாமனார் மாமியார்தான் அவங்க!

''அவங்க பெரியப்பா இறந்து போயிட்டாரு. பெரியம்மா மட்டும்தான் இருக்காங்க. அவங்க எங்கேயும் வரதில்லை. உங்களுக்குதான் கவிதா இங்கிருந்து போனதுமே அவங்க தொடர்பு விட்டுப் போச்சு!''

மெதுவாகக் கூறினார் கீதாவின் தந்தை.





## 3

பழைய நினைவுகள் மனதை பாதித்துவிட, அமைதியாக அமர்ந்திருந்த அருணாசலம், ''ஆமாம்... தன்னோட தம்பி பையன் வெளிநாட்டிலப் படிக்கிறதா ஒரு தடவை சம்பந்தி சொல்லி இருக்காங்க'' யோசனையுடன் கூறினார்.

''நல்ல விஷயம் பேச வந்திட்டு அதெல்லாம் எதுக்குங்க? வந்த விஷயத்தைப் பத்திப் பேசுங்க'' மெதுவாகத் தூண்டினார் கீதாவின் தாய்.

''சரி மிஸ்டர் அருணாசலம்... சரணுக்கு உங்க பொண்ணைப் பிடிச்சிருக்கு... அவர் எதுவுமே சீரா எதிர்பார்க்கலை. அவரைப் பத்தி வேணும்னா நீங்க விசாரிச்சிப் பாத்துக்கங்க! சென்னையில பெரிய எக்ஸ்போர்ட் கம்பெனி நடத்திட்டிருக்காரு..

''சமதிகிட்டயும் கேட்டுக்கிட்டு, யோசிச்சி ஒரு நல்ல முடிவா சொல்லுங்க.. ஜாதகத்துல அவருக்கு நம்பிக்கை இல்லை. பெயர் பொருத்தம் வேணாப் பாருங்க..''

''சரி.. நாங்க கலந்து பேசி அப்புறமா எங்க முடிவச் சொல்றோம்..'' என்ற அருணாச்சலம், டிபன் எடுத்து வரும்படி மங்களத்திடம் கூறினார்.

பிறகு அவர்கள் பொதுவான விஷயங்களைப் பேச ஆரம்பிக்க, சிறு துள்ளலுடன் அவள் தோட்டத்திற்குச் சென்றபோது, அங்கு மலர்கள் அவளைப் புன்னகையுடன் வரவேற்று வாழ்த்துவதைப் போல்..!

நீண்ட நாட்களுக்குப் பிறகு, காதல் தந்த உற்சாகத்தில் மனம் மிதவையாய் மிதக்க, அதில் பொக்கிஷமாய் சரணின் நினைவு!

அவர்கள் சென்ற பிறகு மகளை அழைத்த அருணாசலம், "நீ என்னம்மா சொல்றே? உன் விருப்பம்தான் எங்களுக்கு முக்கியம்!" என்றார் கூர்மையுடன்.

"ம்.. உங்க இஷ்டம்ப்பா!" மென்குரலில் அவள் கூறியபோது "எங்களுக்கு இஷ்டமில்லைன்னா..." அவர் குரல் அவளை திடுக்கிட்டுத் தூக்கிவாரிப் போடச் செய்தது.

தவிப்புடன் நிமிர்ந்தவளின் அருகே வந்து அவள் தலையைப் பாசத்துடன் வருடியவர், "எனக்குப் புரியும்டா! நானும் உன் வயசைக் கடந்துதான் வந்திருக்கேன்... நீ அன்னிக்கு பர்த்டே பார்ட்டியில இருந்து வந்ததுலயிருந்து கவனிச்சிட்டுதானே இருக்கேன்.. தாயறியாத சூல் உண்டா அப்படின்னு சொல்வாங்க! ஆனா நான் உன்னை என் மனசுல சுமந்துட்டிருக்கேன்... புரியாமப் போகுமா? உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்றேன்... உனக்கும் அவரைப் புடிச்சிருக்கில்ல..?" வாஞ்சையுடன் வினவினார்.

வெட்கத்துடன் தலைகுனிந்தபடி தலையசைத்தாள் சபதி.

பிறகு, சம்பிரதாயப்படி பெண் பார்க்கவென்று சரணை வரவழைத்து பேசி முடித்து உடனே திருமணமும் முடிவு செய்யப்பட்டது.

மறு மாதமே திருமணம் முடிவு செய்யப்பட்ட நிலையில் வேலை விஷயமாக கனடாவிற்கு சென்றவன், கல்யாணத்திற்கு முதல் நாள்தான் ஊருக்கே திரும்பினான்.

இந்த ஒரு மாதமும் அவனைப் பார்க்க முடியாமல், பேச முடியாமல் பரிதவித்துப் போனாள் சபர்மதி. சதானந்தனால் உடல் நிலை காரணமாகத் திருமணத்திற்கு வர இயலவில்லை.



திருமணம் இனிதே நடந்து முடிய, விரும்பித் திருமணம் செய்து கொண்ட அறிகுறியே அவனிடம் தெரியவில்லை.

ஒருவித இறுக்கமும், அழுத்தமும் மட்டுமே தெரிய, தொழிலில் ஏதும் பிரச்சனையாகி விட்டதோ என்று அவனுக்காக வருத்தப்பட்டு அதைப்பற்றி அவனிடம் தனிமையில் பேசுகின்ற சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தாள் சபர்மதி.

அன்றிரவு.. முதலிரவு!

ஒவ்வொரு பெண்ணும், ஆயிரம் கனவுகளுடனும், லட்சம் கோடி பயத்துடனும் எதிர்நோக்கி தவித்து நிற்கின்ற ஒரு இரவு!

அறைக்குள் வந்தவுடனே அவளை அணைத்துத் தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டவனிடம், இனிமையான பேச்சுக்களையும், சீண்டல்களையும் எதிர்பார்த்து, ஏங்கி ஏமாந்து போனது மனது.

மறுநாளே கிளம்பி அவர்கள் சென்னைக்குச் செல்ல, அவனுடைய வீட்டின் பிரம்மாண்டமும், அவனுடைய விலகல் தன்மையும் இறுக்கமும் அவளை மிகவும் பாதித்தன.

காலையில் டிபன் சாப்பிட்டுவிட்டு, ஏழரை மணிக்கெல்லாம் கம்பெனிக்கு சென்று விடுபவன், இரவு பத்து மணிக்குத்தான் களைத்துப் போய் வருவான். அந்த நிமிடம் அவனைத் தொந்தரவு செய்ய அவளுக்கு மனமிருக்காது.

மதிய சாப்பாடு அவன் அலுவலகத்திற்கே சென்று விடும். சமையலுக்கும், உதவிக்கும் ஆட்கள் இருந்தாலும், ஏனோ தனித்துவிடப்பட்டதைப் போலவே உணர்ந்தாள் சமதி.



தினமும், அருணாசலமும் மங்களமும் அவளிடம் பேசி விடுவார்கள். சதானந்தன் ஞாயிற்றுக்கிழமை இரவு கட்டாயம் பேசி விடுவான்.

அதுமட்டும் அவளுக்கு ஆறுதலாய்... பல நேரங்களில் தன்னை விரும்பி மணந்த அவனுடைய செய்கைகளும், கோபப் பார்வைகளும் பெரும் புதிராய்!

இப்படியே இரண்டு மாதங்கள் கழிய, ஒருநாள் அவனிடம் இதுபற்றிப் பேசிவிட வேண்டுமென்று முடிவெடுத்தாள் சமதி.

ஆனால், அன்றிரவே அவன் கனடாவிற்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது.

அன்று மதியமே போன் செய்தவன், "சபர்மதி! நான் இன்னிக்கு நைட் கனடாவுக்கு அவசரமாகக் கிளம்பறேன்.. வரதுக்கு ஒரு மாசமாவது ஆகும் போலிருக்கு! அதனால உங்கப்பாவை வரச் சொல்லி நாளைக்கே நீ மதுரைக்குக் கிளம்பிடு. நான் வந்தவுடனே நீ வரலாம்.. இங்கே தனியா இருக்க வேணாம்" என்றான்.

அவனைப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற கவலை மனதை உருக்கினாலும், அப்பா அம்மாவைச் சந்திக்கப் போகிறோம் என்ற ஆர்வமும், எதிர்பார்ப்பும் மனதை லேசாக்கின.

அப்போதுதான் நினைவு வந்தது. போனில் பேசுகின்ற அளவு கூட அவன் நேரில் தன்னிடம் பேசுவதில்லையென்ற உண்மை உரைத்தது.

தினமும் இரவு வீட்டிற்கு வந்தவுடன் குளித்துவிட்டு வருபவன், சாப்பிட்ட பிறகு கம்ப்யூட்டரில் கணக்குகளைப் பார்க்க ஆரம்பித்து விடுவான்.



அவள் அவனுக்காகக் காத்திருந்து உறங்கிய பிறகே அறைக்குள் வருபவன், சில நாட்களில் கணவனென்ற உரிமையுடன் அவளிடம் நெருங்கி தன்தேவைகளைத் தீர்த்துக் கொள்வது மட்டுமே வாடிக்கையாய்!

கேலிப் பேச்சுக்களோ, புதுமணத் தம்பதிக்கே உரித்தான சீண்டல், சிணுங்கல்களோ எதுவுமின்றி, இயந்திரத்தன்மையாய் மாறி இருந்தது அவர்கள் உலகம்!

இந்த நிலையில்தான் அவன் கனடாவிற்குச் செல்ல, அவள் மதுரைக்குச் சென்றாள்.

அங்கு சென்றபிறகு, ஏனோ அவளால் முன்பு போல் இயல்பாக இருக்கவே முடியவில்லை. சரணின் நினைவுகள் அதிகமாய் ஆக்ரமித்தன.

தலை பாரமாகிக் கனத்து, சாப்பிட முடியாமல் சோர்ந்து போய் அடிக்கடி தலைசுற்றல் வர ஆரம்பித்தது.

காரணம் புரியாமல் அவள் தவித்தபோதுதான், தான் கருவுற்றிருக்கும் விஷயமே அவளுக்குத் தெரிந்தது.

நாட்கள் தள்ளிப் போயிருந்ததையே உணராமல் இருந்தவளை மங்களம்தான் விசாரித்தாள்.

"சமதி! எனக்கென்னவோ சந்தேகமா இருக்கு.. வா, டாக்டர்கிட்டே போய் காமிச்சிட்டு வந்திடலாம்" என்று அழைத்துச் சென்றாள்.

மறுநாள் எடுத்த யூரின் டெஸ்டில் கர்ப்பம் உறுதியாகிவிட, இமயத்தைத் தொட்டு விட்டதுபோல் உணர்ந்தாள் சபர்மதி.

மனம், உடனே இந்த விஷயத்தை சரணிடம் பகிர்ந்து கொள்ளத் துடித்தது.

எல்லோரும் அவனை 'சரண்' என்று அழைக்க, தான் இனிமேல் அவனை 'உதய்' என்று தான் அழைக்க வேண்டுமென்று முடிவு செய்திருந்தாள் அவள்.

உடனே ஃபோன் செய்து அவனுடைய 'செல்'லுக்குப் பேசியபோது, ஏனோ வெகுநேரம் அடித்துக் கொண்டே இருந்தது.

பிறகு பத்து நிமிடம் கழித்து மீண்டும் தொடர்பு கொண்டபோது உடனே எடுத்தவன், ''ம்.. என்ன விஷயம்?'' என்றபோது அவன் குரலில் சிறு கோபம் தொனித்தாற்போல்!

''உதய்.. நான்.. ம்.. நம்ம குழந்தைக்கு இப்ப ரெண்டு மாசம். மூணு நாளாகுதுன்னு டாக்டர் சொன்னாங்க! எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா..? உங்களை உடனே பாக்கணும் போல இருக்கு'' பரபரப்புடன் கூறினாள்.

அவனுடைய மௌனம் கலைந்து, சட்டென்று சீறலான ஒரு மூச்சு அவனிடமிருந்து வெளிப்பட்டது.

''நான் கிளம்பி உடனே வர முடியாது.. கங்கிராட்ஸ்.. இனி வரப் போற நாட்களுக்கு! பத்து நாளிலே நான் அங்கே வருவேன்... வந்து பாக்கறேன்'' கூறிவிட்டு போனை வைத்து விட்டான்.

அவன் குரலிலிருந்தது மகிழ்ச்சியா.. பரவசமா.. என்று இனம் பிரிக்க முடியாமல் குழம்பி நின்றவளுக்கு, தாய்மை எனும் உணர்வே இனிமையாய்!

பத்து நாட்கள் எதிர்பார்ப்புடன் கழிய, வந்தவுடனே அவன் மடி சாய்ந்து இந்த சுகானுபவத்தையும், உற்சாகத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற ஏக்கம் பெரிதாய்!



பத்து நாட்கள், இருபது நாட்களாக... சரண் மட்டும் வரவேயில்லை. ஏனோ செல்போனும், வேலை செய்ய வில்லை...

பயந்து போன சமதி சென்னை அலுவலகத்திற்கு போன் செய்து விசாரித்தபோது, சரண் இந்தியா வந்து பத்து நாட்கள் ஆகி விட்டது தெரிந்தது.

அவனுடைய செக்ரட்டரிதான் இனிமையான குரலில் பேசினாள்.

''மேடம்! சார் பத்து நாள் முன்னாடியே இந்தியா வந்திட்டாங்க. உங்களுக்குத் தெரியாதா? இன்னும் கொஞ்ச நேரத்துல ஆஃபிஸ் வந்துடுவாங்க.. வந்தவுடனே கால் பண்ணச் சொல்றேன்.. தேங்க்யூ..'' என்றபடி போனை வைத்தபோது, சஞ்சலமானது மனது.

சென்னைக்கு வந்தும் இன்னும் ஏன் தன்னை வந்து அவன் பார்க்காமல் இருக்கிறான் என்ற கேள்வி சாட்டையாய் அறைய, தொய்ந்து அமர்ந்தவள், உடனே தந்தையின் அலுவலகத் திற்குப் போன் செய்தாள்.

''அப்பா! அவர் இந்தியா வந்துட்டாராம்... என்னை சென்னைக்கு அழைச்சுட்டுப் போறீங்களா? பஸ்ஸிலே டிக்கெட் கிடைக்குமான்னு உடனே பார்க்க முடியுமா?'' என்று கேட்டாள்.

''வயித்து பிள்ளையோட பஸ்ஸிலே எல்லாம் போகக் கூடாது... நான் ட்ரெயின்லே பர்த் கிடைக்குதான்னு பாக்கறேன்! கிடைச்சப்புறம் போகலாம்'' என்றவருக்குள்ளும் பெரும் யோசனை!

உடனே, அவன் அலுவலகத்திற்குப் போன் செய்து அவர் பேசிய போது, அவன் மறுநாளே கிளம்பி வருவதாகக் கூறினான்.



மதியம் வீட்டிற்கு வந்து அவர் விபரம் கூறியபோது, ஏதோ பாரம் அகன்றாற் போன்ற நிம்மதியுடன் தன் வயிற்றைத் தடவி முத்தமிட்டவள், இனிமேல்தான் தன் நிம்மதி தொலையப் போவதை பாவம் அறியவில்லை!



4

மறுநாள் வந்த உதய்சரண், வெறும் கையுடன் வரவில்லை. ஒரு விவாகரத்துப் பத்திரத்தையும் கையோடு கொண்டு வந்து, அனைவரின் மனதிலும் இடியை இறக்கினான்.

அவனைக் கண்டதும் ஆவலுடன் ஓடிச் சென்று வரவேற்றவளை, முகத்தில் எந்த உணர்ச்சியுமின்றி அளவிட்டவனின் விழிகள், கடைசியாக அவள் வயிற்றில் பதிந்தன.

சட்டென்று ஒரு வெற்றிப் புன்னகை அவன் இதழோரம் கசிய இடுங்கிய கண்களுடன் அவளையே நோக்கியவன், ''கங்கிராட்ஸ்.. இந்தா! நீ கன்சீவ் ஆனதுக்கு ஒரு சின்னப் பரிசு!'' என்று ஒரு கவரை அவளிடம் நீட்டினான்.

குழப்பத்துடன் அதை வாங்கியவள், ஆசையுடன் பிரித்தபோது அமைதியாகவே இறுதி வரை இருந்து, சட்டென்று உயர்ந்து சீறிப் பாயும் சுனாமியாய், அதிலிருந்த வாசகங்கள் அவளை சுழற்றிப் போட்டன.

அவளிடம் விவாகரத்துக் கோரியிருந்தான், அவளுடைய ஆசைக் கணவன் உதய்சரண்!

மொழி புரியாத குழந்தையைப் போல் கண்களில் நீர்த் திரையோடு அவனை நிமிர்ந்து பார்த்து மலங்க மலங்க



விழித்தவளிடமிருந்து பார்வையை விலக்கி, அருணாசலத் திடம் மெல்லத் திரும்பினான் அவன்.

''இனிமே நமக்குள்ளே எந்த உறவும் இருக்கப் போறதில்லை. அதனால உங்களை 'சார்'னு கூப்பிடறதே ரொம்பப் பொருத்தமா இருக்கும்னு நினைக்கிறேன்'' என்றவனை பயத்துடன் உறைந்து நின்றபடி பார்த்திருந்தார் அருணாசலம்.

''நான் உங்க பொண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கிட்ட துக்குக் காரணமே என் தங்கை கவிதாதான்! எங்கம்மா, அப்பா இறந்தப்புறம் எவ்வளவுதான் பணமிருந்தாலும் பாசம்கிற உயர்ந்த பொக்கிஷத்தை நான் அனுபவிக்கக் கொடுத்தவங்க என்னோட பெரியப்பாவும், பெரியம்மாவும்...

''அவங்களுக்கு பத்து வருஷமாக் குழந்தை இல்லாம இருந்து பிறந்தவதான் கவிதா.. உங்களுக்கு நல்லாத் தெரிஞ்சிருக்குமே... உங்க மகனோட முதல் மனைவி!

''அவளுக்குக் கல்யாணம் நடக்கப் போறதைத் தெரிஞ்சு.. நான் எவ்வளவோ சந்தோஷப்பட்டேன். என்னோட பெட் அவ! அண்ணா, அண்ணான்னு என் காலையே சுத்தி சுத்தி வந்த அற்புதமான ஒரு பொண்ணு அவ.

''வெளிநாட்டிலிருந்து என்னால படிப்பை பாதியில விட்டுட்டு அவ கல்யாணத்திற்கு வர முடியலை. ஆனா, அவளுக்கு உங்க மகன் சதா பண்ணின கொடுமைய என்னாலே மறக்கவே முடியாது. மூணு மாசம் கர்ப்பமா இருந்தவளை, உதாசீனப்படுத்தி ஊரிலே எங்க பெரியம்மா வீட்டிலக் கொண்டு வந்து விட்டுட்டு விவாகரத்துக்கும் நோட்டீஸ் குடுத்தவன் அவன். அதுகூடப் பரவாயில்லை..

அப்புறமா அவ கர்ப்பம் கலைஞ்ச மன நிலை சரியில்லாம போனப்புறமும் அவன் சொன்ன கொடூரமான பொய்யையும், அதனால விளைஞ்ச கொடுமையையும் என்னால மறக்கவே முடியாது!

''மனசாட்சியைக் கொன்னவன் அவன்.. என் தங்கை வயித்தில வளர்ற குழந்தை தன்னோடதில்லைன்னு அவன் சொன்னான் பாருங்க.. அந்த நிமிஷமே எங்க பெரியப்பா.. செத்துப் போயிட்டாங்க!

''அவங்க உயிர் ஒரு நாள் கழிச்சிப் போச்சுன்னாலும், உடனே உணர்வுகள் செத்துப் போச்சு! அப்புறம் ஸ்ட்ரோக் வந்து படுத்த பெரியம்மாவும் இப்பதான் சரியாகி இருக்காங்க... நான், அப்ப இங்கே இருந்திருந்தேன்னா நிச்சயமா அவனை ஜெயில்ல தள்ளியிருப்பேன்.

''கவிதா.. இப்ப உணர்வில்லாத ஜடமா, மென்டல் ஹாஸ்பிடல்லேயே தான் ரெண்டு வருஷமா இருக்கா! என் மனசல ரணமா எரிஞ்சிட்டிருந்த தீ, இப்பதான் மெல்ல அடங்க ஆரம்பிச்சிருக்கு!

''ஏன்னா, பதிலடி கொடுக்கப் போற ஒரு சின்ன சந்தோஷம்!

''இப்ப அவன் தங்கைக்கு.. உங்க பொண்ணுக்கு அதே நிலைமை! கணவனால புறக்கணிக்கப்பட்ட ஒரு கொடுமை வரப் போகுது! என்ன செய்யப் போறீங்க சார்...?'' வன்மத்துடன் கேட்டான் உதய்சரண்.

கண்களுக்கு முன் ஆயிரம் பூச்சிகள் பறப்பது போல் பார்வை மறைத்து இருட்டிக் கொண்டு வர, சட்டென்று உணர்விழந்து சரிந்தாள் சபர்மதி.



உடனே ஓடிச் சென்று தாங்கி, தண்ணீர் தெளித்து மயக்கத்தைத் தெளிவித்த அருணாசலம், பதட்டத்துடன் நிமிர்ந்தார்.

''மாப்பிள்ளை.. நீங்க?''

அவர் முடிப்பதற்குள் ''ஆமாம்! எல்லாம் தெரிஞ்சு, உங்க குடும்பத்தைப் பழிவாங்கணும்னுதான் நான் இவளைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டேன்!

''நாம அடிக்கும் போது வலி தெரியாது! அடிபடும் போதுதானே தெரியும்.. மத்தவங்களுக்கும் எப்படி வலிக்கும்னு..!'' குத்தலாகக் கூறினான் சரண்.

பதறி எழுந்தவர், ''இல்லை மாப்பிள்ளை... என் மகன் நல்லவன்! அவன் பொய் சொல்ல மாட்டான்! உங்க தங்கச்சி வேற ஒருத்தரை விரும்பி... வயித்தில குழந்தையோடதான் என் மகனைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டா! அதனாலதான் விவாகரத்துக்கு சம்மதிக்க எழுதிக் குடுத்து, அவளைப் பழைய காதலனோடவே சேத்து வச்சிடறேன்னுட்டுப் போனான் என் பிள்ளை...

''அதுதான் உண்மை! ஆனா, அப்புறம் எல்லாமே விபரீதமாயிடுச்சு! அந்தக் காதலன் அவளை சேத்துக்க மறுத்தது, அப்புறம்தான் எங்களுக்குத் தெரிஞ்சது. அதனால தான், உடனே உங்க பொண்ணு தப்பான முடிவுக்குப் போயிருந்திருக்கா!''

''போதும் நிறுத்துங்க! இன்னொரு பொண்ணைப் பத்தி இப்படி அபாண்டமா பேசறமேன்னு நாக்கு கூசலை? இதுவே உங்க பொண்ணா இருந்திருந்தா.. சே.. எவ்வளவு கேவலமான குடும்பம்! உங்க பையன் ஒருத்தன்தான் மோசம்னு நான்



நினைச்சேன்.. யாரோட புத்தி அவனுக்கு வந்திருக்குன்னு இப்பதான் புரியுது! என் தங்கச்சிய நீங்க கல்யாணம் முடிச்ச மறுநாளே கொண்டு வந்து விட்டிருந்தீங்கன்னா, நீங்க சொன்னதை நான் உடனே நம்பியிருப்பேன்..

''ரெண்டு மாசம் அவளோட உங்க பையன் ஜாலியா குடித்தனம் செஞ்சிட்டு ஏன் கொண்டு வந்து விடணும்?'' ரௌத்ரமாக இரைந்தான் சரண்.

''அந்தப் பையன் 'ட்ராவல் ஏஜென்சி' வச்சிருக்கிறதாகவும், அதுக்காக வெளிநாடு போயிருக்கிறதால, வந்தவுடனே போய்ப் பேசலாம்னும், கவிதா சொன்னதா சதாதான் சொன்னான்.. அதுதான் தம்பி உண்மை!''

தவிப்புடன் கூறிய அருணாசலத்திற்கு, வார்த்தைகள் தொண்டைக் குழிக்குள் சிக்கித் தடைபெற்றன.

''போதும்.. எல்லாம் வேஷம்! இப்ப என் தங்கச்சி பைத்தியமா சுய நினைவில்லாம இருக்கா! அங்கே உங்க பையன் இன்னொருத்தியை மணந்து சுதந்திரமா, ஜாலியா ஊர் சுத்திட்டிருக்கான்... அத நாங்க பாத்திட்டிருக்கணும்.. அப்படித்தானே?''

மெதுவாக முன்னால் வந்த மங்களம், ''தம்பி! பொறுமையா இருங்க.. அவர் சொல்றதெல்லாம் நிஜம்..!'' என்றார் தயங்கியபடி!

அவரையே ஒரு கணம் கூர்ந்தவன், வெறுப்புடன், ''நீங்களும் ஒரு பொண்ணுதானே? இது எவ்வளவு பெரிய பழின்னு உங்களுக்குத் தெரியாது.

''கட்டின புருஷன், தன் குழந்தைய இல்லைன்னு சொன்ன கொடூரமான அவமானத்துலதான்.. என் தங்கச்சி கார்



முன்னாடி விழுந்து சாகப் பார்த்திருக்கா!'' என்றவன் ஒரு முடிவுடன் சபர்மதியிடம் திரும்பினான்.

''அதெல்லாம் நடந்து முடிஞ்ச கதை! இப்ப எனக்குத் தேவை... இந்த விஷயத்துல உன் முடிவு... இந்த டைவர்ஸ் நோட்டீசல உன் கையெழுத்து!

''போடறதுக்கு மறுத்தா, நானும் உங்கண்ணா சொன்ன பொய்யைச் சொல்ல வேண்டியிருக்கும். இது என்னோட குழந்தை இல்லை.. நீ முன்னாடியே எவனையோ காதலிச்சு கெட்டுப் போனவ.. அப்படின்னு ஊர் முழுக்கச் சொல்லுவேன்..'' புலியாய் உறுமினான்.

அவன் பேச்சைக் கேட்டவுடன், இதயமெல்லாம் பரவிய வலி உணர்வுகளை எல்லாம் சாகடித்து விட, அவள் உயிர்ப்பைத் தொலைத்திருந்தாள். மனம், சுக்கு நூறாகச் சிதறி இருக்க, உள்ளே எரிமலையாய் கனன்றது.

கலங்கிய விழிகளுடன் அவனையே பார்த்தவள், சட்டென்று சீற்றத்துடன் அந்தப் பத்திரத்தை எடுத்து கையெழுத்துப் போட்டுவிட, பதறியபடி ஓடி வந்தார் அருணாசலம்.

''என்ன காரியம் செஞ்சிட்டம்மா..? இது உன் வாழ்க்கை! நான் எப்படியாவது மாப்பிள்ளையோட கை கால்லே விழுந்தாவது உன்னை அவரோட சேத்து வைக்கிறேன்டா'' தவிப்புடன் அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டார்.

தனக்காக அவர் சரணுடைய கால்களில் விழுவதா? என்ன கொடுமை! அவனுடைய வார்த்தைகள் தீப்பொறியாய் உள்ளிறங்க, மனக் காட்டில் பெரும் தீப்பிடித்தது.

சட்டென்று விலகியவள், "வேண்டாம்ப்பா! அன்பு இல்லாத ஒரு வாழ்க்கை எனக்குத் தேவையில்லை... கல்யாணம்கிறதுக்கு அடிப்படையே பரஸ்பர நேசம்தான்! அது இல்லாத வாழ்க்கை வர்ணங்களே இல்லாத ஒரு வானவில் மாதிரிதான்! இப்ப என் எதிர்காலமும் அப்படித்தான் ஆகிப் போச்சு!" தீர்க்கமாய்க் கூறினாள்.

அவ்வளவு நேரம், கண்ணீரை அருவியாய் பொழிந்த கண்கள், கட்டும் விழிச் சுடராய், உலர ஆரம்பித்தன.

"இல்லைடா.. நீ புரியாமப் பேசறே! உன் வயித்தில இருக்கிற குழந்தை என்னாகறது? பிறக்கும் போதே, ஒரு அப்பா தன் குழந்தையை மறுக்கறது.. எவ்வளவு கொடுமை அப்படின்னு தெரிஞ்சுமா இப்படி ஒரு முடிவெடுத்தே?"

"ஆமாம்ப்பா... எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம்... அழிச்சிடலாம்..! இது பொண்ணாயிருந்தா என்னை மாதிரிதானே அதோட வாழ்க்கையும் சீரழிஞ்சு போகும்? பாவம்..! ஒருவேளை ஆணாயிருந்தா, எந்தப் பொண்ணோட வாழ்க்கையை அது அழிக்குமோ...? அப்படிப்பட்ட குழந்தை எனக்கு வேணாம்! எப்படி இருந்தாலும் அப்பாவோட புத்தி கொஞ்சமாவது இருக்குமே.." கசப்புடன் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டிருந்த சரணின் இதழோரம், சிறு விரக்திப் புன்னகை ஒன்று அரும்ப, மறு நிமிடமே அந்த விவாகரத்துப் பத்திரத்தை கையிலெடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினான் அவன்.

தன் வாழ்க்கையின் லட்சியம் என்று குளக்கரையில் அவன் கூறியது, தன் குடும்பத்தை பழிவாங்குவதுதான் என்பதை தாமதமாகப் புரிந்து கொண்டாள் அவள்.



அன்று, அவள் வாழ்க்கையிலிருந்து விலகிச் சென்றவன் தான்! மூன்று வருடங்கள் கழித்து, சபர்மதி இன்றுதான் அவனைப் பார்க்கிறாள்.

அவன் சென்ற பிறகு, அவள் எவ்வளவோ கதறியும், சிசுவைக் கொல்வது பெரும்பாவம் என்று புரியவைத்து, பிடிவாதமாகக் குழந்தையை அழிக்க எண்ணிய அவள் மனதை மாற்றித் தடுத்து விட்டனர், அருணாசலமும் மங்களமும்!

மசக்கையாலும், பிற உபாதைகளாலும், கஷ்டப்படும் போதெல்லாம், அவள் மனம் தன் அனுபவங்களைப் பாடங்களாக்கி, ரணங்களை உரமாக்கியது.

சிநேகா பிறந்த பிறகு, மகளுக்காக அந்த ஊரிலிருந்து மாற்றல் வாங்கிக் கொண்டு, வீட்டை விற்று விட்டு கோயம்புத்தூருக்கு வந்தவர்கள்தான்!

அக்கம்பக்கத்திலிருப்பவர்களிடம், அவளுடைய கணவர், வெளிநாட்டில் இருப்பதாகக் கூறி இருக்கிறார் மங்களம்!

குழந்தையின் முகத்தைப் பார்த்து, ஓரளவு தன்னைத் தேற்றிக் கொண்டு சோகங்களை மறக்க ஆரம்பித்திருந்த வளுக்கு, ஒரு வருடமாகப் பார்க்கின்ற இந்த ஆசிரியர் தொழில், பெரும் நிம்மதியையும், தன்னம்பிக்கையையும் கைவசப்படுத்தியிருந்தது.

வாழ்க்கை, நதியின் பெருக்காய் விரைந்து சென்று கொண்டிருக்க, திடீரென்று அதைத் தடை செய்யும் அணையாகி இருக்கிறது, உதய்சரணின் வருகை!

அவனுடைய அன்பை யாசகம் கேட்டு, ஒரு காலத்தில் உணர்வுப் பிழம்பாய் தான் உருகி நின்றது, ஞாபகம் வந்து, விரக்தியும் வேதனையும் அவளுக்குள் படர்ந்தன.







5

"அம்மா...." வென்ற அழைப்பு, சபர்மதியை உசுப்பிவிட, சட்டென்று கனவுகள் கலைந்து நிமிர்ந்தபோது, சிநேகா அவள் கழுத்தை இறுகப் பிடித்து அணைத்திருந்தாள். உடல்நிலை நன்றாக இருந்தால், பொரிந்து தள்ளியிருப்பாள்... இன்று ஏதோ ஒருவித சோர்வு தெரிந்தது அவளிடம்,

"செல்லம்.. என்னடா நல்லாத் தூங்கினியா..? அம்மாவுக்கு இன்னிக்கு ஸ்கூல்ல கொஞ்சம் வேலையிருந்தது.. அதான் லேட்டாயிடுச்சு.. சாரிடா!" என்றபடி அவளுடைய நெற்றியில் மெல்லியதாய் முத்தமிட்டாள் சபர்மதி.

தலையை சரித்து, "சரி.. நாம கடைக்குப் போயி பொம்மை வாங்கலாமா?" புருவங்கள் நெரிய அவள் கேட்டபோது, அந்த முகமும் செய்கைகளும், சரணைப் பெரிதும் நினைவுபடுத்துவதாய்!

மாநிறமாய், கூர்மையான விழிகளுடன், எடுப்பான நாசியும், அழுத்தமான முகவாயும், எந்தவித மாற்றமு மில்லாமல் அவனுடைய தடத்தை அவளிடம் பதித்திருக்க, அந்தக் குண்டு கன்னங்கள் மட்டும் விதிவிலக்காய்!

தான் எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் பிடிவாதமாய் அவனை நினைவுபடுத்துகின்ற வகையில் தன் உதிரத்தில் ஜனித்திருந்த அந்தப் பட்டுப் பிஞ்சை, அவளால் வெறுக்க முடியவில்லை.

இன்று அவன் வருகை, தன்னை மயங்கி விழச் செய்கின்ற அளவு பாதிக்கும் என்ற உண்மையை, அவளே ஒரு வியப்புடன் இப்போதுதான் உணர்ந்தாள்.



"அம்மா.. போலாமா?" சலுகையுடன் கேட்ட மகளை உச்சி முகர்ந்து சமாதானப்படுத்தியவள், "அம்மா உனக்கு பொம்மை வாங்கித் தருவேனாம்.. நீ என் கூட சமத்தா டாக்டர் ஆன்ட்டிகிட்டே வருவியாம்... ஓகேயா?" கொஞ்சலாகக் கேட்டாள்.

ஒரு கணம் யோசித்தவள், "சரி.." என்றாள் சிணுங்கலுடன்.

பிறகு, உடனே அவளுடைய மூட் மாறுவதற்குள் அழைத்துக் கொண்டு டாக்டரிடம் கிளம்பும்போதுதான், வேலை முடித்து அருணாசலம் காரில் வந்து இறங்கினார்.

"என்னாச்சு! எங்க வீட்டு குட்டி தேவதைக்கு.. உடம்பு எப்படி இருக்கு?" என்றபடி பேத்தியை ஆவலுடன் தூக்கிக் கொண்டார் அவர்.

"லேசா டெம்பரேச்சர் இருக்குப்பா! நான் ராஜம் டாக்டரைப் பாத்துட்டு வந்திடறேன்" என்று கிளம்ப, தானே காரை எடுத்துக் கொண்டு உடன் வந்தார் அவர்.

அவர்களைக் கண்டதும் புன்னகையுடன் வரவேற்ற ராஜம், சிநேகாவை பரிசோதித்து மருந்து எழுதித் தந்துவிட்டு, "என்ன சபர்மதி... சிநேகாவோட அப்பா இந்த லீவுக்கு வரலியா? இவளுக்கு விளையாட ஒரு குட்டிப் பாப்பாவை எப்ப தரப் போறீங்க... குழந்தையைப் பாக்க இன்னும் அவர் இந்தியா வுக்கு வரவேயில்லை இல்லையா?" என்றார் எதார்த்தமாக!

சமதியின் முகம் மாறிவிட, உடனே சமாளித்தது அருணாசலம்தான்!

"அநேகமா அடுத்த மாசம் வருவாங்கன்னு நினைக் கிறேன்" என்று கூறியதுடன், "ஹை.. ஜாலி.. அப்பா

வராங்களாம்மா?'' கட்டித்தனமாய் அதையே பற்றிக் கொண்டாள் சிநேகா.

வீட்டிற்குத் திரும்பி வருகின்ற வழியில் எல்லாம் பொம்மையைக் கூட மறந்துவிட்டு, அப்பாவைப் பற்றியே நச்சரிக்க ஆரம்பித்தாள். சபர்மதிக்கு அவள் ஏக்கம் புரிந்தது.

பிறகு கடைக்கு அழைத்துச் சென்று அவளுடைய மனநிலையை மாற்றி கார் பொம்மை வாங்கித் தந்த பிறகே, அவள் அமைதியானாள்.

ஆனால், சமதியின் மனம் அமைதியடைய மறுத்தது. வீட்டிற்கு வந்ததும் குழந்தையை சாப்பிட வைத்து, மருந்தைக் கொடுத்து, கதைகள் சொல்லி உறங்க வைத்து விட்டு தந்தையிடம் வந்தாள்.

''அப்பா! போன வாரம் எங்க ஸ்கூல் கரஸ்பாண்டன்ட் மாறி இருக்காரு.. நிர்வாகம் வேற கைக்கு மாறிடிச்சன்னு சொன்னேன் இல்லைப்பா.. அந்த அவர் இன்னிக்கு வந்திருந்தாருப்பா..'' என்றாள் மெதுவாக.

''எப்படிம்மா இருக்காரு? நல்லபடியாத் தெரியறாரா.., நீங்க எல்லாரும் அவர் கிட்டே பேசினீங்களா?''

''ம்.. எல்லாம் கேட்டீங்க அவர் யாருன்னு கேட்கலை யேப்பா..? அங்கே கரஸ்பாண்டன்ட்டா வந்தது சிநேகாவோட அப்பாதான்!'' வேதனை மிகுந்து தெரிந்தது அவள் குரலில்.

''சமதி...'' பதட்டத்துடன் கூவியபடி எழுந்தவரைக் கைப் பிடித்து ஆதரவாக அமர்த்தினாள், அன்று மாலை பள்ளியில் நடந்ததைக் கூறினாள்.

''அப்பா.. பயப்படாதீங்க! எதிர்பாராத ஒரு ஷாக்கிலே எனக்கு மயக்கம் வந்தது உண்மைதான்! ஆனா உங்க



பொண்ணு கோழை இல்லை.. எனக்கும் கணவர்ங்கிற ஒரு துணை இல்லாமத் தனியா வாழ முடியுங்கிறதை இனிமே தான் அவருக்கு நான் உணர்த்தப் போறேன். நீங்க எதுக்கும் கவலைப்படக் கூடாது. ஒடுங்கிப் போயிருந்த என்னை ஒரு தைரியசாலியா மாத்தி நிமிர்ந்து வாழக் கத்துக் குடுத்ததே நீங்கதான்! பார்ப்போம்.. எதிர்காலத்துல என்ன நடக்கும்னு கணிக்க முடியாதேப்பா..? நாம தப்பு செய்யலை.. நல்லதே நடக்கும்னு நம்புவோம்..'' உறுதியாகக் கூறினாள்.

அவளின் முன்னுச்சியை வருடி ஆறுதல் படுத்திய வருக்குள், பல யோசனைகள்!

அன்றிரவு தொலைபேசியில் பேசிய சதானந்தனிடம், அவர் மெதுவாக விபரத்தைக் கூறியபோது அவன் மிகவும் பயந்து விட்டான்.

''அப்பா! சமதியை கேர்ஃபுல்லா இருக்கச் சொல்லுங்க.. அவன் ஒரு மிருகம்! நம்ம பக்கம் இருக்கிற நியாயத்தைப் புரிஞ்சுக்காம, தான் செஞ்சதுதான் சரின்னு என்னை கழுத்தைப் பிடிச்சுத் தள்ளி விரட்டுனவன் அவன்! பேசாம அவளை வேலைய விட்டுடச் சொல்லுங்க..'' கோபமாகக் கூறினான் அவன்.

''அவ இப்ப தைரியமா இருக்கா சதா! வேலைக்குப் போகட்டும். அந்தப் பணம் வந்து எதுவும் ஆகப் போறதில்லை. ஆனா அவளுக்குப் பொழுது போகறதுக்கும், ஒரு ஆத்ம திருப்திக்காகவும்தான் இந்த வேலைக்கே அவளை அனுப்பி இருக்கேன்..

''அவன் ஏதாவது தொந்தரவு செஞ்சா உடனே நின்னுடலாங்கிறா.. பார்ப்போம்! அதுவரைக்கும் போயிட்டு



வரட்டும். எனக்கப்புறம் இந்த உலகத்தை தனியா எதிர் நோக்க அவளுக்கு தைரியம் வரணுமே!'' என்றார் அருணாசலம் முடிவாக.

தந்தையிடம் பேசிவிட்டு படுத்த சதானந்தனுக்கோ வெகு நேரம் உறக்கமே வரவில்லை.

அவன் மனைவி சாரா இரவுப் பணிக்கு சென்றிருந்தாள். அவனைப் பற்றிய எல்லா விபரங்களையும் அறிந்த பிறகுதான், அவனை முழு விருப்பத்துடன் மணந்து கொண்டாள் அவள்.

தன் முதல் திருமணமும், அதன் விளைவாகத் தன் தங்கை சபர்மதியின் வாழ்க்கை பாதிக்கப்பட்டதும், சங்கிலித் தொடராய் நினைவிற்கு வந்தன.

இரண்டு மனம் வேண்டுமென்று தோன்றியது.. ஒன்று நினைப்பதற்கும், மற்றொன்று மறப்பதற்கும் என்று இருந்தால் பரவாயில்லையோ என்ற எண்ணம் உள்ளத்தில் கேள்வியாய்!

மழை நின்ற பிறகும் மின் கம்பியில் அணிவகுத்திருக்கும் நீர்த்துளிகளாய் நினைவுச் சரங்கள் மனதில் மெல்ல மெல்ல விழத் துவங்கின.

சதானந்த், பிஇ, எம்.எஸ். முடித்து விட்டு சாஃப்ட்வேர் இன்ஜினியராக வேலைக்குச் சேர்ந்தபோதுதான், அவனுக்குப் பெண் பார்க்க ஆரம்பித்தார் அருணாசலம்.

அப்போது வந்த வரன்தான் கவிதாவின் வீட்டு சம்மந்தம்! தரகர் வந்து, பெண் வீட்டினர் பெரிய கோடீசுவரர்கள் என்றும் ஒரே பெண் என்றும் நன்றாகப் படித்த மாப்பிள்ளையாகத் தேடுவதாகவும் சதாவைப் பிடித்திருப்பதாகவும் கூறினார்.



அவர்களிடம் தாங்கள் மத்தியதர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தானென்பதை விளக்கிச் சொல்லும்படிக் கூறியவருக்கு, கவிதாவின் தந்தை ராஜேந்திரனே ஒரு கடிதம் எழுதி இருந்தார்.

அதில் ஜாதகத்தையும் அனுப்பியிருந்தவர், வசதியைப் பற்றி பிரச்சனை இல்லை என்றும் நன்றாகப் படித்த மாப்பிள்ளையாகவும் நல்ல குடும்பமாகவும் தன் பெண்ணிற்குப் பார்ப்பதாக எழுதியிருந்தார்.

பிறகு, பெண் பார்க்கச் சென்றபோது கவிதாவை அனை வருக்குமே பிடித்து விட, உடனே திருமணம் முடிவானது.

ஹாஸ்டலில் தங்கி பி.எட். படித்து வந்த சபர்மதியும் கல்யாணத்திற்கு வர, திருமணம் இனிதே நடந்து முடிந்தது.

எல்லோரும் மிகவும் மகிழ்ந்தனர். வீட்டில் முதல் கல்யாணம் என்பதால் கலகலப்புக்குக் குறைவின்றி இருக்க, சபர்மதி தன் அண்ணியை கேலி செய்யும் போதெல்லாம் அவள் ஏனோ சோகமாகவே இருப்பது போல் தோன்றியது.

முதலிரவன்று ஆயிரம் கனவுகளுடன் காத்திருந்த சதாவிற்கு, அவனிடம் பேச வேண்டுமென்று கூறி தயக்கத் துடன் கவிதா சொன்ன விஷயம் பெரும் இடியாய்!

''நான் ஒருத்தரை மனசார விரும்பினேன். எங்க ஊரிலே ட்ராவல் ஏஜென்சி நடத்துறாரு... அந்த மூர்த்தி! என் ஃப்ரெண்ட் சிந்துவோட வீட்டுக்கு நான் போகும்போதுதான் அவர் எனக்குப் பழக்கமானாரு.

''நான் அவரை விரும்பறது யாருக்கும் தெரியாம இருந்தது. ஒருநாள் அப்பா எங்க ரெண்டு பேரையும் சேத்து வச்சுப் பாத்திட்டாங்க. உடனே எனக்கு வரன் பாக்க ஆரம்பிச்சாங்க...

''அவரு வேற ஜாதிங்கறதும், பத்தாவதுதான் படிச்சிருந்ததும், அப்பாவுக்குப் பிடிக்கலை.. அப்பதான் நாங்க ஓடிப் போக முடிவு செஞ்சோம்... அதையும் கண்டுபிடிச்சி அப்பா தடுத்திட்டாங்க...

''அப்புறம்.. நாங்க ரெண்டு பேரும் ஒரு நாள் கணவன் மனைவியா வாழ்ந்துட்டோம்!

''இப்ப நான் ரெண்டு மாசம் கர்ப்பமா இருக்கேன்.. ட்ராவல் ஏஜென்சி பிசினஸ் விஷயமா மூர்த்தி மலேஷியா போயிருந்தப்ப, அப்பா இந்தக் கல்யாணத்தை அவசரமா முடிச்சிட்டாங்க... என்னால எதுவும் செய்ய முடியலை!

''எங்கண்ணா, லண்டன்லே படிக்கிறாங்க.. அவங்க கிட்டவும் என்னால பேச முடியலை. பயமா இருக்கு. நீங்கதான் என்னைப் புரிஞ்சிக்கிட்டு மூர்த்தியோட சேர்த்து வைக்கணும்.''

கண்ணீருடன் கைகூப்பி இறைஞ்சினாள்.

வாழ்க்கை, ஆரம்பித்த முதல் நிமிடமே முடிந்தது.. அவனுக்குப் பேரிடியாய்!

அன்று மலர்ந்த அவனுடைய நேசநெஞ்சம் மூச்சுக் காற்றுக்குத் தவித்து ஏங்க, மொட்டுவிட்ட உறவுப் பூ அன்றே வாடியது... உதிர்ந்தது!

என்ன செய்வதென்று புரியாமல் தவித்துப் போய் சிலையாய் அமர்ந்திருந்தவன், பிறகு தன்னை அமைதிப்படுத்தி நிமிர்ந்து, ''அந்த மூர்த்தி இந்தியாவுக்கு எப்ப வருவாரு?'' மெலிந்த குரலில் கேட்டான்.

''ரெண்டு மாசமாகும்னு கடை ஆள் சொல்றாரு! அவரைத் தொடர்பு கொள்ளவும் முடியலை.. ஒரு ரெண்டு மாசம்



என்னைப் பொறுத்துக்கிட்டீங்கன்னா, நான் அவர் வந்தவுடனே அவரோடப் போயிடுவேன்... அப்பாவிற்குத் தெரியக் கூடாது'' கண்ணீர் சாரலாய் வழிந்தது. அதன் ஊடே வேறு யாரையும் மனதால் கூட நினைக்க விரும்பாத உறுதியும் தெரிந்தது.

பெருமூச்சுடன் எழுந்தவன், ''சரி! நீ நிம்மதியா படுத்துத் தூங்கு! நான் பக்கத்து ரூமிலப் படுத்துக்கறேன்'' என்றபடி அடுத்த அறைக்குள் சென்றான்.

மனமெங்கும் ரணமாய் வலிக்க, தாலி கட்டிய மனைவியின் புறக்கணிப்பு அவன் ஆண்மைக்கே பெரும் சவுக்கடியாய்!

வெகுநாட்களாய் வேர்பிடித்து தழைக்க ஆரம்பித்திருந்த இனிய திருமணக் கனவுகள் வேரோடு மண்ணில் சாய்ந்து, மனதில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தின.



6

**கா**லையில் எழுந்ததுமே சதா அவளிடம் கூறிவிட்டான். ''கவிதா! இந்த விஷயம் நமக்குள்ளே இருக்கட்டும். எங்கம்மா அப்பாவுக்குத் தெரிய வேணாம். நான் மெதுவா எடுத்து சொல்லி உன் நிலைமையை அவங்களுக்குப் புரிய வைக்கிறேன்'' யோசனையுடன் கூறினான்.

'சரி'யென்று தலையசைத்தவளும், புது மணப் பெண்ணுக்கே உரிய ஒதுக்கத்தோடு இருந்து கொள்ள, யாரும் அவளைத் தவறாக நினைக்கவில்லை.

மறுநாளே, ஊருக்குக் கிளம்பிய சபர்மதிக்கும், அவளுடன் இணைந்து பழக நேரமின்றிப் போனது.



ஒரு மாதம், அந்த வீட்டிற்குள்ளேயே தனித் தீவாய்.. தன்னைச் சுற்றி ஒரு கூடு கட்டி வாழ்ந்தவளை, யாராலும் நெருங்கவும் முடியவில்லை.

ஒருநாள் இருவரும் வெளியில் சென்றிருந்த பொழுது, ஊருக்குப் போன் செய்து அப்பா அம்மாவிடம் பேசிய கவிதா, தன் காதலனின் ட்ராவல் ஏஜென்சிக்கும் போன் செய்தாள்.

அவன் மலேசியாவிலிருந்து வந்துவிட்ட விபரத்தைக் கடைப் பையன் கூற, உடனே ஒருவிதப் பிரகாசம் வந்தது அவள் மனதில்!

உடனே சதானந்திடம் வந்தவள், ''என் மூர்த்தி ஊரிலிருந்து வந்துட்டாராம்.. நீங்க உடனே என்னை ஊருக்கு அழைச்சிட்டுப் போக, முடியுமா? உங்களுக்கு நான் ரொம்ப தொந்தரவு தரேன்.. இல்லையா?'' என்றாள் கேள்வியாய், குற்ற குறுகுறுப்புடன்!

''ம்.. இல்லை! இன்னிக்கே அம்மா அப்பாகிட்டே உண்மையைச் சொல்லிட்டு நானே உன்னை அழைச்சிட்டுப் போறேன்.''

சிறுமுறுவலுடன் அவன் பேசியபோதும், வேதனையும் விரக்தியும் உள்ளுக்குள் அவனை செல்லரித்ததென்னவோ உண்மை!

அன்றிரவே, தன் தந்தையிடமும், தாயிடமும் அவன் உண்மையைக் கூறியபோது, மங்களம் அதை ஜீரணிக்க முடியாமல் அழ ஆரம்பித்து விட்டார்.

அருணாசலத்திற்கும் பெரும் அதிர்ச்சி! என்றாலும் உடனே சுதாரித்துக் கொண்டார். ''உன்னை நினைச்சா எனக்குப் பெருமையா இருக்கு சதா... நீ என் மனைவிங்கிற ஆளுமை



உணர்வைக் காட்டாம, அவளோட உண்மையான நிலையைக் கண்டு வெறுக்காம, நடுநிலையா யோசிச்சு, ஒரு நல்ல முடிவா எடுத்திருக்கே!

''அது உன் வாழ்க்கையப் பாதிக்கும்னாலும், இதுக்கு வேற எதுவுமே செய்ய முடியாத உன் நிலைமையையும் உன்னோட எதிர்காலத்தையும் நினைச்சா பயமாருக்கு.. கடவுள் பாத்துப்பார்... நல்லது செய்யறவங்களுக்கு உடனே இல்லைன்னாலும் பின்னாடி ஒரு நல்ல வாழ்க்கையே அமையும்!'' ஒரு பெருமூச்சுடன் முடித்தவர், தனிமையில் கண்கலங்கி, உறக்கம் தொலைத்தார்.

மறுநாள் காலையிலேயே கிளம்பி இருவரும் ஊருக்குச் செல்ல, விடைபெறுவதற்கு முன்பு இருவருடைய ஆசீர்வாதத்தையும் பெற்ற கவிதா, ''உங்களால மனசார என்னை வாழ்த்த முடியாதுன்னு தெரியும்... தர்மசங்கடமான.. ஒரு இக்கட்டான சூழ்நிலையில நான் மாட்டிட்டிருக்கேன்... எதையுமே கேட்க முடியாத ஒரு நிலைமை! ஆனா, நான் நல்லாருக்கணும்னு நீங்க என்னை ஆசீர்வாதம் பண்ணணும்..'' மெல்லிய குரலில் யாசகம் செய்வதைப் போல் கேட்டாள்.

தன் மனக் குமுறலை தனக்குள்ளேயே அடக்கிக் கொண்ட மங்களம், பேசாமலிருக்க, தன் கையை அவளுடைய உச்சியில் வைத்து வாழ்த்தி அனுப்பி வைத்தார் அருணாசலம்.

பிறகு இருவரும் கிளம்பி ஊருக்குச் சென்றபோது, ராஜேந்திரனும், பங்கஜமும் அவர்களை ஆர்வத்துடன் வரவேற்றனர்.

மகளின் உடலில் தெரிந்த மாற்றத்தை அறிந்து கொண்ட பங்கஜம், ''கவி... ஏதாவது விசேஷமா? முகமே வாட்டமா

இருக்கு.. இளைச்சிப் போயிருக்கே?'' ஆர்வத்துடன் வினவினார்.

''ஆமாம்மா...'' கூறிவிட்டு அவள் மௌனமாகத் தலைகுனிய, அதை வெட்கம் என்று நினைத்தவர், கணவரிடம் ஓடிச் சென்று விவரத்தைக் கூறினாள்.

அவரும் மகிழ்ச்சியுடன் கோவிலுக்குக் கிளம்ப, பிறகு கிடைத்த தனிமையில், தான் அவளுக்கு எந்த நேரத்திலும் மணவிலக்கு அளிக்கத் தயாராக இருப்பதாகவும், இருவருக்கும் எந்த விதத்திலும் ஒத்துப் போகாததால் இந்தப் பிரிவு அவசியமாகிறது என்றும், எழுதி ஸ்டாம்ப் ஒட்டிய அந்த விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்திட்டு அவளிடம் அளித்தான் சதானந்த்.

கண்ணீருடன் அதைப் பெற்றுக் கொண்டவள், ''இந்த ஜென்மம் மட்டுமில்லை.. இன்னும் பல ஜென்மத்துக்கு நான் உங்களுக்கு கடன் பட்டிருக்கேன்... என்னோட நன்றிய நான் எப்படி செலுத்தப் போறேன்.. எனக்கே தெரியலை..'' குற்றவுணர்வுடன் கூறினாள்.

''பரவாயில்லை.., பிறக்கப் போறது ஆண் குழந்தையா இருந்தா, என் பெயரை அதுக்கு வச்சிடு!'' சிறு விரக்தியுடன் வந்தது சதாவின் குரல்!

அன்றிரவே அவன் விடைபெற்றுக் கிளம்ப, ராஜேந்திர னுக்கு அவளுடைய நடவடிக்கையில் எந்த சந்தேகமும் வரவில்லை.

மறுநாள் மாலையே அவள் மூர்த்தியைப் பார்க்கச் சென்றபோது, அவன் அவளை நம்பாததும், அவன் கூறிய வார்த்தைகளும் அவளை ஒடித்துப் போட்டன. இப்படி ஒரு



திருப்பம் தன் வாழ்வில் வருமென்று அவள் கனவிலும் கூட நினைக்கவில்லை.

சிந்துவைப் பார்க்கச் செல்வதாகக் கூறிவிட்டு அவள் மூர்த்தி வேலை செய்த ட்ராவல் ஏஜென்சிக்கு சென்றபோது, அவளைக் கண்ட மூர்த்தி பெரும் அதிர்ச்சியடைந்தான்.

''இங்கே ஏன் வந்தே? அதான் கல்யாணம் பண்ணிக்கிட்டு எவனோடவோ ஊரை விட்டே போயிட்டியே.. முன்னாள் காதலன் எப்படி இருக்கான்னு ஒப்புக்குப் பாத்துட்டுப் போகலாம்னு வந்தியா?''

படபடவென்று வார்த்தைகளால் முள்ளாய் கீறி அவளைக் காயப்படுத்தினான்.

''மூர்த்தி.. என்ன பேசறீங்க? உங்க நினைவையே மனசுல சுமந்துக்கிட்டு, எங்கப்பாவை எதிர்த்துப் பேச முடியாம போலியான ஒரு திருமண பந்தத்துல மாட்டினாலும், அவர்கிட்டே எல்லா உண்மையையும் சொல்லி புரிய வச்சி, உங்க குழந்தையையும் வயித்துல சுமந்துட்டு நிக்கறேன்.. என்னைப் போய்.. சே.''

தரையில் சரிந்து அமர்ந்து அழ ஆரம்பித்தாள் கவிதா.

''இந்த நடிப்பெல்லாம் இங்கே வேணாம்! அவனோட ஜாலியா வாழ்ந்துட்டு, இப்ப நீ என்னைக் காதலிச்ச உண்மை தெரிஞ்சவுடனே அவன் கழட்டி விட்டப்புறம், இங்கே வந்து டிராமா போடறியா?''

கூரிய அம்பாய் தைத்தன, அவனுடைய சொற்கள்! மனதில் சதானந்தின் உருவம் விசுவரூபமாய் எழுந்தது.

''இப்ப என்னதான் சொல்றீங்க? நான் தப்பானவன்னா...? ஹூம்... இத்தனை நாள் பழகியும் நீங்க என்னைப்



புரிஞ்சிக்கலை.. ஆனா, அவர் என் மனசைப் புரிஞ்சிக்கிட்டு உங்களோட என்னை சேர்த்து வைக்க எல்லா ஏற்பாடும் செஞ்சிட்டுப் போயிருக்காரு... இப்ப புரியுது..!''

''என்ன புரியுது..? இவனை விட அவன் வசதியான வன்னா..? அவன் கூட இருக்கிறதுதான் நல்லதுன்னா..?'' வக்ரமாகக் கேட்டான் மூர்த்தி.

''சே.. உன்னைப் போய் ஒரு காலத்துல காதலிச்சேன் பாரு.. என் புத்திய... எங்கப்பா சொன்னது உண்மைதான்! வைரத்துக் கும், கண்ணாடிக் கல்லுக்கும் எனக்குத்தான் வித்தியாசம் தெரியலை. ஏமாந்திட்டேன்..''

தலையிலடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள் கவிதா.

''போதும்.. இங்க வந்து சீன் போடாதே! எனக்கும் கல்யாணம் முடிவாகியிருக்கு. பொண்ணு பெரிய இடம்! நீயும் என்னை மாதிரி நடந்த விஷயத்தை எல்லாம் மறந்துட்டு அவனோட போய் குடித்தனம் பண்ணு.. போ!''

அவன் வார்த்தைகள் பெரும் சவுக்கடியாய்! காற்றுப் புகாத இடத்தில் அடைபட்டு மூச்சுக் காற்று தவிப்பது போல் ஒரு உணர்வு எழ, தவிப்புடன் நிமிர்ந்தாள் கவிதா!

இனி இவனிடம் பேசிப் பயனில்லை என்பது புரிந்துவிட, கையில் கிடைத்த சொர்க்கத்தைத் தான் தவற விட்டதும் புரிந்து, மனம் முழுவதும் தீயாய் தகிக்க, ஒரு முடிவுடன் எழுந்தாள்.

''சீ.. அற்பப் பதரே.. நீயெல்லாம் ஒரு மனிதனா?'' என்பது போன்ற பார்வையை அவனிடம் வீசியவள், வேகமாகத் திரும்பி வெளியில் வந்தாள்.



வெளியில் வந்தவுடனே, எதிர்காலமே கண் முன் இருட்டாய் விரிய பக்கத்திலிருந்த எஸ்.டி.டி. பூத்திற்குள் நுழைந்து சதானந்திற்கு டயல் செய்தாள்.

அவள் குரலைக் கேட்டதும், ''என்ன கவிதா.. மூர்த்தியப் பார்த்தாச்சா...? என்ன சொன்னாரு..? இப்ப சந்தோஷம் தானே..?'' ஆவலுடன் கேட்டான் அவன்.

''இல்லைங்க..'' என்று கூறிவிட்டு விசும்பி அழ ஆரம்பித்தவளை சமாதானப்படுத்தியவன் பதறிப் போனான்.

''ஏன் கவிதா.. என்னாச்சு?''

''அவர் என்னை நம்பலை.. நம்பளைப் பத்தி தப்பா பேசறாரு... இது அவர் குழந்தை இல்லியாம்..'' விம்ம ஆரம்பித்தாள்.

''கவிதா! நான் இன்னிக்கே கிளம்பி வரேன்... அவர்கிட்டே நான் பேசறேன்.''

''இல்லை.. வேண்டாங்க!'' என்றபடி தானும் அவனும் பேசியதை விபரமாகக் கூறியவள், ''நீங்க வந்து ப்ரயோஜன மில்லை.. இனிமே அவனை நானே ஏத்துக்கறதா இல்லை.. இப்படி ஒரு துணை எனக்குத் தேவையில்லை..'' என்றவள் உடனே போனை வைத்துவிட்டாள்.

உடனே கிளம்பி பதட்டத்துடன் வீட்டிற்கு வந்த சதா அவசரமாக அவளுடைய ஊருக்குக் கிளம்பினான்.

அவனுக்குப் போன் செய்து வைத்தவள், உடனே தன் தந்தையை அழைத்துப் பேசினாள்.

''அப்பா! நான் ஏமாந்துட்டேன். என் வயித்துல இருக்கிற குழந்தை தன்னுடையது இல்லைன்னு இவர் சொல்றாரு..

என்னை சந்தேகப்படறாரு.. உங்க பேச்சைக் கேக்காமப் போனது என் தப்புதான்.. அதுக்குத் தான் இப்படி அனுபவிக்கிறேன் போலிருக்கு.. இனிமே நான் உயிர் வாழறதிலே எந்த அர்த்தமும் இல்லை.."

அவளுடைய விசும்பல்கள் விபரீதத்தை உணர்த்த, "நீ இப்ப எங்கடா இருக்கே.. நான் உடனே வரேன்.." என்றவரின் லைன் கட்டாகி, உடனே தொடர்பு அறுந்து போனது.

உடனே வேகமாகத் தன் மனைவியிடம் ஓடியவர், "கவி எங்கே போனதா சொன்னா.. நீ கூடப் போயிருக்க வேண்டியதுதானே..?" என்றார் ஆவேசமாக.

"அவ ஃப்ரெண்ட் சிந்து வீட்டுக்குப் போறதா காரிலதான் கிளம்பிப் போனா.. என்னங்க ஆச்சு?" பதட்டத்துடன் எழுந்தார் அவர்.

"அடிப்பாவி! நாம ஏமாந்துட்டோம்" என்றபடி வெளியில் சென்று தன் காரை எடுத்துக் கொண்டு விரைந்தார்.

அங்கு எஸ்டிடி பூத்திலிருந்து வெளியில் வந்த கவிதா டிரைவரிடம், தான் பிறகு வருவதாகவும், வீட்டிற்குச் செல்லும்படியும் கூறிவிட்டு, திக்குத் தெரியாத காட்டில் திசை புரியாமல் அலையும் பறவையைப் போல், அலைபாயும் மனதுடன், திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

டிரைவர் செல்லக்கண்ணு காரில் ஏறிக் கிளம்பும் போதுதான் அவள் சாலையின் குறுக்கே செல்வதும், எதிரில் வேகமாக வந்த காரைக் கண்டும் அஞ்சாமல் முன்னேறுவதையும் கண்டார்.

வேகமாக இறங்கி 'அம்மா.." என்று அவர் பதட்டத்துடன் ஓடுவதற்குள் தூக்கி எறியப்பட்டாள் கவிதா.



அந்த நிமிடமே, அவளுடைய கனவுகளுடன் சேர்ந்து, கருவும் சிதைந்தது.



7

"அம்மா..." வென்று அலறியபடி தரையில் விழுந்தவளின் தலையில் அடிபட்டு ரத்தம் பெருக்கெடுக்க, உடனே கூட்டம் கூடியது.

அவசரமாக அவளைத் தங்கள் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு பதட்டத்துடன் மருத்துவமனைக்குச் சென்றார் செல்லக்கண்ணு!

பெரும் ரத்தப் போக்கும், தலையில் பட்ட பலத்த அடியும் கவிதாவை நினைவிழக்கச் செய்திருந்தன.

அந்த ஊரில் ராஜேந்திரன் பெரிய புள்ளி என்பதால், அவர் பெயரைக் கூறியதும், உடனே அவளை அனுமதித்து சிகிச்சை அளிக்க ஆரம்பித்தனர்.

உடனே, தன் முதலாளிக்கு செல்லக் கண்ணு போன் செய்து விபரம் தெரிவித்தபோது, அவர் வீட்டில் இல்லை.

விஷயம் கேட்டதும் மயங்கி விழுந்த பங்கஜத்தை தெளிய வைத்து, ஒரு ஆட்டோவில் அழைத்து வந்தார் சமையல்காரப் பெண்மணி!

நேரே சிந்துவின் வீட்டிற்குச் சென்ற ராஜேந்திரன், அந்தத் தெருவில் நடந்த விபரத்தைப் பற்றி விசாரிக்கும் போதே செல்லில் தகவல் கிடைக்க, உடனே மருத்துவமனைக்கு விரைந்து வந்தார் அவர்.

மனம் முழுவதும் உலைக்களமாய் எரிய, கவிதாவின் வார்த்தைகள் அவரைப் பெரிதும் தாக்கி இருந்தன.





அவள் கூறியது மூர்த்தியைப் பற்றித்தான் என்ற உண்மை அறியாமல், சதானந்த் தான் தன் பெண்ணை நம்ப மறுத்து, அவளுடைய முன்னாள் காதலனைப் பற்றி அறிந்ததும் சந்தேகப்பட்டு, கவிதாவை இந்த நிலைக்குத் தள்ளி விட்டு விட்டதாக தப்புக் கணக்குப் போட்டது அவர் மனம்!

அவர் தலையில் அறைந்து அழுதபடி, மனைவியிடம் எல்லா உண்மைகளையும் கூறியபோது, உறைந்து போய் நின்று விட்டார் பங்கஜம்!

தேற்ற யாருமின்றி இருவரும் அழுதபோதுதான், வேரிழந்த மரம் போல் தரையில் சரிந்தார் ராஜேந்திரன்.

உடனே, அவரையும் ஐசியூவில் அனுமதித்துவிட பங்கஜம் பெரிதும் கலங்கிப் போனார்.

மறுநாள், அதிகாலையிலேயே ராஜேந்திரன் இறந்துவிட, எல்லாப் பிரச்சனைகளையும் சரி செய்து கவிதாவை ஏற்றுக் கொள்ளலாம் என்று வந்த சதாவை ராஜேந்திரன் உயிரற்ற உடல்தான் வரவேற்றது.

அவனைக் கண்டதும் ஆவேசத்துடன் எழுந்த பங்கஜம், "எங்கே வந்தே..? என் புருஷனைக் கொன்னுட்டு! என் பொண்ணையும் தன் உணர்வில்லாத சவம் மாதிரி ஆக்கிட்டியே! இன்னும் என்ன மிச்சமிருக்கு.. மீதமிருக்கிற என்னையும் சாகடிக்க வந்தியா?" நெஞ்சிலறைந்து கொண்டு அழுதார்.

இந்த நிமிடம், தான் என்ன பேசினாலும் தவறாகத்தான் போகும் என்பதைப் புரிந்து கொண்டவன், மௌனமாக வெளியிலேயே சிறிது நேரம் நின்று விட்டு மருத்துவ மனைக்குச் சென்றான்.



ஐசியூவில் அனுமதிக்கப்பட்டிருந்த கவிதாவைப் பார்க்க அனுமதி கிடைக்காததால் சீஃப் டாக்டரிடம் பேசியபோது, அவர் கூறிய விஷயம் அவனைப் பெரிதும் கலங்கச் செய்தது.

வயிற்றிலிருந்த குழந்தையும் கலைந்து, தலையிலும் அடிபட்டதால் அவள் தன் சுயநினைவை இழந்திருப்பதும், மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதையும் கூறியபோது தனக்கு மட்டும் ஏனிந்தக் கஷ்டம் என்று அவன் மனம் இறுகிப் போனது.

பிறகு ராஜேந்திரனின் இறுதிச் சடங்குகள் முடிந்ததும், பங்கஜத்திடம் பேச முனைந்தபோது, அவர் ரௌத்ரமாய் கத்த ஆரம்பித்தார்.

"இவனைப் போகச் சொல்லுங்க.. என் பொண்ணை சந்தேகப்பட்டு, அவ வயித்தில இருந்த தன் குழந்தையை இல்லைன்னு சொல்லி, அவளைத் தற்கொலைக்குத் தூண்டின பாவி இவன்!

"அவளுக்கு விவாகரத்து தாதுக்குத் தயார்னு எழுதிக் குடுத்திருக்கான்.. ரெண்டு பேரை சாகடிச்சிட்டான்.. அவரோட உயிரை.. என் பொண்ணோட உணர்வுகளை..! என் கண்ணு முன்னாடி வராதே.. போ!"

"அத்தை.. நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க.." அவன் பேச ஆரம்பிக்கும் முன்பே, அருகிலிருந்த உறவினர் ஒருவரால், வெளியில் தள்ளப் பட்டான்.

உடனே கிளம்பி மூர்த்தியின் கடையை விசாரித்து அங்கு சென்றபோது, வாசலில் தொங்கிய பெரிய பூட்டுதான் அவனை வரவேற்றது.

ட்ராவல் ஏஜென்சி நடத்தி பலரை வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கூறி பல லட்சம் ஏமாற்றியதால், அவனை அன்று மதியம்தான் போலீஸ் கைது செய்து சிறையில் அடைத்திருப்பதாகத் தெரிய வந்தது.

பிறகும், பதினைந்து நாட்கள் கழித்து அவன் சென்றபோது, கவிதா, மனநிலை சரியில்லாமல் மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்பட்டிருக்க, பங்கஜம் ஸ்ட்ரோக் வந்து மருத்துவமனையில் இருந்தாள்.

அப்போதும் அவரைப் பார்த்து உண்மையை விளக்கச் சென்றபோது அவரோ அவனைப் பார்க்கவே மறுத்து விட்டார்.

டிரைவர் செல்லக் கண்ணுதான், கவிதா இறந்த அன்று அங்கு நடந்த விஷயங்களைப் பற்றி வருத்தத்துடன் கூறினார்.

மனம் உடைந்து திரும்பியவனுக்கு, வெளிநாட்டில் முன்பு விண்ணப்பித்திருந்த வேலை கிடைத்துவிட, ஒரு மனமாற்றத்திற்காகவே உடனே கிளம்பி கனடாவிற்குச் சென்று வேலையில் சேர்ந்து விட்டான் சதானந்த்!

சபர்மதிக்கு எல்லாவற்றையும் கூற வேண்டாமென்று தந்தையிடம் கூறிவிட்டுக் கிளம்பியவன், பழைய நாட்களை மறந்து கனடாவில் வேலை செய்தபோதுதான், உடன் வேலை செய்கின்ற சாரா என்ற ஆங்கிலேயப் பெண் அவனை விரும்புவதாகக் கூறினாள்.

தன்னுடைய முன் கதையை அவளிடம் கூறியபோது, பரிதாபப்பட்டு அவனை இன்னும் அதிகமாக நேசிக்க ஆரம்பித்தாள். அவனை மெதுவாகக் கரைத்து ஒரு வருடத்தில் திருமணமும் செய்து கொண்டாள்.

வாழ்க்கை இலகுவாகச் சென்றபோதுதான் சபர்மதியின் திருமணமும் வந்தது.



அவனுக்கு நேர்ந்த சிறு விபத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததால், அவனால் இந்தியாவிற்கு செல்ல முடியவில்லை.

மூன்று மாதங்கள் கழித்து தன் தங்கைக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி அறிந்தவன், உடனே தாயகம் திரும்பினான்.

சாராவிற்குத் திடீரென்று விடுமுறை கிடைக்காதென்பதாலும், அவள் ஏழு மாதம் கர்ப்பமாக இருந்ததாலும், அவளை அழைத்து வரவில்லை.

நடந்த எல்லாவற்றையும் கூறி சரணை மாற்றி தன் தங்கையுடன் இணைய வைக்க அவன் செய்த முயற்சிகள் அனைத்தும் பயனின்றிப் போயின.

அவன் கூறிய எதையுமே நம்ப மறுத்த சரண், சதானந்தனின் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளி விட்டான்.

பங்கஜத்தையும், அவனால் பார்க்க முடியவில்லை. மூர்த்தியும் சிறையிலிருந்து வந்ததாகத் தெரியவில்லை.

தான் வந்த காரியம் முடியாமலே கனடாவிற்குத் திரும்பினான் சதானந்தன்.

இன்று வந்த போன் கால் பழைய நினைவுகளைக் கிளறி விட, தன் தங்கையின் வாழ்க்கையை எண்ணித் தவித்து நின்றவனை அழைத்தது மகன் விஜயின் குரல்! நினைவுத் தேரோட்டம் வீதியுலா முடிந்து நிலைக்கு வந்தது!

இந்த விடுமுறைக்கு கட்டாயம் ஊருக்குச் செல்ல வேண்டுமென்ற முடிவுடன் மகனுடன் சென்று விளையாட ஆரம்பித்தான் அவன்.

★ ★ ★



மறுநாள் காலையில் பள்ளிக்குக் கிளம்பிய சபர்மதியை அழைத்த அருணாசலம், "சமதி! உனக்கு சரணால சின்னப் பிரச்சனை வந்தாக் கூட, உடனே நீ ரிசைன் பண்ணிடுமா! எதுக்கும் கவலைப்படாதே!" என்றார் தேறுதலாக.

"இல்லப்பா! அப்படி ஏதும் நடக்காது... நான் பாத்துக்கறேன்!" என்றபடி கிளம்பினாள் அவள்.

பள்ளிக்குச் செல்லும் போதே, அவனுக்கு இந்த மூன்று வருடங்களில் மறுமணம் நடந்திருக்குமோ வென்ற யோசனையும் வந்தது.

தீப்பற்றி எரிகிறார் போன்று அவன் வார்த்தைகளால் தீக்குளித்து அவனைப் பிரிந்தாகி விட்டது... இப்போது அவனைப் பற்றிய நினைவுகள் மனதில் வராமல் தடுப்பதே தனக்கு நல்லதென்பதை மனதிற்குள் உருப்போட்டபடி சென்றாள் அவள்.

ஒரு வாரம் வரை எந்த பிரச்னையும் இன்றிச் செல்ல, தன் தற்காப்பு வளையங்களை அவள் தளர்த்தியிருந்தபோதுதான் ஒருநாள் அவளை அழைத்தான் அவன்.

பள்ளி முடிந்து, செல்கையில் ப்யூன் வந்து அவளை கரஸ்பாண்டன்ட் அழைப்பதாகக் கூறவும், யோசனையுடன் அவனுடைய அறைக்குச் சென்றாள் அவள்.

அவள் உள்ளே நுழைந்தவுடன், பார்த்துக் கொண்டிருந்த ஃபைலில் இருந்து நிமிர்ந்தவனின் பார்வை, தலை முதல் பாதம் வரை கூர்மையுடன் அவளை வருடியது.

பிறகு சபர்மதியை உட்காரும்படி சைகை செய்தவன், மெதுவாக எழுந்து ஜன்னலருகே சென்று வெளியே பார்க்கத் தொடங்கினான்.



இரு புருவங்களும் பெரும் யோசனையில் நெரிந்திருக்க, திடீரென்று திரும்பியவன் வேகமாக அவளருகில் வந்தான்.

"உன்னோட ட்ராமா.. அதான், நான் வந்த அன்னிக்கு மயங்கி விழுந்த மாதிரி நடிச்சியே.. ரொம்ப நல்லா ஒர்க் அவுட் ஆகும்னு நினைச்சிருந்தேன்னா அது ரொம்பத் தப்பு!" ஏகத்தாளமாகக் கூறினான்.

விதிர்த்துப் போய் எழுந்தவள், "நான் மயங்கி விழுந்தது உண்மை! ஆனா, உண்மை எது பொய் எதுன்னு தெரியாம நாங்க சொல்ற எதையுமே நம்ப மறுக்கற உங்ககிட்டே அதச் சொல்றது வேஸ்ட்! அதனால நான் கிளம்பறேன்... வேற ஏதாவது வேலை இருக்கா சார்?" போலிப் பணிவுடன் கேட்டாள்.

உடனே முகம் கடினமாகி விட நிமிர்ந்தவன், "ஆமாம்! உங்க குடும்பம்தான் எவ்வளவு உண்மையானதுன்னு எனக்குத் தெரியுமே..! உங்க அண்ணன் ஒருத்தன் போதுமே.. அதை நிரூபிக்கிறதுக்கு!" கடித்த பற்களிடையே சீறினான்.

உடனே கோபமாக எழுந்தவள், "எங்க அண்ணனைப் பத்திப் பேச உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை!" என்றாள் அதே குரலில்!

"ஏன் இல்லை.. என் தங்கையோட வாழ்க்கையை அழிச்சவன் அவன்! நான் பேசுவேன்!"

"ஹூம்.. தப்பே செய்யாத அவரோட தங்கையோட வாழ்க்கையை பதிலுக்கு அழிச்சிட்டு நிக்கிறவரோட பேச, எனக்கு விருப்பமில்லையே..!"

வேகமாய் திரும்பி நடந்தவளை கைப்பிடித்து இழுத்து நிறுத்தினான் அவன்!

"என் குழந்தை எப்படி இருக்கு...? ஒரு தகப்பனுக்கு அதப் பத்தி தெரிஞ்சிக்கிற உரிமை உண்டு. அது தெரியுமா உனக்கு?"

அவன் வார்த்தைகள் அவளுடைய கோபத்தை பொங்கி எழச் செய்தன.

தடதடக்கின்ற ரயிலோசையாய் இதயம் படபடக்க, மீன் கொத்திப் பறவையாய் அவன் தன் இதயத்தைக் கொத்துவது புரிந்தது.



# 8

சரண் கூறியதைக் கேட்டதும் படமெடுக்கும் நாகமாகத் திரும்பியவளுக்குள், பெரும் அதிர்வு!

"அது உங்க குழந்தையே இல்லைன்னு சொன்னீங்க.. இப்ப என்ன புதுசா உறவு முறை.. அப்பா தகப்பன்னு!.. சே!"

"உனக்கே தெரியும்.. நானும் உங்கண்ணன் மாதிரி பொய் தான் சொன்னேன்னு.." அவன் கண்கள் கோவ்வைப் பழமாய் சிவந்திருந்தன.

"இல்லை! எங்க அண்ணன் சொன்னது உண்மை!"

"பத்துத் தடவை அழுத்திச் சொன்னா பொய் உண்மையாகாது.. நான் என் குழந்தையைப் பத்திக் கேட்டேன்.." ஆழமான குரலில் கேட்டான்.

"இருந்தாத்தானே சொல்றதுக்கு..?" மனம் பதறினாலும் அவன் நோக வேண்டுமென்றே அவனைச் சீண்டினாள் அவள்.

"அப்படின்னா..?" இறுகிய குரலில் கேட்டவனிடம்,



"ஏன்.. இந்த ஒரு குழந்தை மேல இவ்வளவு அக்கறை? வேற குழந்தை பிறந்திருக்கணுமே... மூணு வருஷமாகுது!" நக்கலாகவே வந்தது அவள் குரலும்!

"பெண்கள் மேல நம்பிக்கை வராததாலே குழந்தை வரவும் வாய்ப்பில்லாம போயிடுச்சு!"

"அதே மாதிரிதான் இங்கேயும்! ஒருவேளை... தன் அப்பா மாதிரியே பிறந்து எந்தப் பெண்ணோட வாழ்க்கைய அழிச்சிடுமோங்கற பயத்துல நானே.." சட்டென்று உதட்டைக் கடித்து நிறுத்தினாள்.

"அழிச்சிட்டியா?" தவிப்புடன் வந்த வார்த்தைகளுக்காக ஒரு கணம் தன்னையும் மீறி வருத்தப்பட்டான், கழிவிரக்கத்துடன் கண்களை இறுக மூடி, அந்த நிமிடத்தை தனக்கு சாதகமாக்கி வெளியில் வந்தாள் அவள்.

மனம் வெகுவாய் கனத்துப் போயிருந்தது.

வாசலில் காத்திருந்து கூடவே கலகலப்புடன் நடந்து பேசியபடி வந்த பிருந்தாவின் பேச்சுக்கள் எதுவுமே, அவள் காதுகளில் விழவில்லை.

'சாரிடா செல்லம்.. நீ உயிரோட இருக்கும் போதே கருவிலே அழிச்சிட்டதா உங்கப்பா கிட்டே பொய் சொல்ற மாதிரி ஆயிடுச்சி.. என்னை மன்னிப்பியா?' தவிப்புடன் மௌனமாய் மறுகியது நெஞ்சம்.

மின்னல் கீற்றாய் ஒரு வலி நெஞ்சப் பரப்பில் ஓட தன்னையறியாமல் இறுகிப் போய் நின்று, மறுகணமே சமாளித்து நிமிர்ந்த உதய் சரணுக்கோ, அவள் நின்றிருந்த இடம் வெற்றிடமாய்!



முதன் முதலாய், அது தன்னுடைய குழந்தை.. அந்த சிசு அழிக்கப்பட்டு விட்டதே.. என்ற பரிதாபமும், தவிப்பும் அவன் மனதில் தைத்தன.

வீட்டிற்கு வந்தவுடன், எல்லாவற்றையும் தந்தையிடம் சொல்லிவிட வேண்டும் என்ற எண்ணத்தை உடனே மாற்றிக் கொண்டாள் சபர்மதி.

அவருக்கு இந்த வயதில் பெரும் மனக்கஷ்டம் என்பதுடன் விபரத்தைக் கூறினால், அவர் உடனே வேலையிலிருந்து தன்னை நின்று விடும்படி கூறிவிடுவாரே என்ற உணர்வு எதையும் சொல்ல விடாமல் தடுத்தன.

மனம் காட்டாற்று வெள்ளத்தின் போக்கில் எங்கெங்கோ சென்று பழைய நினைவுகளின் கரை உடைக்க, தன்னை அமைதிப்படுத்திக் கொள்ளவாவது, எங்காவது செல்ல வேண்டுமென்று தோன்றியது அவளுக்கு!

மங்களத்திடம் கூறிவிட்டு, முகம் கழுவிக் கோவிலுக்குக் கிளம்பியபோது, சிநேகாவும், உடன் வருவதாக அடம் பிடித்தாள்.

உடனே அவளுக்கும் உடை மாற்றி அழைத்துக் கொண்டு கிளம்பி கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் முடிந்து பிரகாரத்தில் அமர்ந்தபோது, மனதின் பாரம் வெகுவாகக் குறைய ஆரம்பித்திருந்தது.

அங்கு வந்திருந்த சிறு குழந்தைகளுடன், சேர்ந்து ஓடி விளையாட ஆரம்பித்திருந்த சிநேகாவை ரசித்துக் கொண்டிருந்தாள் அவள்.

அந்தச் சிறு பிள்ளைகளைப் பார்த்தால் ஆச்சர்யமாய்! இதுபோல் பார்த்தவுடனே மற்ற குழந்தைகளுடன் கலபமாய்



ஒட்டிக் கொள்ளும் இயல்பு, ஏன் பெரியவர்களுக்கு வருவதில்லை என்ற கேள்வி எழுந்து, மனம் ஆயாசமானது.

போன வாரம்தான் அவளுக்கு காய்ச்சல் குறைய ஆரம்பித்தது நினைவு வர "சிநேகா.. போதும்டா.. வீட்டுக்குப் போகலாமா? உடம்பு இப்பத்தானே சரியாக இருக்கு... இன்னொரு நாள் விளையாடலாம்... என்ன?" மிருதுவாகக் கேட்டாள்.

உடனே "சரிம்மா..!" என்ற குழந்தையைப் பார்த்தபோது, தங்களிருவருடைய குணமும் அவளிடம் கலந்து தெரிவது புரிந்தது.

பல சமயங்களில் எல்லாவற்றையும் எளிதாக ஏற்றுக் கொள்பவள், சில நேரங்களில் அடம் பிடித்தால் அவளை மாற்றவே முடியாது.

வெளியே வந்து அர்ச்சனைக் கூடையை கொடுத்து கவரில் மாற்றித் தரும்படிக் கேட்டுப் பணம் கொடுக்கும் போதுதான், பின்புறம் ஒரு காரின் 'கிறீச்' என்ற சடன் பிரேக் சப்தம் கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பினாள், மலங்க மலங்க விழித்தபடி கையில் சிறு புறாவுடன் சிநேகா சாலையின் நடுவே நின்றிருக்க, அவளை உரசியபடி அந்தக் கார் நின்றிருந்தது.

பதட்டத்தில் கையிலிருந்த கைப்பை கீழே நழுவி விழ ஓடிச் சென்று குழந்தையை தவிப்புடன் அணைத்தபடி தூக்கிக் கொண்டு எழுந்து, கார் ஓட்டியவளிடம் திரும்பினாள் சபர்மதி.

கண்களில் நீர்த்திரையுடன் நிமிர்ந்து, "தேங்க்ஸ்.." என்றவளுக்கு, கால்களின் அடியில் பூமி வேகமாக நழுவியது.

எதிரில், வியப்பும், ஆராய்ச்சியும், கூடவே சிறு தவிப்புமாய் உதய் சரண் நின்றிருந்தான்.

காரை ஓட்டி வரும்போதே சாலையின் குறுக்கே தாவித் தாவி வந்த புறாவைத் தொடர்ந்து வந்த அந்த சிறு குழந்தையைக் கவனித்தவன், பதறிப் போய் பிரேக் அடித்திருந்தான்.

இப்படி கவனமில்லாமல் குழந்தையை சாலையில் விடும் பொறுப்பில்லா அம்மாக்களை சபித்தபடி கடும் கோபத்துடன் இறங்கியவன், அங்கு சபர்மதியை சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

அந்த நிமிடம், அவளும் செய்வதறியாது திகைத்து நிற்க, சட்டென்று அந்த மௌன நிமிடங்களைக் கலைத்தது, சிநேகாவின் குரல்!

''அப்பா..! ஹை.. அம்மா. போட்டோ அப்பா வந்தாச்சு'' மழலைக் குரலில் உற்சாகமாக ஆர்ப்பரித்து கைகளைத் தட்டினாள்.

சட்டென்று அவனிடம் ஒருவித இறுக்கமும், விழிகளில் வியப்பு கலந்த ஆர்வமும் பளிச்சிட்டன.

வீட்டில் அவர்களுடைய கல்யாண போட்டோவைக் காட்டி இதுதான் உன் அப்பா என்று மங்களம் கூறி இருந்தது. இன்று வினையாகி விட்டது.

அழுத்தமான காலடியோசையுடன் அவளருகில் வந்தவன், ''பொய்தான்... இல்லையா?'' கூர்மையுடன் கேட்டுவிட்டு, என்னிடம் வருவாயா என்பது போல் கைகளை நீட்ட, உடனே அவனிடம் தாவியது குழந்தை!



''சிநேகா..'' அவள் முதன் முறையாக அதட்டவும், சட்டென்று அடங்கியவள். ''அம்மா.. ப்ளீஸ்..'' என்றபோது அவள் தன் பிடியைத் தளர்த்த வேண்டியதாகிப் போனது.

உடனே குதூகலத்துடன் தாவி சரணின் கழுத்தைக் கட்டிக் கொண்டவளின் முகத்தில் பெரும் பிரமிப்பு!

''அம்மா... அப்பா.. பெரிசு இல்லை..?'' மழலையில் அவள் கேள்வியாகக் கேட்க, அவனுடைய அசாத்திய உயரம் அந்தச் சிறு குழந்தைக்குள் பெரும் ஆச்சர்யத்தை உண்டு பண்ணியிருப்பது, அவனுக்குப் புரிந்தது.

'கூடவே உன் அப்பாவிற்கு மனசு ரொம்பச் சின்னதுடா... உனக்கும் எனக்கும் இடம் குடுக்க முடியாத அளவுக்குச் சின்னது..'' என்று கூற வேண்டும் போல்!

அந்த நிமிடம் சிநேகாவையே ஆழ்ந்து ஊடுருவிய சரணுக்குள் பெரும் வியப்பு!

தன் சிறு வயது புகைப்படத்தை நேரில் பார்ப்பது போல், குளோனிங் முறையில் உருவாக்கியவளைப் போல் சிநேகா அவனுடைய மறுபதிப்பாய்!

''அப்பா..'' என்றபடி 'பச்'சென்று செல்லமாக அவன் முத்தமிட்டபோது, இந்த ஒரு செய்கைக்காகவே உலகத்தில் எதை வேண்டுமானாலும் இழக்கலாமென்று தோன்றி விட, அந்த அன்பில் ஊஞ்சல் கட்டி ஆடியது மனம்.

உடனே காரணமின்றித் தன்னிடம் பொய்யுரைத்த சமதியின் மேல் கோபம் கரைபுரண்டு வந்தது.

சீற்றத்துடன் குனிந்தவன், ''நீ.. பொய்...தானே...'' என்று கூறிவிட்டு சட்டென்று தன்னை அடக்கி மகளிடம் திரும்பினான்.



''அப்பா வந்துட்டேம்மா... உனக்கு என்னவெல்லாம் வேணும்னு கேளு.. வாங்கித் தரேன்'' கொஞ்சலாகக் கேட்டான்.

''ம்... அம்மா ஐஸ்க்ரீம் வாங்கித்தர மாட்டேன்றாங்கப்பா..'' சலுகையாகச் சிணுங்கினாள் அவள்.

''சிநேகா.. உனக்கு ஃபீவர் வந்து இப்பதான் சரியாயிருக்கு... அம்மா சொன்னா கேக்கணும்'' அவனிடம் வந்த கோபம், இயலாமையுடன் சிறு குழந்தையிடம் திரும்பியது.

''ஓ.. உனக்கு உடம்பு சரியில்லையா? அப்பா உனக்கு இன்னொரு நாள் ஐஸ்கிரீம் வாங்கித் தரேன்.. சரியா?''

''ம்.. ப்ராமிஸ்!''

செல்லமாக அவள் கன்னத்தில் தன் உதடுகளைப் பதித்தவன், கண்ணோரங்கள் குறும்புடன் இடுங்க ''ப்ராமிஸ்..'' என்றான் மென்மையான குரலில்!

இவனை ஏன் பார்த்தோம் என்ற தவிப்பும், சிநேகா அவனிடம் உடனே ஒட்டிக் கொண்டதைக் கண்ட கோபமும் சேர்ந்து, சமதியை நிலைகுலையச் செய்திருந்தன. அவனுடைய புறக்கணிப்பு, நெஞ்சக் குழிக்குள் நெருப்பாய் தேங்கியிருந்தது.

''சிநேகா.. முதல்ல கீழே இறங்கு. நாம கிளம்பலாம்..'' கண்டிப்பான குரலில் அவள் கூற ''அம்மா.. ப்ளீஸ்.. அப்பாவோட காரிலே போகலாமா?'' ஆர்வத்துடன் கேட்டாள் குழந்தை.

அவமானத்திலும், கோபத்திலும் முகம் கன்றி சிவந்துவிட, ''நாம ஆட்டோவில போகலாம்டா... வீட்டுக்குப் போனவுடன்,



தாத்தாவோட ரவுண்ட் போகலாம்... என்ன?'' பொறுமையை வரவழைத்தபடி கூறினாள்.

''ஊஹூம்...! நான் அப்பாவோடதான் போவேன்..''

திக்கென்று நிமிர்ந்தவளுக்குள் பெரும் கோபம் மையம் கொள்ள கோபத்துடன் குழந்தையைப் பார்த்து அவள் முறைத்தபோது, திடீரென்று சரணின் குரல் அழுத்தமாக இடைமறித்தது.

''ஏன் இவ்வளவு கோபம்..? அவ என் குழந்தையும்தான். அதை மறந்திட வேண்டாம். எனக்கு உரிமை இருக்கு.. நீ வரதா இருந்தா வா... இல்லைன்னாலும் நான் அவளை ஒரு ரவுண்டு அழைச்சிட்டுப் போகத்தான் போறேன்'' உறுதியாகச் சொன்னான்.

''இது தன் குழந்தை இல்லைன்னு சொல்வேன்னு ஒரு காலத்துல அவங்கப்பா.. இல்லை.. யாரோ சொன்ன ஞாபகம்... என்னால மனசிலபட்ட காயங்களை மறக்க முடியாது'' அடிக்குரலில் சீறினாள்.

''என்னாலயும்தான்.. உங்கண்ணன் செஞ்ச கொடுமையையும், அதனால பாதிக்கப்பட்டிருக்கிற கவிதாவையும் மறக்க முடியலைதான்.. ஆனா, இவ என் வாரிசு. அதை யாராலும் மறுக்க முடியாது.''

ஆழமான குரலில் அவன் கூற, சிணுங்க ஆரம்பித்தாள் சிநேகா.



## 9

உடனே அவளைச் சமாதானப்படுத்தியவன், வேகமாகத் திரும்பிச் சென்று காரில் ஏறிவிட, அதைத் தடுக்கவும் முடியாமல், என்ன செய்வதென்று அறியாமல் மலைத்து நின்றிருந்தாள் சபர்மதி.

அடுத்து வந்த ஐந்து நிமிடங்களும் அவளைத் தவிப்பில் ஆழ்த்த, தன் மகளை அவன் எங்காவது கடத்திச் சென்று விடுவானோ என்ற பயம் கூட வர ஆரம்பித்தது.

ஆனால் தன் உறவே வேண்டாமென்று விலகியவன், அப்படிச் செய்ய மாட்டான் என்ற நிம்மதியுடன் நிமிர்ந்த போது, அவனுடைய கார் அவளருகில் வந்து நின்றது.

சிநேகாவைத் தூக்கியபடி மெதுவாக இறங்கியவன், அவளிடம் குழந்தையைக் கொடுத்தபோது அவனுடைய விரல்கள் தன் மீது படாமல் ஜாக்கிரதையாக அவளை வாங்கிக் கொண்டாள் சபர்மதி.

அவள் கையிலிருந்த விலையுயர்ந்த பொம்மையைப் பார்த்தபோது, இதைப் போன்ற பொருட்களைக் காட்டியே தன் மகளை அவன் தன் வசம் ஈர்த்து விடுவானோ என்ற பயம், மெல்ல அவளுக்குள் எட்டிப் பார்த்தது.

சட்டென்று திரும்பி அவள் நடக்க ஆரம்பித்தபோது, "அப்பா.. பை..!" கையாட்டியபடி வந்த குழந்தையை ஏனோ அவளால் தடுக்க முடியவில்லை.

அருகிலிருந்த ஒரு ஆட்டோவைப் பிடித்து வீடு வந்து சேர்ந்த போது, மனம் படபடக்க ஆரம்பித்திருந்தது.



பொம்மையுடன் உள்ளே ஓடியவள், "தாத்தா.. பாட்டி.. நான் அப்பாவ பார்த்தேன்" பரவசத்துடன் கூறியபடி - பொம்மையைக் காண்பிக்க பதறிப் போய் நிமிர்ந்தார், அருணாசலம்.

கண்களாலேயே அவர் கேள்வி யெழுப்ப 'ஆமாம்' என்பது போலத் தலையசைத்தாள் சமதி.

ஓய்ந்து, சோர்ந்து தெரிந்த தன் மகளையும், உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் சிறகடித்த அவளின் மகளையும் பார்த்தபோது, அவருக்குள் பெரும் யோசனை வந்தது.

"முருகா.. என் குழந்தையை அமைதியாகவே வாழ விடமாட்டாயா..?" என்று இறைஞ்சியது மனம்!

"தாத்தா.. அப்பா கார்.. இவ்ளோ பெரிசு.." தன் இரு கைகளையும் பிரித்து, கண்கள் பளபளக்க மழலையில் ஆர்ப்பரித்தாள் சிநேகா.

"அப்படியா.. சரி! நாளைக்கு நாமும் அதே மாதிரி வாங்கி அதிலே போகலாம்... இன்னிக்கு நைட் விஜய் கூடப் பேசுவோமா?" அவளுடைய மன நிலையை மாற்ற முயன்றார் அவர்.

விஜய் என்றால் அவளுக்கு கொள்ளைப் பிரியம்! வெப் கேமிராவில் அங்கிருந்து அவன் பேச, வாரம் ஒரு முறையாவது அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி பேசிக் கொள்வார்கள்.

உடனே சமாதானமாகி, "ம்.. ஓகே!" என்றபடி அவருடைய கழுத்தை அவள் கட்டிக் கொண்டாலும், அவளிடம் சரணின் ஞாபகம் அழுத்தமாகப் பதிந்திருந்தது புரிந்தது.



தன் வீட்டிற்குச் சென்ற சரணுக்கும் அதே நிலைதான்!

முதன் முதலாக, வெகு நாட்களுக்குப் பின், பாசம் என்ற சொல் அவனுக்குள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க, மனதில் ஈரம் கசிய ஆரம்பித்திருந்தது.

சிநேகாவைக் கண்ட மறுநிமிடமே, இவள் என் உயிர்.. என்னிலிருந்து ஜனித்தவள் என்ற உரிமை உணர்வும், பாசமும் கைகோர்த்துப் பொங்கி எழுந்ததை ஏனோ அவனால் தடுக்க முடியவில்லை.

அன்றிரவு, வெகு நேரம் அவன் உறக்கம் தொலைத்து விழித்திருக்க, மனம் முழுவதும் காற்றடைத்த பந்தாய்.. சிநேகாவின் நினைவு!

சிநேகாவும் அன்று ஆழ்ந்த உறக்கத்தில் "அப்பா.. அப்பா.." என்று அரற்ற ஆரம்பிக்க, தவித்துப் போனாள் சபர்மதி!

இன்று ஏன் கோவிலுக்குச் சென்றோம்... ஏன் அவனைப் பார்த்தோம் என்ற கேள்வி நெருடலாய்!

மறுநாள் காலையில் அவள் பள்ளிக்குச் சென்றவுடனே, அவனிடமிருந்து அழைப்பு வந்தது.

சினத்துடன் அவனைப் பார்க்கச் சென்றபோது, சிங்கத்தின் குகைக்குள் தனித்துச் செல்வதைப் போன்ற ஒருவிதமான எச்சரிக்கை உணர்வுடனே உள்ளே போனாள் அவள்.

அவளைக் கண்டதும் இடுங்கிய கண்களுடன் கூர்மையாக அவள் முகத்தையே ஊடுருவியவன், மெதுவாக எழுந்தான்.

"எனக்கு சிநேகாவை வாரம் ஒரு தடவையாவது பாக்கணும்! முன்னே மாதிரி இல்லை.. இப்ப என்



வாழ்க்கையில அவளும் ஒரு பிரிக்க முடியாத பார்ட் ஆயிட்டா.. உனக்கு இருக்கிற அளவு உரிமை எனக்கும் இருக்கு.. அது உனக்குத் தெரியும்! யோசிச்சி உன் முடிவைக் கூறு! சண்டே எனக்கு வசதி.. உனக்கு எப்படிங்கறதை நீதான் சொல்லணும்.."

எங்கோ பார்த்தபடி கேட்டவனையே உறுத்த அவள் விழிகளில், தீயின் ஜ்வாலைகள்!

"முடியாது! அவளை நான் யாரோடும் பகிர்ந்துக்க மாட்டேன். அவ என் குழந்தை... ரத்தமும் சதையுமா என் உதிரத்துல ஜனிச்சவா.. நான் அவளைத் தரமுடியாது.."

வெறி கொண்டவள் போல், கூறிவிட்டு, மூச்சு வாங்கத் திரும்பிச் செல்பவளையே விடாமல் யோசனையுடன் தொடர்ந்தது அவன் பார்வை.

பிறகு, ஒரு வாரம் அமைதியாகக் கழிய, அந்த ஞாயிறன்று மதியம் சாப்பிடும்போதுதான் அந்த உண்மை தெரிய வந்தது.

நான்கு பேரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட ஆரம்பித்ததி லிருந்து வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள் சிநேகா.

திடீரென்று, "பாட்டி.. இன்னிக்கு அப்பா வரலையா?" சிநேகா இயல்பாகக் கேட்க, தூக்கி வாரிப் போட்டது சமதிக்கு!

"அம்மா...?" கேள்வியாய் நோக்கியவளைப் பார்க்க முடியாமல் தலைகுனிந்து கொண்ட மங்களம் தர்மசங்கடத்துடன், "ஆமாம்.. நாளைஞ்சு நாளா இவங்கப்பா மத்தியான நேரத்துல அரை மணி நேரம் இவளோட வந்து இருந்து சாப்பாடு குடுத்துட்டுப் போறாரு" கம்மிய குரலில் கூறினாள்.

"உனக்கு அறிவிருக்கா..? யாரால நாம சொந்த ஊரை விட்டு ஓடி வந்தோம்னு மறந்து போச்சா? இப்ப என்ன புதுசா

பாசம் வேண்டிக் கிடக்கு..? வயித்துப் பிள்ளைக்காரிய மனிதாபிமானமே இல்லாமத் துரத்தி விட்டவன் அவன்.. அவனை எப்படி நம்ம வீட்டுக்குள்ளே அனுமதிச்சே.. பழசெல்லாம் ஞாபகம் இல்லையா?''

தட்டைத் தள்ளிவிட்டு விட்டு எழுந்து கோபமாக இரைந்த அருணாசலத்திடம் அவர் எதுவுமே பேசவில்லை.

ஆனால், குழந்தை பயந்து அழ ஆரம்பிக்க, சபர்மதிதான் அவரை சமாதானப்படுத்தினாள்.

பிறகு தாயிடம் திரும்பியவள், ''ஏம்மா, என்கிட்டே சொல்லாம மறைச்சிட்டீங்க.. ஏன் அவரை உள்ளே விட்டீங்க?'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

''அவர் குழந்தையைப் பார்க்கணும்னு வந்து கேட்டப்ப, என்னால மறுக்க முடியலை... இவளும் அவர்கிட்டே எப்படி ஒட்டிக்கறா தெரியுமா? ஒரு குழந்தைக்கு தகப்பன் ஸ்தானம்ங்கிறது எவ்வளவு முக்கியம்னு உனக்கே தெரியும்.. இதனாலாவது ஒரு நல்ல காலம் உனக்கு வராதா அப்படிங்ற நப்பாசைதான்!''

கூறிவிட்டு வாயில் துணியைப் புதைத்தபடி அழுது கொண்டே உள்ளே சென்று விட்டாள் மங்களம்.

சிநேகா, தாயின் தோள் வளைவில் முகம் புதைத்து மிரண்டு போயிருக்க, அருணாசலம் கடும் கோபத்தில் இருந்தார்.

''அம்மா.. அப்பா...'' திடீரென்று அவள் குரல் கொடுக்க, தாயின் மேலிருந்த கோபம் மகளின் மேல் பாய்ந்தது சபர்மதிக்கு!



''போ.. நீயும் உன்அப்பாகிட்டயே போ! எனக்குன்னு யாருமே வேணாம்..'' சட்டென்று அவளை இறக்கி விட்டவளுக்குள், முதன் முறையாகப் பெரும் தோல்வி உணர்வும் ஆயாசமும் குடி புகுந்தன.

''உஷ்.. இன்ன இது.. சின்னக் குழந்தைகிட்டப் போய் நம்ம கோபத்தைக் காண்பிச்சிட்டு..! பெரியவங்க சண்டையெல்லாம் நமக்குள்ளே இருக்கணும்..''

திடீரென்று கேட்ட அந்த ஆழ்ந்த குரல் சரணின் வருகையை உணர்த்த, இவனால்தானே இதெல்லாம் என்ற கோபத்துடன் வெகுண்டு நிமிர்ந்தாள் சபர்மதி.

தனக்கென்று இருக்கும் அந்த ஒரு உறவையும், அவன் பிரித்து விடுவானோவென்ற பயமும் தவிப்பும் அவள் விழிகளில் கண்ணாடியாய் பிரதிபலித்தன.

அவள் முகம் அவனையும் பாதித்து விட, தலையைக் குலுக்கியவன், ஒரு கண்ணசைவிலேயே அவளை அடக்கி, 'சிநேகா குட்டி.. அப்பாவோட ஒரு ரவுண்ட் வரியா?'' ஆவலுடன் கேட்டான்.

ஓடி வந்து அவன் கால்களைக் கட்டிக் கொண்டவள், ''அம்மா... போ.. உன்னோட 'கா'!'' பெரு விரலை வாயில் வைத்துக் காண்பித்து விட்டுத் திரும்பிக் கொள்ள, அப்போதுதான் தன் தவறு புரிந்தது சபர்மதிக்கு!

குழந்தையுடைய மனம் என்பது அனிச்சம் மலரைப் போன்றது என்று கூறும் அவளே, கோபத்தில் தன்னிலை இழந்தது பெரும் வேதனையைத் தருவதாய்!

உடனே, சரணின் கையிலிருந்த குழந்தையைப் பறித்து வேகமாக முத்தமிட்டவள், ''சாரிடா.. செல்லம்.. அம்மா



தெரியாமச் செஞ்சிட்டேன்.. ப்ளீஸ்.. பழம் சொல்லு!'' மிருதுவான குரலில் கெஞ்சினாள்.

அவளைப் பார்த்து சிரித்த சிநேகா, தன் தாயை இறுகக் கட்டிக் கொள்ள, தான் சாகும் வரை இறுதி மூச்சுவரை.. இந்த மழலையின் அன்பு ஒன்றே போதுமென்று தோன்றியது.

பிறகு, சரண் அவளைக் காரில் அழைத்துச் செல்ல, எல்லாவற்றையும் ஒருவித இயலாமையோடு பார்த்துக் கொண்டிருந்தார், அருணாசலம்.

மனம் முழுவதும் யோசனையாய் அமர்ந்திருந்தவருக்குள், இது நல்லதற்கா என்பதே புரியாத பெரும் குழப்பம்!

பிறகு வந்த சரண், தன் மகளைப் பற்றி அவரிடம் பேசினான்.

''உங்களுக்கு சபர்மதி மாதிரிதான் எனக்கு இவ.. நான் சண்டேஸ்லே மட்டும் வந்து இவளைப் பார்த்துட்டுப் போகப் போறேன்.. நான் யாரையும் தொந்தரவு செய்யறதுக்காக இங்கே வரலை.. என் மகளுக்காக மட்டும்தான் வருவேன்.''


அவரிடம் கூறிவிட்டு, பதிலை எதிர்பார்க்காமல் ஒருவித நிமிர்வுடனும் கம்பீரத்துடனும் அவன் வெளியில் செல்ல, அவனுக்கு 'டாடா' சொல்வதற்காக ஓடினாள் சிநேகா.

இருவருடைய பாசத்தையும், இனம் புரியாத அந்த பந்தத்தையும் ஒரு இயலாமையுடன் கவனித்த சபர்மதி, ஒரு விம்மலுடன் உள்ளே ஓடி விட்டாள்.

பிறகு மெதுவாக அவளை சமாதானப்படுத்தினார் அருணாசலம்!



''சபர்மதி! ஒரு பொண்ணுக்கு அப்பாங்கற உறவு ரொம்ப முக்கியம்மா..! தன் வாழ்க்கையில ஒரு ரோல் மாடலா அவ நினைக்கறதும், ஒரு ஹீரோ மாதிரித் தன் மனசுல அவ உருவாக்கிக்கறதும் அந்த அப்பாவை மட்டும்தான்... உனக்கு எப்படி நான் முக்கியமோ, அது மாதிரிதானே சிநேகாவுக்கும்! அவ ஸ்கூலுக்குப் போக ஆரம்பிச்சதும், தன் அப்பாவைப் பத்திக் கேட்டா என்ன செய்யறதுன்னு நானே ரொம்ப பயந்துட்டிருந்தேன். இதுவும் நல்லதுக்குன்னே நினைப் போமே..!'' என்று மென்மையாகக் கூறியபடி, அவள் தலையைப் பாசத்துடன் வருடி விட்டுச் சென்றார்.



## 10

உடனே, அவளுக்குத் தாகூரின் வரிகள் தான் நினைவிற்கு வந்தன.

*''இலைகளின் நுனியில் ஒட்டிக் கொண்டிருக்கும் பனித் துளியைப் போன்று, காலத்தின் நுனியில் மிகச் சாதுர்யமாக நடனமாட, வாழ்க்கையில் பழகிக் கொள்ள வேண்டும்!''*

வாழ்க்கையைப் பற்றி அவர் கணித்த வரிகள்தான் எவ்வளவு அற்புதமானவை என்று தோன்றியது.

தனக்காக உயிரையே தரத் தயாராக இருக்கின்ற தந்தை.. தன் நல்லதையே விரும்புகின்ற தாய்.. இருவரும் இல்லை யென்றால் தான் கருவுற்றிருந்த நேரத்தில், அவனால் புறக்கணிக்கப்பட்டு வெறுத்து ஒதுக்கப்பட்ட காலங்களில், என்ன செய்திருப்போமென்ற ஆயாசம் வந்தது.

சமூகம் என்ன சொல்லும் என்ற கேள்வியை நினையாமல், வசை பாடிய சுற்றத்தை துச்சமாக மதித்து, அவளுடைய நலன் ஒன்றே குறிக்கோளாய் நின்ற இருவரும், இப்போதும் தனக்கு நன்மையே செய்வார்களென்ற உறுதி மனதில் அழுத்தமாக நிலை பெற்றது.

ஆனால், எந்தக் காலத்திலும் சரனுடன் இணைந்து மனைவியாக மனம் ஒன்றி வாழ்வதும் இயலாத காரியம் என்பது புரிந்திருந்ததால் இந்த ஏற்பாட்டிற்கு அரைமனதாக சம்மதித்தாள் அவள்.

பிறகு, அவனும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நேரத்தில் அவர்களுடைய வீட்டிற்கு வர ஆரம்பித்தான்.

அவன் வருகின்ற நேரங்களில் அவள் பெரும்பாலும் வீட்டில் இருப்பதில்லை. கோவிலுக்கோ, இல்லை பிருந்தாவின் வீட்டிற்கோ சென்று விடுவாள்.

பல நாட்கள் சிநேகாவை வெளியில் அழைத்துச் செல்பவன், திரும்பி வருகின்றபோது, நிறைய பரிசுப் பொருட்களும், ஆடைகளும் கூடவே வர ஆரம்பித்தன.

மங்களம் மட்டும் அவனை வரவேற்று அமர வைத்து, ஏதாவது பேசுவார். அருணாசலம் அவனைக் கண்டதுமே தன் அறைக்குள் சென்று விடுபவர், ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை.

காலம் சக்கரம் கட்டிய வண்டியாய் சுழல, கனடாவிலிருந்து விடுமுறைக்கு வருவதாக சதானந்த் போன் செய்திருந்தான்.

மகனையும், மருமகளையும், பேரனையும் ஆவலுடன் எதிர்பார்த்து அவர்கள் காத்திருக்க மறுவாரமே மூவரும் வந்து



சேர்ந்தனர். புது உறவுகளின் வருகையால் அந்த வீட்டில் ஆனந்தம் அம்சமாக நுழைந்திருந்தது.

சாரா ஆங்கிலேயப் பெண் என்றாலும், நம் பாரம்பரிய முறையில் புடவை கட்டிக் கொண்டு, ஓரளவுக்குத் தமிழ் பேசவும் பழகி இருந்தாள்.

விஜய், வந்தவுடனே அத்தையிடமும், சிநேகாவிடமும் ஒட்டிக் கொள்ள, இரண்டு மாத விடுமுறையில் அவர்கள் வந்திருந்தனர்.

எல்லா விபரமும் தெரிந்திருந்ததால், அந்த ஞாயிறன்று சரண் வரும்போது, தங்கையை அழைத்துக் கொண்டு, நண்பர்களின் வீட்டிற்குச் சென்றிருந்தான் சதானந்த்.

சாராவும், விஜயும் வீட்டிலிருக்க, அவர்கள் திரும்பி வந்தபோது விஜயும் சரணைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான். சிநேகாவின் பிரமிப்பு அவனிடமும் தொற்றியிருந்தது.

அன்றிரவு அவளிடம் தனியே பேசிய சாரா, "ஏன் சமதி? நீங்க ஏன் மிஸ்டர் சரண் கூடப் பேசி திரும்ப.. ஃபேமிலியா சேர்ந்து வாழக் கூடாது..? அவர் ரொம்ப ஸ்மார்ட்டாத் தெரியறாரு.. ஸோ பிரில்லியண்ட்! பழச மறந்துடலாமே.. சிநேகாவுக்காக.. உங்க ஃப்யூச்சருக்காக.. நீங்க அதெல்லாம் யோசிக்கலையா?" மெதுவாகக் கேட்டாள்.

"இல்லைண்ணி! என் மனசு ஆறவே ஆறாது. அவர் என்னைப் புறக்கணிச்சதும், வெறுத்து ஒதுக்கினதும் மனசுல காயமா, வடுவா அப்படியே இருக்கு.. சிநேகாவுக்காகன்னா கூட என்னால ஒரு பொய்யான வாழ்க்கை வாழ முடியாது" என்றாள் வறண்ட முறுவலுடன்.



ஏனோ, பிறகு அவளும் அதுபற்றிப் பேசவில்லை.. வற்புறுத்தவுமில்லை!

அந்த ஞாயிறு அவசரமாக ஊருக்குச் செல்வதாகவும், வரமுடியாதென்றும் சரண் முதல் நாளே போன் செய்து விட்டான்.

ஞாயிறன்று, சதானந்தின் குடும்பமும், சபர்மதி, சிநேகாவுடன், தீம் பார்க்கிற்குச் சென்றிருந்தனர்.

எவ்வளவுதான் சுற்றி விளையாடினாலும், குழந்தையின் நினைவுகள் அப்பாவிடமே முடிந்தன. 'ஏம்மா, அப்பா வரலை..?" இந்தக் கேள்வியை, நூறு முறையாவது கேட்டிருப்பாள் சிநேகா.

அங்கு சரண் தன் பெரியம்மாவிடம் ஊருக்குச் சென்றிருந்தான். சனிக்கிழமை அன்று அவசரமாகப் பேசிய பங்கஜம், உடனே அவனைக் கிளம்பி வரும்படி கூறி இருந்தார்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் அங்கு சென்றவனை, எதிர்பாராத இடியாய் அந்தச் செய்தி தாக்கியது.

சோர்வுடன் அவனை வரவேற்ற பங்கஜம், "சரண்.. நீ பெரிய தப்புப் பண்ணிட்டேப்பா... அதுக்கு நாங்க ஒரு காரணமாக இருந்திருக்கோம்னு நினைக்கிறபோது என்ன சொல்றதுன்னே தெரியலை.. நேத்து அந்த மூர்த்தி தம்பி வந்துட்டுப் போனதுல இருந்து என்னால எதுவுமே முடியலை.. சாப்பிடலை.. தூங்கலை..! உனக்காகவே காத்திட்டிருக்கேன்" பதைப்புடன் கூறினார்.

"யார் பெரியம்மா மூர்த்தி? என்ன சொன்னாரு..? ஏன்.. கவிதாவுக்கு உடம்பு இன்னும் மோசமாயிடுச்சா...?"



"இல்லைப்பா! கவிதா விஷயத்துல நாமதான் மோசம் போயிட்டோம்... நீ தப்பான ஒரு முடிவெடுத்திட்ட... நானும் உன்கிட்டே எத்தனையோ முறை சொல்லியிருக்கேன்... அந்தப் பொண்ணை நோகடிக்காதேப்பான்னு..! இப்ப நம்ம மாப்பிள்ளை சொன்னதுதான் உண்மைன்னு அந்த மூர்த்தியும் உறுதியா சொல்றாரு!"

உடனே சடசடவென்று அவனுக்கும் சமதிக்குமிடையே சீனக்சுவராய் எழுப்பப்பட்டிருந்த ஈகோவும், பிடிவாதமும், வெறுப்புணர்வும் சரிந்து விழுந்தன.

"பெரியம்மா..." நம்ப முடியாத கனவொன்று நிஜமான உணர்வுடன் தவித்து நின்றவன், மறுகணமே தொப்பென்று சரிந்து சோபாவில் அமர்ந்தான்.

பிறகு அவர் கூறியவற்றை எல்லாம் கேட்டபோது, தான் செய்த தவறின் அளவும், கொடூரமான, கேவலமான பாவச் செய்கையும் புரிந்து தவித்துப் போய் அமர்ந்திருந்த போதுதான், மூர்த்தி வந்தான்.

எல்லா உண்மைகளையும், அவனிடம் கூறியவன், "நான் ஜெயில்லே இருந்த காலத்துலதான் எல்லாத் தப்பையும் உணர்ந்தேன். சார் திரும்ப திரும்ப.. நினைச்சிப் பாத்து என்னையே நான் புடம் போட்ட நாட்கள் அவை எல்லாம்!

"கவிதாவுக்கு விபத்து நடந்தது மட்டும்தான் எனக்குத் தெரியும்.. ஆனா அவ இப்படி ஆனது எனக்குத் தெரியாது.. ஏன்னா மறுநாளே போலீஸ் என்னைக் கைது பண்ணிட்டாங்க..

"எனக்காக வாதாட என் உறவுகளே மறுத்தப்பதான் எனக்காக வாழ்க்கையை உதறிட்டு வந்த கவிதாவோட உண்மையான காதலை நான் புரிஞ்சிக்கிட்டேன். ஆனா, அவ

தன் கணவனோட வாழ்ந்துட்டிருப்பான்னு நினைச்சிட்டிருந்தேன்.

''வெளியே வந்தப்புறம்தான் தெரிஞ்சது.. என்னால அவ தன் குழந்தையை இழந்து.. சுய நினைவை இழந்து, பைத்தியமா இருக்கிறது! அவங்ககிட்டே டிரைவரா இருந்த செல்லக்கண்ணு, எனக்கு தூரத்து உறவுதான்! அவர்தான் சொன்னாரு.

''உடனே நேத்து, இவங்ககிட்டே வந்து எல்லா உண்மைகளையும் சொல்லிக் கதறினேன்.. இப்ப நான் ஒரு முடிவெடுத்திருக்கேன்..!

''கவிதா சிகிச்சை பெற்றுக்கிட்டிருக்கிற அந்த மனநலக் காப்பகத்திலயே ஒரு வேலையில சேர்ந்து அவளையும் கவனிச்சிக்கிட்டு, என் மீதி நாட்களையும் அங்கேயே கழிச்சிடலாம்னு முடிவு பண்ணி இருக்கேன். என்னை மன்னிச்சிடுங்க.. எப்பவுமே வாழ்க்கையில பெரிய அடிபட்டப்புறம்தானே புத்தியே வருது'' விரக்தியுடன் கூறியபடி எழுந்து கைகூப்பினான்.

அவன் வார்த்தைகள், சரணுக்குள் பெரும் சவுக்கடியாய்!

பொய்மானை நிஜமான் என்றெண்ணித் துரத்தி, தன் வாழ்க்கையையும் வீணடித்து, ஒரு பெண்ணின் எதிர்காலத்தையும் பாழாக்கிய தன்னை எண்ணி, அவனுக்கே பெரும் வெறுப்பாய்!

ராஜேந்திரன் தவறாகப் புரிந்து கூறிய விஷயத்தால், அதைத் தீர விசாரிக்காமல்.. சதானந்த் கூறியதையும் நம்பாமல்... குரூரமாய் சபர்மதியின் வாழ்க்கையில் தான் விளையாடி



விட்டதை எண்ணி ஓய்ந்து போய் அமர்ந்திருந்தவன், சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு முடிவுடன் எழுந்தான்.

''பெரியம்மா... இப்ப நீங்க உடனே கிளம்பணும்.. என் கூட வந்து சதாகிட்டயும், சபர்மதிகிட்டயும் எனக்காகப் பேசணும்....'' தவிப்புடன் கோரினான்.

முதன் முதலாக, அந்த கம்பீர மனிதனை, பெரும் தோல்வி உணர்வு சரித்து சாய்த்திருந்தது. அந்த இறுகிய பாறையில் பெரும் ஈரம் கசிய ஆரம்பித்தது!

அவன் நிலையைக் கண்டால் பங்கஜத்துக்கே தாங்கவில்லை. ''நிச்சயமாக வரேன்பா! தப்பு செய்யாத ஒருத்தரை.. நம்ம பொண்ணுக்கு நன்மையே செஞ்சவரை நாம இத்தனை காலமா அநியாயமா நோகடிச்சிருக்கோம்... அதைவிட ஒரு அருமையான பெண்ணோட வாழ்க்கையைத் தெரிஞ்சே அழிச்சிருக்கோம்! இதுக்கு நிச்சயமா நாம பரிகாரம் தேடிக்கத்தான் வேணும்!'' என்றவர் உடனே கிளம்பினார்.

சரணுக்கு பட்கின் இரட்டைத் துடிப்பாய் மனம் போராட ஆரம்பித்தது.

★ ★ ★

அன்று மாலையில் தீம் பார்க்கைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பி வரும்போதே, காய்ச்சலில் அரற்ற ஆரம்பித்தாள் சிநேகா.

''அப்பா... அப்பா.'' என்று அவள் அனத்த, சமதிக்குத்தான் பெரும் வேதனையாய்! என்ன செய்வதென்று புரியாமல் அலைப்புறுதலுடன் வந்தவளை, ஆறுதலாக அணைத்துக் கொண்டான் சதா!



நேரே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது, காய்ச்சல் அதிகமாகக் குளிரில் நடுங்க ஆரம்பிக்க, உடனே அங்கு குழந்தையை அனுமதித்து விட்டனர்.

சாதாரண வைரஸ் ஃபீவர்தான் என்றாலும், ரத்த பரிசோதனை செய்யும்படி அவர் எழுதித்தர இரவு அவளுடனே இருப்பதாகக் கூறி சமதியும், அருணாசலமும் அங்கேயே தங்கினர்.

சிநேகாவிற்கு மருந்து கொடுத்து உறங்க வைத்த பிறகு இருவரும் மெதுவாக, பேசிக் கொண்டிருந்தபோதுதான், கதவு மெதுவாகத் தட்டப்பட்டது.

சோர்வுடன் எழுந்து சென்று கதவைத் திறந்த சபர்மதி, அந்த நேரத்தில் அங்கு சரணைச் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

அவனிடம் பெரும் வித்தியாசம் தெரிவது போல்! பல நாட்கள் காய்ச்சலில் விழுந்து எழுந்தவனைப் போல் ஒரு சோர்வும், தவிப்பும் அவன் முகத்தில் தெரிந்தன.

''சமதி! குழந்தைக்கு இப்ப எப்படி இருக்கு?'' பதட்டத்துடன் கேட்டான் அவன்.

கிட்டத்தட்ட மூன்று வருடங்களுக்குப் பிறகு முதன் முறையாக, அவளைப் பெயர் சொல்லி அவன் கனிவுடன் அழைப்பது புரிந்தது.

கோபமும், எரிச்சலும், சிநேகாவின் உடல் நிலையால் குறைந்திருக்க, பெரிதும் ஓய்ந்து போயிருந்தவள், பதிலேதும் கூறவில்லை.

பிறகு, குழந்தை அருகில் வெகு நேரம் அமர்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனின் முகத்தில், சொல்லொணாத வேதனையும், பரிதவிப்பும் தெரிந்தன.




சிறிது நேரத்தில் வந்த சதானந்த், ''அப்பா! நீங்க வீட்டுக்கு வந்துடுங்க.. அவங்க ரெண்டு பேரும் சிநேகாவைப் பார்த்துப்பாங்க'' என்றான் மெல்லிய குரலில்.

அவர் திகைத்து நிற்கும் போதே விதிர்த்துப் போய் எழுந்து தங்கையிடம் வந்தவன், ''சரணுக்கு எல்லா உண்மையும் புரிஞ்சிடுச்சு.. உன்கிட்டே மன்னிப்புக் கேட்க வந்திருக்காரு.. எந்தத் தப்பையுமே மறந்து மன்னிக்கறதுதான் மனுஷ குணம்...

''உண்மை தெரியாம நம்மைத் தப்பா நினைச்சதுக்காக, உருகிப் போய் என் கையைப் புடிச்சிக்கிட்டு கண்ணீரோட அவர் மன்னிப்புக் கேட்டப்ப நான் ஆடிப் போயிட்டேன்.

''நம்ம கோபமும் நியாயம்தான்னாலும், அவர் பக்க நியாயத்தையும் யோசிச்சிப் பார்த்தா, கவிதாவோட அப்பா சரியாப் புரிஞ்சுக்காம சொன்ன வார்த்தைதான் காரணம்னு புரியுது! கவிதா அம்மா என் கால்லயே விழுந்துட்டாங்க! நான் சொல்வது 'புரியுதா? கவிதாவோட அம்மாவும் வந்திருக்காங்க.. நம்ம வீட்டில தான் தங்கியிருக்காங்க! பேசி ஒரு நல்ல முடிவா எடுக்க..'' சிறு முறுவலுடன் கூறி விட்டுச் சென்றான்.



11

அருணாசலம் அவளருகே வந்து அவளுடைய கையைப் பிடித்து ஆறுதலாக அழுத்திவிட்டு விடைபெற்றுச் செல்ல, மொழி புரியாத நாட்டில் தனித்து விடப் பட்டதைப் போல் உணர்ந்தாள் சபர்மதி.

மெதுவாக அவளருகில் வந்த சரண், "சமதி! சாரின்னு கேக்கக் கூட அருகதையில்லாத ஒரு பாவத்தை நான் செஞ்சிருக்கேன். என் தங்கையோட வாழ்க்கைய நினைச்சி.. உன் வாழ்க்கையை பலியாக்கிட்டேன்... என்னை மன்னிச்சிடுன்னு கேக்கறதுக்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது.."

அவனுடைய கண்கள் சிவந்து கலங்கி இருந்ததை கவனித்தவள் தலைகுனிந்தாள்.

"ஆனா, நீயும், சிநேகாவும் இல்லாத வாழ்க்கையை இனிமே என்னால கற்பனை பண்ணிக்கூடப் பாக்க முடியாது. அவளுக்காக.. நீயும், நானும் இனிமே சேர்ந்து வாழறது நல்லதுன்னு நான் நினைக்கிறேன்.. என்னை மன்னிச்சு ஏத்துக்கிட்டு என்னோட வருவாயா சமதி?"

சட்டென்று நிமிர்ந்த சபர்மதியின் விழிகளில் தெரிந்த எரிந்த தீச்சுடரால்.. அவன் வார்த்தைகள் தடைபெற்றன.

"அப்படின்னா, நீங்க எனக்குப் பண்ணின கொடுமை, துரோகம் எல்லாத்தையும் மறந்துட்டு, ஒரு போலியான வாழ்க்கை வாழலாம்னு சொல்றீங்க.. அதானே? ஆனா.. என்னால முடியாது. நான் சாகற வரைக்கும் உங்களை மன்னிக்கவே மாட்டேன்.

"இந்த உலகத்துலயே நான் அதிகமா வெறுக்கறதும், முகத்தைப் பாக்கக் கூட பிடிக்காம தீப்பிடிச்ச மாதிரி துடிக்கறதும், கனவுல கூட பாக்க விரும்பாததும் யாரென்று தெரியுமா..? உங்களைத்தான்!

"சிநேகா உங்களை ஏத்துட்டிருக்கலாம்! ஏன்னா அவ குழந்தை.. அவளுக்குத் தெரியாது! விஷமா மனசை



வச்சிக்கிட்டு, மனசுல வன்மத்தோட கொஞ்சம் கொஞ்சமா என்னை... என் உணர்வுகளை சாகடிச்சவர் நீங்க! நான் இப்படியே தனியாவே இருந்துடுவேன்.. எனக்கு யார் துணையும் தேவையில்லை!"

முடிவாகக் கூறிவிட்டு மகளின் அருகில் சென்று அமர்ந்தவளையே ஏக்கத்துடன் பார்த்தவனுக்குள், இவள் என்றாவது ஒருநாள் மாறுவாளா என்ற பரிதவிப்பு!

வாய்மொழியில் சொல்ல முடியாத பல வார்த்தைகள், அர்த்தம் மிகுந்ததாய் அவன் விழிகளில் தெரிந்தன.

அந்த மருத்துவமனை அவனுடைய நண்பனுடைய தென்பதால், அங்கேயே ஒரு காட்டேஜ் எடுத்துத் தங்கியவன், மறுநாள் சிநேகா டிஸ்சார்ஜ் ஆகும் வரை அவர்களுடனே இருந்தான்.

அன்று மருத்துவமனைக்கு வந்த பங்கஜம் அவளுடைய கையைப் பிடித்து மன்னிப்புக் கேட்டார். தன் மகனையும் மன்னித்து விடும்படி இறைஞ்சினாள்.

அவள் தங்களை மன்னித்தால்தான் தன் மகள் கவிதா குணமாவாள் என்று நம்புவதாகவும், பெரிய பாவத்தை செய்து விட்டதாகவும் கூறிக் கதறினார்.,

தன் கணவர் தவறாக கணித்துக் கூறியதை நம்பி அவர்கள் குடும்பத்தைத் தவறாக நினைத்ததற்குத்தான், தனக்கு கடவுள் தனிமையைப் பரிசளித்து விட்டதாகக் கூறி அழுதாள்.

வயதான பெண்மணியிடம் எதிர்ப்பைக் காட்ட மனமின்றி மௌனமாகவே அமர்ந்திருந்தாள் சபர்மதி. பிறகு "நீயும், கவிதாவும் எனக்கு இனிமே ஒண்ணுதாம்மா!" என்று கூறி விட்டுத் தளர்ந்த நடையுடன் விடைபெற்றுச் சென்றார் அவர்.





அவர்கள் வீட்டிற்கு வந்தபிறகு, ஒரு வாரம் வரை அவள் விடுமுறை எடுத்திருந்தாள்.

சிநேகாவின் உடல்நிலை சரியாகிய பிறகு அவள் பள்ளிக்குச் சென்றபோது, அவளுடைய வேலையில் வேறு ஒருவர் அமர்த்தப்பட்டிருந்தார்.

பள்ளி நிர்வாகம் அவளை டிஸ்மிஸ் செய்திருந்தது.

கோபமாக கரஸ்பாண்டன்டின் அறைக்குச் சென்றபோது, அங்கு முக்கியமான ஏதோ ஒரு அக்கௌண்ட்டைப் பார்த்துக் கொண்டிருந்த சரண், கொலுசு சப்தத்திலேயே அவள் வருகையை உணர்ந்து மெதுவாக நிமிர்ந்தான்.

"மிஸ்டர் சரண்.. இதுக்கு என்ன அர்த்தம்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

அவனெதிரில் அந்த ஆர்டரை வைத்தபடி கோபத்துடன் அவள் கேட்க, சோம்பலாக நிமிர்ந்தவன், 'ம்.. ம்.. என் மனைவி என்னோட .. ஊஹூம்.. அவளோட ஸ்கூல்லேயே வேலை பாக்கறது.. எனக்குப் பிடிக்கலைன்னு அர்த்தம்! அவ ஒத்துக்கிட்டா, இந்த கரஸ்பாண்டன்ட் சேரிலயே அவளை உக்கார வைக்க நான் ரெடின்னு அர்த்தம்!" குறும்புடன் முடித்தான்.

"எனக்கு உங்க ஸ்கூல்லே எந்தப் பதவியும் வேணாம்."

"தேங்க்யூ! அப்ப வீட்டிலயே இருந்து என்னையும், நம்ம குழந்தையையும் பாத்துக்க நீ ஆசைப்பட்டா அப்பவும் ரொம்ப சந்தோஷம்!" ஒற்றைப் புருவம் கேள்வியாய் இறங்கியது.

"சே..! என்றபடி கோபமாக வெளியேறியவளையே கூர்ந்தவன், உடனே சதாவிற்கு போன் செய்து பேசினான்.



வீட்டிற்குச் சென்றவுடன் தன் கைப்பையை சோபாவில் எறிந்து விட்டு கோபமாக அமர்ந்தவளின் அருகே, புன்னகையுடன் வந்து அமர்ந்தான் சதா.

"சமதி! என்னடா கோபம்? சரணைப் புரிஞ்சிக்க முயற்சி பண்ணுடா! உன் வாழ்க்கையில புயலா நுழைஞ்சு அதை திசை திருப்பி நம்ம குடும்பத்தைத் தப்பா நினைச்சி, எல்லாமே செஞ்சிருந்தாலும் அது அவர் உண்மை அறியாம பண்ணின தப்பு!

"இப்ப அவருக்கு உண்மை தெரிஞ்சவுடனே இங்கே வந்து என்கிட்டயும், அம்மா அப்பாகிட்டேயும் எவ்வளவு மன்னிப்புக் கேட்டாரு தெரியுமா?

"என் தங்கைக்கு இப்படி ஒரு அநியாயம் நடந்திருந்தா நான் கூட இப்படித்தான் ரியாக்ட் பண்ணியிருப்பேனோ என்னவோ..? புரிஞ்சுக்கடா! சிநேகாவுக்கு ஒரு ஃபாதர் ஃபிகர் வேணும்.. அவ, அவர்கிட்டே எப்படி ஒட்டிக்கறா பாத்தியா? இப்ப வேணும்னா நீ தனியா இருக்கலாம்.. அவ பெரிய பொண்ணா வளர்ந்து கல்யாணம் அது இதுன்னு வரப்ப, அவ வாழ்க்கைய இது பாதிக்காதா?" ஆதங்கத்துடன் கேட்டான்.

"இப்ப என்னை என்ன செய்யச் சொல்றீங்கண்ணா? எல்லாத்தையும் மறந்துட்டு.. ஒரு ரெடிமேட் புன்னகையோட அவர் கூட சேர்ந்து வாழச் சொல்றீங்களா?"

"இல்லடா.. சிநேகாவுக்கு ஒரு அப்பாவாக இருக்க அவருக்கு அனுமதி குடுன்னுதான் சொல்றேன்."

"இப்ப மட்டும் என்ன? என் மறுப்புக்கு என்ன மதிப்பிருக்கு? தினமும் வந்து அவளைப் பாத்துட்டுத்தானே போயிட்டிருக்காரு..?"

"ஒரு குழந்தைக்கு, அப்பா அம்மாவோட அரவணைப்பு முழுசாக் கிடைக்கணும்.. அது உனக்கும் புரியும்! அவர் என்ன விசிட்டரா..? தினம் வந்து ஒரு மணி நேரம் தன் குழந்தையைக் கொஞ்சிட்டுப் போறதுக்கு..? அப்பாடா.. அவர் மனசுலயும் நிறைய ஆசைகள் இருக்குமில்லையா? நான் சொல்றது.. குழந்தை விஷயத்துல! அதை ஏன் நாம தடுக்கணும்?"

"நான் என்ன முடிவெடுக்கணும்னு நீங்கள்லாம் எதிர்பார்க்கிறீங்க?" கூர்மையுடன் கேட்டாள் அவள்.

"நீ.. அவரோட வீட்டுக்கு சிநேகாவோட போகணும்... அவருக்கு மனைவியா முடியாதுன்னா.. உன் குழந்தைக்குத் தாயா மட்டும் கூட நீ அங்கு போனாப்போதும்.."

"அப்படின்னு அவர் சொன்னாரா?"

"இல்லை... நாங்கதான் சொல்றோம்! தன் தப்பை உணர்ந்து உன்கூட சேர்ந்து வாழ நினைக்கிறவரை.. மன்னிக்கறது தானே அழகு?"

"சரி.. நான் போறேன். ஆனா சிநேகாவுக்கு அம்மாவா மட்டும்தான் என்னால இருக்க முடியும்... அவருக்கு மனைவியா.. என்னால சத்தியமா வாழ முடியாது!" உறுதியாகக் கூறினாள்.

"நான் அவர்கிட்டே இதுபத்திப் பேசிடறேன். நாளைக்கு, ஒரு மன மாற்றத்துக்காக, நாம எல்லாரும் ஊட்டியில இருக்கிற அவரோட கெஸ்ட் ஹவுசுக்குப் போறோம்.. நாலைஞ்சு நாள்தான்! சாராவும், விஜயும், ஊர் சுத்திப் பார்க்கணும்னு ரொம்ப ஆசைப்படறாங்க.. அதான்!"

ஆழ்ந்த யோசனையுடன், 'சரி'யென்றாள் சபர்மதி.



மறுநாள் மதியம், சரண் சரியான நேரத்திற்கு வந்துவிட அனைவரும் தயாராய் இருந்தனர்.

ஒரு வீம்புடன் முகத்தை இறுக்கமாக வைத்தபடி அவள் நின்றிருக்க, ஓடிச் சென்று சரணின் கால்களைக் கட்டிக் கொண்ட சிநேகாவையே ஆராய்ச்சியுடன் நோக்கினாள் சபர்மதி!

அவள் பார்வை மெதுவாக உயர்ந்தபோது, அவன் மீசையோரங்கள் மெல்லத் துடித்தன. அவன் விழிகளில் மெலிதாய் படர்ந்த கேலி அவன் ஏதோ நினைவில் சிரிக்கிறான் என்பதை உணர்த்தியது.

"யாரிவன்..? இந்த நாட்டின் முதல் குடிமகன் போல் வந்து என் வீட்டு ஹாலில் நின்று என்னையே படபடக்கச் செய்பவன் என்று மனதினுள் கோபம் சுரந்தது.

எல்லோரும் கிளம்பியதும், தானும் சென்று காரின் பின்புறம் ஏறிக் கொண்டாள் சமதி!

வியப்புடன் ஒரு கணம் விழித்த சாரா, மறுபக்கம் ஏற, முன் சீட்டில் சதானந்த் அமர்ந்து கொண்டான்.

விஜயும், சிநேகாவும் பின்புறம் இரு ஜன்னலோரங்களிலும் அமர, கார் வெண்ணெயாக வழுக்கிச் சென்றது.

யாரோ தன்னை உற்றுப் பார்ப்பது போன்ற உணர்வு உறுத்த, அவள் பார்வை முன்னே சென்றபோது, அங்கு சரண் 'ரியர் வியூ மிரரை' சரி செய்வது தெரிந்தது.

அவளையறியாமல் பார்வை அங்கு செல்ல, அதில் அவனுடைய முகம், அவள் பார்வையைத் தாங்கியபடி, கண்ணோரம், செல்லச் சுருக்கங்களுடன் தெரிய, சட்டென்று



வெளிப்புறம் திரும்பிக் கொண்டாள் அவள். அவன் பார்வை ஊடுருவியதில் அவள் இதயம் சிதறிக் கிடந்தது.

பிறகு மெலிதான சங்கீதம் காரினுள் பரவ, தன்னை மறந்து உறங்க ஆரம்பித்தாள் அவள்.

திடீரென்று விழிப்பு வந்தபோது, தன்னை யாரோ அழைத்தது போலிருக்க, அவளுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை.

நிமிர்ந்து பார்த்தால், சரண்தான் கதவைத் திறந்து அவளை அழைத்துக் கொண்டிருந்தான்.

தூக்கக் கலக்கத்தில் சமதி அவனைப் பார்த்து மிரட்சியுடன் விழிக்க அவன் முகம் உடனே இறுகியது!

திரும்பினால் வழியில் பாறையிலிருந்து கசிந்து கொண்டிருந்த சிறு அருவியை ஹேண்டி கேமில் படம் எடுத்தபடி அனைவரும் உற்சாகமாக நின்று கொண்டிருந்தனர்.

சரண், தன்னையே கூர்ந்தபடி, நிற்பது கண்ணோரம் பட, அவள் வேகமாக இறங்கினாள். பழைய நினைவுகள் மனதில் கண்ணாமூச்சி ஆடின. இழப்பின் வலி கனமாக உணரப்பட்டு, பதுங்கிக் கிடந்த வேதனையைப் பதியம் போட்டன.


பிறகு பயணத்தைத் தொடர்ந்தபோது, மெல்ல சாய்ந்து வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தாள் சமதி.

சூரியன் அஸ்தமிக்கின்ற காட்சி, கருப்புக் கண்ணாடியின் வழியே புகை படிந்த ஓவியம் போல் ரம்யமாகத் தெரிந்தது.

பிறகு, வீதி முழுவதும் பரவித் தெரிந்த பசுமையும் குளிர்ச்சியும் வான வீதியில் விரவித் தெரிந்த வெண்ணிற



மேகங்களும் மனதிற்குள் சிறு மலர்ச்சியை அறிமுகப் படுத்தின.



12

கெஸ்ட் ஹவுசின் வாசலில் கார் நின்றவுடன் இறங்கி பின்புறக் கதவைத் திறந்து சிநேகாவைத் தூக்கும்போதே அவளிடம் 'வெல்கம் டு அவர் கெஸ்ட் ஹவுஸ்' என்றான் சரண் தணிந்த குரலில்!

மெதுவாக இறங்கிப் பார்த்தபோது, வெளியே இருட்டாக இருந்தாலும், பெரிய தோட்டத்திற்கு நடுவே அந்த பங்களா அமைந்திருப்பது தெரிந்தது.

ஒரு மத்திம வயதான ஆணும், பெண்ணும் முன்னால் வந்து அவர்களை வரவேற்க, "இவர்தான் நம்ம கெஸ்ட் ஹவுஸோட கேர் டேக்கர் பிரின்ஸ். இவங்க அவரோட மனைவி எலிசா! சமையல் எல்லாம் இவங்க டிபார்ட்மெண்ட்" என்று அறிமுகப்படுத்தினான்.

பிறகு எலிசாவிடம் திரும்பி, "எப்ப வந்தாலும் தனியாவே வரீங்கன்னு கேப்பீங்களே.. இதோ அழைச்சிட்டு வந்துட்டேன்! என் ஒய்ஃப் சபர்மதி.. குழந்தை சிநேகா! அவங்க இவளோட அண்ணன் ஃபேமிலி!" என்றான் உற்சாகத்துடன்.

"வாங்கம்மா..!" மரியாதையுடன் இருவரும் அவளை வரவேற்க, ஏனோ எரிச்சலாக இருந்தது அவளுக்கு.

அவளையும், சிநேகாவையும் ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் சென்றவன், "இது நம்ம ரூம்! எதிர்ல இருக்கிற

ஃபேமிலி உங்கண்ணன் பேமிலிக்கு ரெடி பண்ணச் சொல்லி இருக்கேன்'' என்றபோது அவன் குரலில் புரியாத ஒரு செய்தி!

இவனுடன் தனியறையில் எப்படித் தங்குவது என்று யோசிக்கும் போதே, தனியாகத் தங்கினால் அதுதான் வித்தியாசமாகத் தெரியும் என்பதும் புரிந்தது.

இரவு சாப்பிட்டு விட்டு படுக்கச் சென்றபோது, நடுவில் படுத்திருந்த சிநேகா, ''அம்மா இந்தப்பக்கம்.. அப்பா இங்கே..!'' இருபுறமும் கைகளைக் காட்டியபடி கூற சட்டென்று விதிர்த்துப் போனாள் அவள்.

''நீ அவளோடப் படுத்துக்க.. நான் அவ தூங்கற வரைக்கும் 'பெட்'லே படுத்துக்கறேன்.. அப்புறம் அந்த சோபாவுக்கு போயிடறேன்'' என்றான் சரண் அவள் காதோரம் குனிந்து!

நைட்டியின் மேல் ஸ்வெட்டரை அணிந்து அவள் படுத்தபோது, ''அம்மா.. கதை சொல்லுங்க..'' கொஞ்சியவளை அணைத்தபடி மெல்லிய குரலில் கதை சொல்ல ஆரம்பித்தவள், அருகில் படுத்தபடி சுவாரசியத்துடன் விழி விரித்து அவளையே நோக்கிக் கொண்டிருந்த சரணை கவனிக்கவில்லை.

பிறகு, சிநேகா தூங்கியதும் கதையை நிறுத்தி விட்டு நிமிர்ந்த போது அவன் பார்வையில் தெரிந்த ஏக்கமும் எதிர்பார்ப்பும் அவளை ஏதோ செய்தன.

''எனக்கு இந்த மாதிரி சின்ன வயசுல யாருமே கதை சொல்லித் தூங்கப் பண்ணினதில்லை.. ஏன்னா, பிறந்தவுடனே அம்மாவை இழந்தவன் நான்!''

திருமணம் முடிந்த இந்த நான்கு வருடங்களில், முதன்



முதலாக தன்னைப் பற்றி அவன் கூறிய வார்த்தைகள், அவளுக்குள் பெரும் பாதிப்பையும், சலனத்தையும் ஏற்படுத்தின.

ஆனால், உடனே இளக ஆரம்பித்த மனதை அடக்கியவள், ''அதுக்காக, இந்த வயதில் எல்லாம் கதை சொல்லித் தூங்க வைக்க முடியாது'' என்றாள் வெறுப்புடன் சுழித்த உதடு களுடன்!

உடனே அவன் பார்வை தழைந்தது. பக்கத்திலிருந்த கம்பளியை எடுத்துச் சென்று சோபாவில் படுத்துக் கொண்டான்.

தான் ஏன் அப்படி முகத்திலறைந்தாற் போல் கூறினோம் என்ற எண்ணத்துடன், உறங்க ஆரம்பித்தாள் சபர்மதி.

மறுநாள் விடிகாலையிலேயே விழிப்பு வந்துவிட, அவன் எழுவதற்குள் குளித்து உடைமாற்றி வந்தபோது, தோட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்று தோன்றியது.

மெதுவாகக் கதவைத் திறந்து வெளியே வந்தவளுக்கு அந்த இடத்தைச் சுற்றிலும் மலர்களும், வானை எட்டிப் பிடிக்க நினைக்கும் ஊசியிலைக் காடுகளும், மலைச் சரிவுகளில் விரவித் தெரிந்த பசுமையும் மனதை நிறைத்தன.

இயற்கையின் 'அழகில்' மனதைப் பறி கொடுத்து நின்றிருந்தவளின் காதோரம், திடீரென்று ஒரு குரல்!

''பிடிச்சிருக்கா..? ஏதுடா.. நம்ம தோட்டத்தில தேவதை சிலை ஏதும் நாம வைக்கலையே? புதுசா இருக்கே... என்னன்னு பாக்கலாம்னு வந்தேன்'' கூறிவிட்டு மெலிதாக முறுவலித்தான் அவன்.



சட்டென்று இனம் புரியாத கோபம் அவளை ஆட்படுத்த, ''எனக்குப் பிடிக்கலை.. எதுவுமே.. இந்த வீட்டை.. உங்களை.. ஏன், என்னையே!'' சினத்துடன் கூறிவிட்டு வேகமாகத் திரும்பினாள்.

அவள் கரம், அவனுடைய கைச்சிறைக்குள் எப்போது வந்தது என்று அறியும் முன்பே, அவளைப் பற்றி நிறுத்தி இருந்தான் சரண்.

அடங்கிய குரலில், ''சபர்மதி! ஏன் கோபப்படறே? அழகைப் பாராட்டி ரெண்டு வார்த்தை சொன்னாக் கூடத் தப்பா? கடவுளே..'' என்று கூறிவிட்டு ஒருவித இரும்புத் தன்மையுடன் அவள் கையை விட்டுவிட்டு, திரும்பிப் பாராமலே சென்று வீட்டினுள் மறைந்தான் அவன்.

அவன் அருகாமை தந்த பயத்தை விட, அவன் கோபமாகச் சென்றது முதன்முதலாக அவளை அதிகம் பாதித்தது.

இரண்டு நாட்களாக ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்கே நேரம் சரியாக இருந்தது.

அன்று மாலையில், அனைவரும் வாக்கிங் கிளம்ப, சிறிது தூரம் சென்றதுமே, சாரா அவளிடம் திரும்பினாள்.

''இன்னிக்கு, நாம ரெண்டு ஃபேமிலியும் தனித்தனியா வாக்கிங் போகப் போறோம்.. நாங்க இந்த வழியில போறோம்'' என்று கிளையாகப் பிரிந்த வழியில் செல்ல ஆரம்பித்தாள்.

விஜய் தன்னைப் பிரிந்து செல்வதை உணர்ந்த சிநேகா விஜயுடன் செல்ல வேண்டுமென்று அடம் பிடிக்க, அவளை சதா தூக்கிக் கொண்டான். சரண் கூறிய 'ஃபேமிலி..' யின் அர்த்தம் புரிந்தது.



''நீங்க ரெண்டு பேரும் இன்னிக்காவது தனியா சுத்திப் பாத்துட்டு வாங்க'' என்று அவர்களை விட்டுவிட்டு செல்ல ஆரம்பித்தான் சதா.

''அப்பா.. அம்மா.. பை..!'' குழந்தை டாட்டா காண்பிக்க, ''ஊஹூம்... நானும் அவங்களோடப் போறேன்'' உடனே வேகமாகத் திரும்பியவளை தடுத்தது சரணின் குரல்.

''இப்ப நீ திரும்பிப் போனா, சதா ரொம்ப வருத்தப்படு வாரு... நானும் புலியோ, சிங்கமோ இல்லை... உன்னைக் கடிச்சித் தின்னுட மாட்டேன்... பயப்படாதே!'' உணர்ச்சியற்ற குரலில் கூறினான்.

உடனே, வீம்புடன் அவன் முன்னே செல்லப் பின் தொடர்ந்தபோது, சமதி தன் கவனத்தை இயற்கையில் பதிக்க, அவன் மனமோ, தனிமையில் இனிமையடைய மறுப்பதாய்!

யாரும் தொடாத ஒப்பந்தம்... மலருக்குத் தேவையாக இருப்பது போல் அவளுடைய மனதிற்கும் தேவையோ என்ற கேள்வி எழ, அந்த இடத்தைப் போலவே இருவரின் மனமும் ஏகாந்தமாய்!

அந்தப் பாதையின் திருப்பத்தில் சென்றபோது, எதிரே அழகிய வானவில்லொன்று, வர்ணங்களால் அவர்களுக்கு வரவேற்புத் தோரணம் அமைத்திருந்தது.

வானக் காகிதத்தில் வண்ணங்களைத் தூரிகையாக்கி, அலங்கார வளைவு செய்து சூழ்நிலையையே ரம்யமாக்கிக் கொண்டிருந்தது.

சமதியும் ஒரு கணம் நின்று அதைக் கண்ணிமைக்காது மலர்ந்து விகசித்த முகத்துடன் ரசிக்கவும், ரசனைகளிலாவது

இருவர் மனமும் ஒத்துப் போகிறதே என்று அவன் மனம் மகிழ்ச்சியடைந்தது.

ஆனால் அந்த வானவில் உடனே மறைய ஆரம்பித்ததும், இருவருக்குமே எதையோ தொலைத்தாற் போல் மனதிற்குள் மெல்லிய வருத்தக் கோடுவிழ, மழை நனைத்திருந்த புல் வெளியை மெலிதாய் சாரலாய் வருட ஆரம்பித்தது... தென்றல் காற்று!

எதேச்சையாகத் திரும்பினால், அவன் தன்னைப் பார்வையாலேயே அளவிடுவதைப் புரிந்து கொண்ட சமதி, மெதுவாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

சட்டென்று அவன் மனதில் முதல் கவிதையின் ஜனனம்!

*"நீ*

*வரும்போதே நினைத்தேன்!*

*உன்*

*அனிச்சமலர் பாதம்பட்டு..*

*பூமியில்*

*சுவடுகள் பதியாதென்று!*

*ஆனால்..*

*என் இதயத்தில் மட்டும்...*

*உன்*

*நினைவுச் சுவடுகளை...*

*அழுத்தமாய்ப் பதித்தது*

*எப்படி?"*



அவளிடம் கேட்க வேண்டும்போல் ஒரு கணம், கவிதைச் சாரலில் நனைந்தவன் பிறகு, தோள்களைக் குலுக்கிக் கொண்டு அவளைப் பின்தொடர்ந்தான்.

அப்போது, அங்கு ஒரு பாம்பு மெதுவாக ஊர்ந்து பாதையைக் கடக்க ஆரம்பிப்பதைக் கண்டவன், பதட்டத்துடன் அவள் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான்.

திடீரென்று தன் கைகளை அவன் பற்றவும், ஒன்றும் புரியாமல் விடுவிக்கப் போராடியவள், அவன் 'உஷ்' என்று கூறிவிட்டு கண்களால் ஜாடை செய்யவும், அவன் காட்டிய இடத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

உடனே மிரண்டு போய் அவனருகில் ஓடி வந்து இறுகப் பற்றி அவனை அணைத்துக் கொண்டு அவள் கண்களை இறுக மூடியபோது, சரணுக்குள் தாங்க முடியாத சிரிப்பு கிளர்ந்தெழுந்தது.

அவளுடைய முதல் ஸ்பரிசம்... வெகு நாட்களுக்குப் பிறகு அவனுள் சாமரம் வீச, அந்தத் தொடுகை அவன் மனதோரம் வந்து கூறியது.. அவள் மலர்களை விட மிகவும் மென்மையானவள் என்று!

பயத்தினால் இறுக மூடியிருந்த விழிகளைத் திறந்து அச்சத்துடன் சாலையில் பார்வையைப் பதித்தபோது அந்தப் பாம்பு காணாமல் போயிருக்க, மெதுவாக நிமிர்ந்தாள் சமதி.

அவளையே நோக்கியபடி, தனக்குள்ளே ரகசியமாக ரசித்து சிரித்தபடி கண்ணோரங்கள் சுருங்க சரண் நிற்பதைக் கண்டதும், பதறிப் போய் விலகியவளுக்குத் தன் மேலேயே கோபம் வந்தது.



அதை அறியாதவன் போல் நமட்டுச் சிரிப்புடன், "நாளைக்கே.. இங்கே பாம்புப் பண்ணை ஏதாவது இருந்தா, எல்லாத்தையும் திறந்து விடச் சொல்லப் போறேன்... அப்பதானே மகாராணிக்கு என் மேல பாசமே வருது!" அவள் அணைத்ததை நினைவில் வைத்துக் கூறினான்.

அந்த நிமிடம் தன்னையே எண்ணி அவள் மனம் எரிமலையாக, வேகமாக வந்த வழியிலேயே திரும்பி நடக்கத் தொடங்கினாள் அவள்.



13

அன்று முழுவதும் இருவருக்குமிடையே பனிப் போர் தொடர, மறுநாளும் அவர்கள் அனைவரும் உலாவச் செல்லும்போது, அவனுடன் தனிமையில் செல்லாதபடி பார்த்துக் கொண்டாள் சமதி.

குழந்தைகளை அழைத்துக் கொண்டு தொட்டபெட்டாவிற்கு சென்றிருந்தபோது, புல்வெளியை நனைக்கும் வெண் பனியாய் மேகங்கள் அவர்களைத் தீண்டிச் செல்ல, அதுவே ஒரு சுகானுபவமாய்...

சரிவில் இறங்கி, சில்லென்று மனதை உறையச் செய்த பள்ளத்தாக்கைப் பார்வையிட்டபடி நின்றிருந்தபோது, சரணின் குரல் வெகு அருகில் கேட்டது.

'சமதி! எவ்வளவு அழகாக இருக்கில்லை இந்த இடமெல்லாம்...? மனசு என்னதான் பாரமா இருந்தாலும், அதை இயற்கையில் செலுத்தறப்போ, வர்ற உற்சாகமே தனிதான்... இல்லையா?"



"இல்லை... அதெல்லாம் எனக்குத் தெரியாது..." பட்டென்று பதில் வந்தது அவளிடமிருந்து!

"ம்.. ம்.. ஒரு காலத்துல காலேஜ் படிக்கிறப்ப கவிதை எல்லாம் எழுதுவேன்னு சொல்லுவே...! ரசனை இல்லைன்னா நம்ப முடியலையே.?"

"அந்த ரசனை உணர்வெல்லாம் கல்யாணம்ங்கிற கொடூரமான அனுபவத்தாலே செத்துப் போச்சு!"

முகம் இறுகினாலும் "சாரி... தெரியாமக் கேட்டுட்டேன்! ஏதோ பழமொழி சொல்லுவாங்களே... எதுக்கோ தெரியுமா கற்பூர வாசனை அப்படின்னு. அது சரிதான் போலருக்கு" குறும்புடன் சீண்டினான்.

அவளுக்கும் கோபம் ஊற்றெடுக்க, எங்கேயோ பார்த்தபடி, "கழுதை கிட்ட வந்தா என்ன செய்யும் தெரியுமா?" கள்ளென்று கேட்டாள்.

"ம்.. நல்லாத் தெரியுமே! அதனாலதான் நான் கிட்டவே வரதில்லை... அஞ்சடி தள்ளித்தான் வரேன்.."

நமட்டுச் சிரிப்புடன் கூறியவனின் உதட்டோரம் குறும்பில் சுழித்து, கண்ணோரங்கள் கேலியாகச் சுருங்கவும், அதைக் கண்ட சமதிக்கு கடும் சீற்றம் வந்தது.

"மனைவிக்கு கழுதை, குதிரைன்னு பட்டம் சூட்றவங்களை இன்னிக்குத்தான் பாக்கறேன்... சே!" சஞ்சலத்துடன் கூறினாள் அவள்.

உடனே அவன் குரல் சீண்டலாய் வந்தது.

"நான் ரெடிப்பா! தேனே, நிலவேன்னு கொஞ்சறதுக்கு! ஆனா என் மனைவிக்குதான் அதெல்லாம் பிடிக்கலையே?

மறக்க வேண்டியதை எல்லாம்... தேவையில்லாம மனசுல வச்சுக்கிட்டு பிடிவாதமா இருக்கறவளை என்ன பண்றது..?" சிறு சலிப்புடன் அவனிடமே கேட்டான்.

"ம்.... அவ எதையுமே மறக்க மாட்டா! மறக்கக் கூடிய காரியத்தை நீங்க செய்யலை.. உயிரைக் கொல்றவங்களைக் கூட மன்னிச்சிடலாம்.. மனசைக் கொன்னவங்களுக்கு மன்னிப்பே கிடையாது!" கூறிவிட்டு பாதுகாப்புக்காக போடப்பட்டிருந்த கம்பியை இறுகப் பிடித்தபடி திரும்பிக் கொண்டாள் அவள்.

"உனக்கு ஒன்னு தெரியுமா? ஒரு காலத்துல மனைவியை வேற பல காரணங்களுக்காக ஒதுக்கினவன்தான் நான்! ஆனா, இப்ப மாறிட்டேன்... அவ மனசுக்குப் பிடிக்காத எதையுமே நான் செய்ய மாட்டேன்னு ஒரு உறுதியோட இருக்கேன்... இனிமே அவதான் என் உலகமேங்கிற ஒரு முடிவெடுத் திருக்கேன்.. தெரியுமா?"

இறுகிய முகத்துடன் கேட்டுவிட்டு, சட்டென்று திரும்பி மலைப் பாதையில் ஏற ஆரம்பித்தவனின் முகத்தில் பல உணர்ச்சிகள்!

**சா**ரா, இயற்கையை 'ஹேண்டிகேமில்' பதிவு செய்து கொண்டிருக்க, பிள்ளைகளுடன் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்த சதா, ஒரு நிமிடம் நின்று தங்கையும் அவள் கணவனும் பேசுவதை ரசித்தபோதுதான், உடனே திரும்பி சரண் மலையேறி வருவதைக் கண்டான்.

அவன் மனம் யோசனையில் சுருங்கியது.

மேலும் இரண்டு நாட்கள் இனிதாகச் செல்ல, தான் ஊருக்குக் கிளம்புவதற்கு முன்பு, தங்கையிடம் அவள் வாழ்க்கையைப்



பற்றி கட்டாயம் பேச வேண்டும் என்ற முடிவு அவனுள் உறுதியாய் நிலைபெற்றது.

சபர்மதியும், அறையிலிருக்கின்றபோது சிநேகாவை உடன் வைத்துக் கொண்டவள், சரணுடன் தனித்துப் பேச வாய்ப்பில்லாது நடந்து கொண்டாள்.

ஊட்டியிலிருந்து திரும்பியதும், கோயமுத்தூரிலேயே சரன் கட்டிக் கொண்டிருந்த புது வீட்டிற்கு எளிமையான முறையில் கிரகப்பிரவேசம் செய்து குடி புகுந்தனர். நீச்சல் குளத்துடன் மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தது அந்த பங்களா!

வீட்டிற்குத் தேவையானவற்றை அருணாசலமும், சதானந்தும் வாங்கி வந்து சீர் செய்ய, தன் எதிர்காலம் சமதியின் கண் முன் பெரும் கேள்விக்குறியாய் விசுவரூபமெடுத்து நின்றது.

அந்த வீட்டில், சிநேகா விளையாடுவதற்காக வென்றே விளையாட்டுப்' பொருட்களுடன் ஒரு நர்சரி தயார் செய்யப்பட்டிருந்தது.

அவளுக்கென்று ஒரு தனி அறையையும் அமைத்திருந் தான். "ஸ்கூல் போக ஆரம்பிச்ச உடனே அவ தனியாவே அந்த அறையில் படுத்துக்கட்டும்... அப்பத்தான் அவளுக்கு தன்னம்பிக்கை, யாரையும் சார்ந்து நிற்கத் தேவையில்லாத மன தைரியம், சுதந்திரம், எல்லாமே மனசுல படியும்!

"நம்ம மடியிலேயே புடிச்சி வச்சிட்டிருந்தா, அப்புறம் ஒடுங்கிப் போய் சுயதைரியமில்லாத, சிலர் மாதிரி இருபத்து நாலு வயசிலயும் சுயமா எந்த முடிவையும் எடுக்க முடியாம, அப்பாவோட மடிக்குள்ளே ஒளிஞ்சிக்கத்தான் தோணும்.. என் பொண்ணு அப்படி வளரக் கூடாது!"





கண்டிப்புடன் வந்த அவன் வார்த்தைகளில், புரியாத ஏதோ ஒரு செய்தி!

பிறகு யோசித்த போதுதான், தான் இங்கு வந்த அன்று, தன் தந்தையின் மடிசாய்ந்து அழுதது நினைவிற்கு வந்து, அவன் தன்னைத் தான் குத்திக் காட்டுகிறான் என்பது புரிந்தது.

அவன் சொற்கள், இவன் என்ன என்னைக் குற்றம் சொல்வதென்று கோபத்தையும் வீம்பையும் பிடிவாதத் தையும்,அவளுக்குள் இன்னும் அதிகரிக்கவே செய்தன.

ஆனாலும் அவன் கூறியது சரிதான் என்று புரிந்தாலும், அதை ஒத்துக் கொள்ளத்தான் மனம் வரவில்லை.

அவள், தன் தோழி பிருந்தாவிடம், எத்தனையோ முறை இதைப் பற்றிக் கூறி இருக்கிறாள். அதனாலேயே அவளும் தான் கட்டிய புது வீட்டில் தன் குழந்தைக்கென்று ஒரு அறையை உருவாக்கியதும், போன வருடம் நடந்திருந்தாலும் இன்று போல் நினைவு வந்தது.

புதுவீட்டிற்குச் சென்று ஒரு வாரம் வரை அவள் மனதிற்கு எதுவுமே பிடிக்கவில்லை.

தினமும், மாலையில் வந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகும் சதாவும் அவளுக்கு அறிவுரை கூற ஆரம்பித் திருந்தான்.

சமையலுக்கும், மேல் வேலைக்கும் ஆட்கள் இருக்க, பொழுது போகாமல் தவித்த நேரத்தில் சிநேகாவை பள்ளி செல்லத் தயார்ப்படுத்த ஆரம்பித்து பாடங்களைச் சொல்லித் தந்தாள்.



அன்று மாலை வீட்டிற்கு வந்த சரண், "நான் உன்கிட்டே சில விஷயங்கள் பேசணும்... வரியா?" என்றபோது, அவன் குரலில் பெரும் விலகல் தன்மை!

ஊட்டியிலிருந்து வந்ததிலிருந்தே, அவன் தொட்டாற் சுருங்கியாய் தனக்குள்ளேயே சுருங்கி இறுகி இருப்பதை, அவளும் உணர்ந்திருந்தாள்.

அவர்களுடைய அறைக்குச் சென்ற போது, வேகமாகச் சென்று ஜன்னலருகே நின்று தூரத்தே தெரிந்த மண் முகட்டில் தன் பார்வையைப் பதித்தவன், "என் மனசில சில எண்ணங்கள் இருக்கு... சிநேகாவை நீச்சல், கத்துக்கறதுக்கும், பாட்டு கத்துக்கவும் அனுப்பலாம்னு நினைக்கிறேன்! கொஞ்சம் பெரியவளான உடனே, பரத நாட்டியமும் குதிரை ஏற்றமும் பழக்கலாம்!

"என் பொண்ணுக்கு படிப்பைத் தவிர நிறைய விஷயங்கள் தெரிஞ்சிருக்கறது, அவ எதிர்காலத்துக்கு நல்லதுன்னு நான் நினைக்கிறேன். உன் முடிவு தெரியணும்!" ஆழமான குரலில் கேட்டான்.

"பரத நாட்டியம் பாட்டு சரி... ஹார்ஸ் ரைடிங், நீச்சல்.. எல்லாம் பயமா இருக்கே.." தயக்கத்துடன் கூறினாள் சமதி.

"அந்த பயத்தைப் போக்கத்தான் இதெல்லாம் பழகறதே! நீச்சல் ஒன்னும் பயமில்லை... நம்ம வீட்டில இருக்கிற நீச்சல் குளத்திலேயே பழகிக்கலாம்.. லேடி கோச் ஏற்பாடு பண்றேன்.. உனக்கும் கத்துத் தருவாங்க!" கூறிவிட்டு விருட்டென்று வெளியே சென்று விட்டான்.

இப்போதெல்லாம் சரண், அவள் முகம் பார்த்துப் பேசுவதே இல்லை! சிநேகாவை, பக்கத்திலிருக்கும் ஏதோ, ஒரு ஜடப் பொருளைப் பார்த்தபடி பேசுவதே பழக்கமாகி இருந்தது.

மறுநாளிலிருந்து நீச்சல் பழக ஆரம்பித்தவர்களை, கடைக்கு அழைத்துச் சென்று இருவருக்கும் நீச்சல் உடை வாங்கித் தந்தான் அவன்.

ஆனால், குழந்தை பழகும் வரை அருகிலேயே இருந்தவள், அவளை சமையல்காரம்மாவிடம் பத்திரமாக விட்ட பிறகே, தான் பழக ஆரம்பித்தாள்.

இப்போது, நீச்சல் என்பது வாழ்க்கையின் ஒரு அங்கமாகி விட்டது போல் பழகி விட்டது. நல்ல உடல் பயிற்சியாகவும் இருந்தது.

சில நாட்களில் சாராவும், விஜயும் வந்து விட்டால், ஒரே கூச்சலும் கும்மாளமுமாகப் பொழுது செல்லும்.

ஒரு ஞாயிறன்று சதாவும் வந்துவிட அனைவரும் நீச்சல் குளத்தில் ஆட்டம் போட, சபர்மதி மட்டும் கரையிலிருந்தபடி சிநேகாவை பார்த்துக் கொண்டிருந்தாள்.

''சமதி.. கமான்.. என்னாச்சு உனக்கு..?'' சாரா ஆர்வத்துடன் அழைக்க சரணுக்கு முன்பாக நீச்சல் உடை அணிந்து பழக்கமில்லாததால், மனம் ஒத்துக் கொள்ள மறுத்தது.

''இல்லை.. நான் பசங்களைப் பாத்துக்கறேன்'' மெல்லிய குரலில் அவள் கூற, அதுவரை அழகாக 'பட்டர்ஃபிளை ஸ்ட்ரோக்' செய்து கொண்டிருந்த சரண், அதை நிறுத்தி விட்டு வேகமாகக் கரையேறினான்.

அவளருகில் வந்தவன், ''நான் பாத்துக்கறேன்... நீ போய் ட்ரெஸ் மாத்திட்டு வா'' என்று கூற எப்படித் தவிர்ப்பதென்று புரியாமல் எழுந்து சென்றாள் சபர்மதி.

அவள் நீச்சல் உடை அணிந்து வந்தபோது, இறுக்கமான உடலைக் கவ்விப் பிடித்திருந்த அந்த உடை, அவள்



வளைவுகளை மேலும் அழகாக்கி கவர்ச்சியாய் தெரிய, ஒரு கணம் நிலைகுலைந்து போனான் சரண்.

அவளும் சங்கோஜத்துடன் குளத்தில் இறங்கி எல்லோருடனும் சேர்ந்து ஆட்டம் போட, அவனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே இயலாமல் போனது.

பழைய நினைவுகள் அலையாகப் பரவி அவளுடைய கூந்தல் மணமும், மலரைப் போன்ற மென்மையான அந்த மேனியின் தீண்டலும், ஞாபக அடுக்கில் தடம் பதித்து பெரும் போராட்டத்தை அவனுள் விதைத்தன!



14

பிறகு, கரைக்கு வந்து உடைமாற்றி தலையை விரித்துக் காய வைத்தபடி அவள் அமர்ந்திருக்க, சதாவும், சரணும் குளித்துக் கொண்டிருந்தனர்.

சாரா உடை மாற்றச் சென்றிருக்க, ஓடி விளையாடிக் கொண்டிருந்த விஜயையும், சிநேகாவையும், ரசித்துக் கொண்டிருந்தபோது, திடீரென்று அவள் பின்புறம் கழுத்துக்கும் முதுகுக்கும் இடையே இருந்த தேகப் பரப்பில் சில்லென்ற நீர்த்துளிகள் சிதறலாய் பரவின.

சட்டென்று சருமம் கூசிச் சிலிர்க்க பதறிப் போய்த் திரும்பியபோது, தலையிலிருந்து நீர் சொட்ட குறுகுறுத்த பார்வையுடன் அருகில் நின்றிருந்தான் சரண்!

அவள் புரியாமல் பார்த்தபோது, அவன் வேகமாகத் தலையை சிலுப்ப நீர்த்துளிகள் பன்னீராய் அவள் முகத்தில் சிதறின.



உடனே, சிவந்த சபர்மதியின் கோபத்தைப் பார்வையாலேயே படித்தவன், ''என் விரல்தான் உன்னை., உன் விருப்பமில்லாமத் தொட மாட்டேன்னு சத்தியம் பண்ணி இருக்கு.. என் மேல இருந்து சொட்டற நீர்த் துளி என்னம்மா பாவம் பண்ணிச்சி?'' மிருதுவாகக் கேட்டான்.

அந்தக் குரலே அவள் இதயத்தை வருடி அதை ரசிக்கவும் முடியாமல், வெறுக்கவும் மனமின்றி, நெஞ்சம் தத்தளித்தது.

**''தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா...**
**நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா**
**நந்தலாலா..!''**

என்ற வரிகள் நினைவில்படர்ந்து அதை ஏற்கவும் முடியாமல், விலகவும் முடியாமல், ஒருவித உணர்வு நெஞ்சினுள் நிறைந்தது.

அவளிடமே பார்வையை பதித்திருந்த சரணுக்கோ, ''எவ்வளவு பெண்மை நிறைந்தவள் இவள்... ஏன் தன்னுள் இருக்கின்ற மென்மையான உணர்வுகளை இறுகப் புதைத்துக் கொள்கிறாள்?'' என்ற ஆதங்கம் அந்த நிமிடம் எழுந்தது.

உடனே, வேகமாக எழுந்து உள்ளே சென்று விட்டாள் அவள்.

சதானந்த் ஊருக்குச் செல்லும் நாட்கள் நெருங்கியபோது, அவன், கவிதாவைப் போய் பார்த்து வரலாமாவென்று ஒரு நாள் தன் தங்கையிடம் கேட்டான்.

''அண்ணா! அண்ணி ஏதாவது தப்பா நினைச்சிட்டா, என்ன பண்றது..?'' யோசனையுடன் கேட்டாள் சமதி.



''இந்த யோசனையைச் சொன்னதே அவதாம்மா! இப்பப்போனா எப்படியும் ரெண்டு மூணு வருஷம் ஆகும்... நாங்க திரும்பி வர! அதனாலப் பாத்துட்டுப் போகலாம்னு சொன்னா!''

''சரிண்ணா... நாங்களும் வரோம்.. இவர்கிட்ட சொல்லிடுங்க'' என்றவள் பயணத்திற்குத் தயாரானாள்.

குழந்தைகளை, மங்களத்திடம் விட்டுவிட்டு நான்கு பேரும் காரில் கிளம்பி அந்த காப்பகத்திற்கு சென்று கவிதாவைப் பார்த்தபோது, மனம் உருகிப் போனது சபர்மதிக்கு!

திருமணத்தின் போது அவளிடம் தெரிந்த வனப்பும், அழகும் தொலைந்து போயிருக்க, எங்கோ வெறித்த விழிகளுடன், எந்த உணர்வுமின்றி, பரப்பிரும்மமாய் அமர்ந்திருந்தவளைப் பார்த்தபோது, பரிதாபமாக இருந்தது.

இந்தக் கோலத்தைப் பார்த்ததால்தான் மனமொடிந்து உண்மை புரியாமல், தன் வாழ்க்கையைப் பழி வாங்க சரண் முடிவெடுத்தானோ என்று தோன்றி மனம் பரிந்து வர மறுகணமே தன்னை நோகடிக்க அவனுக்கு எந்த உரிமையுமில்லை என்ற வீம்பும் கூடவே எழுந்தது.

மூர்த்தி அவர்களை வரவேற்று பேசிக் கொண்டிருந்தபோது இப்போதெல்லாம் கவிதாவை முழுக்க முழுக்க அவனே கவனித்துக் கொள்வதாகக் கூறினான்.

சாரா, கவிதாவை ஆறுதலோடு அணைத்து உணவு கொடுத்ததைப் பார்த்தபோது, பெரிதும் ஆச்சர்யப்பட்டாள்

சமதி. இவளால் எப்படி இதுபோல் நடந்து கொள்ள முடிகிறது என்று வியப்பு வந்தது.

பிறகு திரும்பி வரும்போது, காரில் கனத்த மௌனம் மட்டுமே சூழ்ந்திருக்க, ''தேங்க்யூ சாரா..'' என்றான் சரண் அதைக் கலைத்தபடி!

''ஏன்...?'' என்றவளிடம், ''பல விஷயங்களை மறக்க முடியாம, மன்னிப்புக் கேட்டும்.. வீம்பா நினைச்சிட்டிருக்கற பலர், இருக்கிற இந்தக் காலத்துல, தன் கணவரோட முதல் மனைவின்னு தெரிஞ்சும், அவளைப்பார்த்து ஆறுதலா நடந்துட்டு வரவங்க.. உங்கள மாதிரி சில பேர்தான்! அதுக்குத்தான் இந்த நன்றி!'' அழுத்தமான குரலில் கூறினான்.

உடனே முகம் சுருங்கி விட, அவன் தன்னைத்தானே கூறுகிறான் என்பது புரிந்து வெளிப்புறம் திரும்பிக் கொண்டாள் சபர்மதி!

மறுவாரமே சதானந்தும் சாராவும் ஊருக்குக் கிளம்பி விட்டனர். சபர்மதிக்குத் தான் அவர்களின் பிரிவு தாங்க முடியாத ஒன்றாய்..!

அவர்கள் கிளம்பியதும் சிநேகாவும் வாடிப் போய்விட, அவள் மனதை மாற்ற வேண்டுமென்றே வெளியே அழைத்துச் சென்றான் சரண்.

சினிமாவிற்குப் போய்விட்டு அப்படியே ஹோட்டலில் சாப்பிட்டு முடித்து வீட்டிற்கு வந்து உடனே - உடை மாற்றி அவளை உறங்க வைக்க அவள் கதை கூறிய போதுதான், சிநேகாவிற்கு 'குட்நைட்' சொல்ல வந்தான் சரண்.



எப்போதும்போல் 'குட்நைட் குட்டிச் செல்லம்!' என்றபடி அவள் கன்னத்தில் அவன் மென்மையாக முத்தமிட்டபோது, ''அப்பா.. இருங்க!'' என்று அவனை நிறுத்தினாள் சிநேகா.

''என்னம்மா..'' என்று குனிந்தவனிடம், ''தினம் எனக்கு மட்டும் 'குட்நைட்' தரீங்க.. அம்மாவுக்குத் தரதேயில்லை! சதா அங்கிள் ரெண்டு பேருக்குமே தருவாங்க'' வெகுளித் தனத்துடன் கூறினாள்.

திடுக்கிட்டுத் திரும்பிய சமதியின் முகத்தில் பெரும் தவிப்பு! சட்டென்று அவள் மனமும், உடலும் விதிர்த்துப் போயின.

அவள் முகத்தையே இமைக்காமல் நோக்கிய சரணுக்குள், சுகமாய் ஒரு மழை மின்னல் மின்னியது. மனதிற்குள் திடீரென்று கனவுச் சிறகுகள் முளைத்துத் தடதடத்தன!

சட்டென்று ஒரு குறும்புப் புன்னகை உதடுகளில் தடம் பதிக்க, ''உங்கம்மா சரின்னு சொன்னா எனக்கும் 'ஓகே'தான்!'' என்றான் விழிகளில் புதிதாய் பரவிய கேலியுடன்.

''ஏய்... சிநேகா.. என்ன விளையாடறியா? அதெல்லாம் முடியாது'' படபடப்புடன் எழுந்து விட்டாள் சபர்மதி!

''அம்மா.. ப்ளீஸ்'' சிநேகா கெஞ்ச, அழுத்தமான காலடியோசையுடன் அவன் நெருங்க அவள் மனதிற்குள் பெரும் புயல் மையம் கொள்ள ஆரம்பித்தது. உணர்வுகளுக்கும், இதயத்துக்குமிடையே பெரும் மல்யுத்தம்!

சட்டென்று குனிந்து, மென்மையாக அவள் கன்னத்தில் தன் இதழ் பதித்து விட்டு, 'குட்நைட்....' என்று கிசுகிசுப்பான குரலில் அவன் கூறியபோது, கூண்டுக்குள் அலை மோதும் கிளியாய் மனம் சிறகொடிந்து துடித்தது.



மனதில், பழைய எண்ண அலைகள் துள்ளி துள்ளி நடந்தன.

தன் அறைக்குள் சென்ற சரணுக்கோ.. பெரும் தவிப்பு! முத்த நிழலில் இளைப்பாறி விட்டு விழித்து எழும் போதுதான் தெரிந்தது... யுத்த உணர்வுகளின் உஷ்ணத் தவிப்பு!

சபர்மதியின் மனதிற்குள் புதை குழியாய் புதைந்திருந்த ஏக்கங்களும், வேதனைகளும் அந்த நிமிடம் மெல்ல வெளி வர ஆரம்பித்தன.

உடனே மனதில் அடங்கிக் கிடந்த சோகத்தின் பாஷையாய் கண்ணீர் சரம் தொடுக்க ஆரம்பிக்க, ''ஏம்மா அழறீங்க? நான் ஒரு முத்தம் தரவா..?'' என்றபடி கன்னத்தில் 'பச்' என்று முத்தமிட்டாள் சிநேகா.

இனி, குழந்தைக்கு முன்பாக எந்த உணர்வையும் வெளிப்படுத்தக் கூடாதென்ற உறுதியுடன் அவள் உறங்கிவிட, மறுநாளே அந்த ரகசியத்தைப் போட்டு உடைத்து விட்டாள் சிநேகா.

காலையில் சரண் டிபன் சாப்பிடும்போது, அவன் மடியில் அமர்ந்திருந்தவள், ''அப்பா! நீங்க 'கிஸ்' பண்ணிட்டுப் போன உடனே அம்மா அழுதாங்க.. அப்புறம்... நான் இன்னொண்ணு குடுத்தேன். தூங்கிட்டாங்க'' கைதட்டியபடி கூறினாள்.

சமதியின் முகம் அந்தி நேரச் செவ்வானமாய் சிவந்துவிட, அவள் முகத்தையே ஒரு விநாடி அதிகமாகக் கூர்ந்தவன், ''தெரிஞ்சிருந்தா, நானே அந்த இன்னொரு முத்தத்தையும் குடுத்திருப்பேனே. என்னைக் கூப்பிட்டிருக்க வேண்டியது தானே?'' செல்லமாக அவள் தலையைக் கலைத்து விட்டபடி கேட்டான் சரண்.



அவனுடைய வார்த்தைகளால், அவளுக்குள் ஏதோ ஒரு வித மாற்றம் நிகழ்ந்துவிட, கடலுக்குள் ஆழப் புதைந் திருக்கும் விநோத ரகசியங்களைப் போல், அவள் மனதிலும் கலையாத பல நினைவுகள்!

கரைக்குள் அடங்கிய நதியாய், சலனமின்றி ஓடிக் கொண்டிருந்த தன் வாழ்க்கையில் வெள்ளப் பெருக்காய் அவன் வந்து, மனக்கரை உடைப்பதைப் புரிந்து மெல்லிய கோபம் வந்தது.

வேகமாய் கசிந்த ஒரு சீறலான மூச்சுடன், உடனே விலகிச் சென்று விட்டாள் சமதி.

மனம் போர்க்களமாகியிருந்தது! அவன் சொற்கள் ஆயுதங்களேந்தி வந்தன.. அவளுடைய தற்காப்பு வளையத்தை வேகமாய் உடைத்தெறிய முயன்றன!

எத்தனை நாட்கள் தான், தன் உணர்வுகளுடன் போராடுவது. போதாதென்று அவன் வார்த்தைகளுடன் வேறு யுத்தம் செய்வதென்றே ஆயாசம் வந்தது.

நாட்கள் சக்கரம் கட்டிய வண்டியாய்க் கடுகிச் செல்ல, சிநேகா இப்போதெல்லாம் தன் தந்தையிடம் பெரிதும் ஒட்டிக் கொள்ள ஆரம்பித்திருந்தாள்.

அவனைப் பற்றியே பேசவும் ஆரம்பித்திருந்தாள்! ஒரு கடவுளைப் போல்... ஹீரோவைப் போல் அவள் பிரமிப்புடன் சரணைப் பற்றிப் பேசும்போது, அவளுக்கு ஏனோ தவிப்பாக இருக்கும்.

அதைப் பற்றி அருணாசலத்திடம் கூறியபோது, அவர் புரிந்தது போல் சிரித்து விட்டு அவளுக்கும் புரிய வைத்தார்.

"சமதி! அப்பா வேணுங்கிற ஏக்கம் அந்தக் குழந்தை மனசில ஆழமா இருந்திருக்கு! நாமதான் அதை உணரலை! ஆனா, அவ தான் விரும்பிய உறவு கிடைச்ச உடனே, கெட்டியா பிடிச்சிட்டு ஒட்டிக்கிட்டா! இதுதான் உண்மை! நம்மாலதான் அதை ஏத்துக்க முடியலை...

"உனக்கு நான் எப்படி முக்கியமோ.. அது மாதிரிதான் சிநேகாவுக்கு மாப்பிள்ளையும்.. நீதான் அதப் புரிஞ்சிக்கணும்! மன்னிக்க முடியாத குற்றம்னு இந்த உலகத்துல எதுவுமே இல்லைடா!

"என்னடா.. அப்பா இப்படி சொல்றேன்னு நினைக்காதே! கடவுள் நமக்குக் குடுத்திருக்கிற வாழ்க்கை எத்தனை நாளைக்கின்னு யாருக்குமே தெரியாது. அதுக்குள்ளே நாமளும் சந்தோஷமாயிருந்து மத்தவங்களையும் மகிழ்ச்சியா வச்சிக்கலாம் இல்லையா?" மெதுவாகக் கேட்டார்.

"ம்.. உங்க அளவுக்கு எனக்குமன்னிச்சி மறக்கற குணத்தை ஆண்டவன் நிறையக் குடுக்கலை போலிருக்கு! ம்... என்னால எந்த முடிவையும் எடுக்க முடியலைப்பா.. ரொம்பக் குழப்பமா இருக்கேன்! பாப்போம்.. சிநேகாவுக்காகத்தான் இங்கே தங்கியிருக்கேன். அவ மட்டும் இல்லைன்னா, நினைச்சிப் பாக்கவே பயமாயிருக்கு!" வறண்ட முறுவலுடன் கூறினாள்.

"மாப்பிள்ளை தப்பு செஞ்சிட்டாருதான்... இல்லேங்கலே. ஆனா திருந்தி வந்தவங்களை மன்னிக்க மறுக்கறது கூட ஒரு வகையில பெரிய குற்றம்தான்! கோபத்தை, வெறுப்பை ஜெயிச்சிட்டா அதுதான் ரொம்ப நல்லது! கஷ்டங்களை.. ப்ரச்னைகளை, துன்பம் விளைவிக்க வந்திருக்கிறதா நினைக்காம அதையும் பாசிடிவ்வா எதிர் நோக்கப் பழகிட்டா,



வாழ்க்கையில எல்லாமே சுலபமாயிடும்" மெதுவாக அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்.



15

அந்த நிமிடத்திலிருந்து மனம் யோசிக்க ஆரம்பிக்க, விடைதெரியாப் புதிராய் நெஞ்சம் சஞ்சலமானது.

எதைப் பற்றியும் நினைக்க நேரமின்றி தன்னை ஏதாவதொரு வேலையில் ஈடுபடுத்திக் கொண்டால், நல்லதென்று தோன்ற, மறுநாளே இதுபற்றி சரணிடம் பேசினாள் அவள்.

"சிநேகாவுக்கு இரண்டரை வயசாயிடுச்சு. எனக்கும் வீட்டில பொழுது போகலை.. உங்க ஸ்கூல்லேயே 'ப்ரிகேஜி'யில அவளை சேத்துட்டு, நானும் வேலைக்குப் போகலான்னு கேட்க வந்தேன்" தயக்கத்துடன் கேட்டாள்.

"ஒரு நிமிஷம்! முதல்லே நீ ரெண்டு விஷயத்தைக் கிளியர் பண்ணிக்கணும். ஒண்ணு.. அது என்னோட ஸ்கூல் மட்டும் இல்லை.. நம்மோடது! ரெண்டாவது.. அதிலே நீ முன்னாடி மாதிரி டீச்சர் வேலைக்கெல்லாம் போக முடியாது.. வேணும்னா கரஸ்பாண்டன்ட்டோட மனைவியா, மேற்பார்வை பார்க்கப் போகலாம்! நான் சொல்றத சொல்லிட்டேன்... அப்புறம் உன் இஷ்டம்!"

இலகுவாகத் தோள்களைக் குலுக்கியபடி கூறியவன், வேகமாகக் கிளம்பி வெளியில் சென்று விட்டான்.

மறுநாளிலிருந்து, அவன் கிளம்பும் போதே இருவரும் பள்ளிக்குக் கிளம்பினர். சிநேகாவை கிண்டர்கார்டன்



பள்ளியில் விட்டுவிட்டு, சபர்மதி மட்டும் சுற்றி வந்தபோது, பழைய நண்பர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் அவளை சூழ்ந்து கொண்டார்கள்.

"சபர்மதி! அன்னிக்குப் போனவதான்.. இப்பதான் வழி தெரிஞ்சதா? நீ வருவேன்னு நாங்க எல்லாரும் காத்திட்டிருந் தோம். பிருந்தாதான் எல்லா விபரமும் சொன்னா..! அன்னிக்கு நம்ம கரஸ்பாண்ட்டென்ட்டைப் பார்த்ததும் நீ மயக்கம் போட்டு விழுந்த காரணம் அப்புறம்தான் புரிஞ்சது."

ஒரு டீச்சர் கூற, "பாவம் பிரகாஷ்! உன் பின்னாடியே சுத்திட்டிருப்பார்... உனக்கு கல்யாணமாகி குழந்தையும் இருக்குன்னு தெரிஞ்சவுடனே மிரண்டுட்டாரு. கொஞ்ச நாள் சோகமா அலைஞ்சாரு. இப்ப நார்மலாகி, வேற ஒரு பொண்ணு பின்னாடி சுத்திட்டிருக்காரு" என்றாள் பிருந்தா ஏளனத்துடன்.

முன்பு அவள் இங்கு வேலை செய்து கொண்டிருந்தபோது சக ஆசிரியர் என்ற முறையில் பேசினால் பிரகாஷ் வழிசலாக சுற்றி சுற்றி வந்ததால் அவளும் பிருந்தாவும் அவனிடமிருந்து எப்போதும் ஒதுங்கியே இருப்பார்கள்.

இன்று, அவளைப் பார்க்க நேர்ந்தபோது, மரியாதையுடன் வணங்கி விட்டு விலகிச் சென்று விட்டான் அவன்.

மதியம் குழந்தையுடன் காரில் வீட்டிற்குச் சென்றபோது, பழைய நண்பர்களை சந்தித்த உற்சாகம் மனமெங்கும் நிறைந்திருக்க, மனதிற்குப் பிடித்த பாடலொன்றை முணு முணுத்தபடி அவள் உடைமாற்றிக் கொண்டிருந்தபோது, அந்த அறைக் கதவு தட்டாமலே திறக்கப்பட, "என்னம்மா



ஸ்நேகா?" என்றபடி திரும்பியவள், அங்கு சரணை எதிர்பார்க்காததால், ஒரு கணம் விதிர்த்துப் போனாள்.

அவனுக்கும் பெரும் தர்மசங்கடமாகி விட, "சாரி.. சிநேகாவைச் சாப்பிட அழைக்க வந்தேன்" கூறிவிட்டு அவன் வேகமாகக் கதவைச் சாத்தி விட்டுச் செல்ல, ஓடிச் சென்று தாழ்ப்பாள் போட்டுவிட்டு, அப்படியே சாய்ந்தவளுக்குள் படபடப்பு அடங்க வெகு நேரம் பிடித்தது.

சரணும் அதே நிலையிலிருந்தான். தந்த மேனியும், அது தந்த சுக நினைவுகளும் மனதில் பேயாட்டம் போட்டன! மறக்க முடியாமல் மருவக் காதல் கொண்டது மனது!

அன்று முழுவதும், சமதி அவன் முன்னால் வருவதையே முற்றிலுமாகத் தவிர்த்தாள். ஆனால் சிநேகாவிற்காக அவனைச் சந்தித்தே ஆக வேண்டிய கட்டாயம் ஏற்பட அதை சகித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. ஆனாலும் அவள் தலை நிமிரவேயில்லை.

பிறகு, அவள் பள்ளிக்குச் செல்வது தொடர்கதையாகி விட, இப்போதெல்லாம் கணக்குகளைப் பார்வையிடுவதிலும், பள்ளியின் நலனில் அக்கறை எடுத்து, அதன் தரத்தை முன்னேற்றுவதற்கான பணியிலும் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக் கொண்டாள் சபர்மதி.

பெற்றோர்களுக்காகவே ஒரு அஞ்சல் பெட்டி வைக்கப் பட்டது! தங்கள் குறையாக நினைக்கின்ற விஷயங்களை, அதில் எழுதிப் போடலாமென்ற அறிவிப்பும் அருகிலேயே இருந்தது.

மாதா மாதம், அதைத் திறந்து பார்த்து, அவர்களின் குறை தீர்க்க ஆவனசெய்யுமாறு ஏற்பாடு செய்திருந்தான் சரண்.

அதன்படி, கழிப்பறையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

பள்ளி கேண்டீன் ஆர்டரையும் நல்ல கேடரிங் சர்வீஸிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்திருந்தாள் அவள்.

அருணாசலம் அந்த மாதம் வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்டதால், அவரை நிர்வாகியாக நியமிக்க அனுமதிக்கலாமா என்று சபர்மதியிடம் ஒருநாள் ஆலோசனை கேட்டான் சரண்.

அன்று பள்ளியிலிருந்து திரும்பியவன், "நாம ரெண்டு பேரும் உங்க அப்பாவைப் போய்ப் பாத்துட்டு வரலாமா? ரிடையர் ஆகி வீட்டில் இருக்கறதுக்கு எப்படியும் போர் அடிக்கும். அதனால நம்ம ஸ்கூல்லேயே மேனேஜரா அப்பாயிண்ட் பண்ணிடலாம்னு நினைக்கிறேன். ஆனா அவர் கிட்டப் பேசறதுக்கு முன்னாடி உன்னோட ஒபீனியன் என்னன்னு தெரியணும்!" யோசனையுடன் அவளையே கூர்ந்தபடி கேட்டான்.

சட்டென்று, அவள் முகம் மலர்ந்து முழு நிலவாய் பிரகாசித்தது.

"நல்ல யோசனைதான்! அப்பாவுக்கும் ஒரு மாற்றமாக இருக்கும். கேட்டுப் பார்க்கலாம்" என்றாள் உற்சாகத்துடன்.

பிறகு இருவருமாகச் சென்று அவரிடம் பேச, அவரும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார்.

"நான் ஏன் உங்களைப் பொறுப்பேற்க சொல்றேன்னா சென்னையில, நம்ம எக்ஸ்போர்ட் கம்பெனிய இப்போ, சபர்மதி ஃப்ரெண்ட் சீதாவோட அண்ணன் வெங்கடேஷும்,



என்னோட கல்லூரி நண்பன் லெனினும் தான் பாத்துக்கறாங்க...

"இங்க ஸ்கூல் நிர்வாகத்தை பார்க்க ஆரம்பிச்சதிலிருந்து என்னால அங்கே போக முடியலை.. இப்ப நீங்களும், என் ஸ்தானத்துல இருந்து சபர்மதியும் ஸ்கூலைப் பார்த்துக்கிட்டா, சென்னைக்கு நான் நிம்மதியா போயிட்டு வருவேன்" சிறுமுறுவலுடன் முடித்தான்.

"நானே கேக்கணும்னு நினைச்சிட்டிருந்தேன்... அந்த எக்ஸ்போர்ட் கம்பெனி என்னாச்சின்னு! நாங்க பாத்துக்கறோம் மாப்பிள்ளை! நீங்க கவலைப்படாதீங்க.. போயிட்டு வாங்க!" மகிழ்ச்சியுடன் ஒத்துக் கொண்டார் அவர்.

பிறகு வந்த நாட்களில், அருணாசலம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள, மாதத்தில் ஒரு வாரம் போல் சென்னைக்கு சென்று தங்கி, தொழிலை கவனிக்க ஆரம்பித்தான் சரண்.

சிநேகாதான், அவன் பிரிவைத் தாங்க முடியாமல் தவித்துப் போனாள். எப்போது பார்த்தாலும் தந்தையைப் பற்றிய நினைவிலேயே இருந்தாள்.

அப்படிப் போய்விட்டு வரும் போதுதான் ஒருமுறை அவனுடன் கூடவே வந்தாள், சரணுடைய நண்பன் லெனின் தங்கை செலினா!

சரண் அவளை அறிமுகப்படுத்தியதுமே, ஏனோ அவளை மிகவும் பிடித்துப் போனது சபர்மதிக்கு!

குள்ளமாக, வெகுளித்தனம் மாறாத முகத்தில் குண்டுக் கன்னங்களுடன், சிறு பெண்ணாய் தோற்றமளித்தவள்,



கல்லூரியில் முதல் வருடம் படிப்பதாகக் கூறியபோது, அவளால் நம்பவே முடியவில்லை.

சிநேகாவும் அவளுடன் ஒட்டிக் கொண்டு விட, தினமும் அவளும் பள்ளிக்கு வர ஆரம்பித்தாள்.

அப்போதுதான் ப்ரகாஷின் பார்வை, அந்தச் சிறு பெண்ணின் மேல் விழ ஆரம்பித்தது.

ஊருக்கு வந்த ஒரு வாரத்திலேயே பள்ளிக்கு வருவதில் அவள் காட்டிய உற்சாகத்தை சபர்மதி புரிந்து கொள்ளவில்லை.

டிரைவர் வராத நாட்களில் அவள் கஷ்டப்படுவதைக் கண்ட சரண், சபர்மதிக்கு டிரைவிங் கற்றுத்தர ஏற்பாடு செய்திருந்தான்.

சமதியும், செலினாவும், ஒன்றாகச் சென்று கார் ஓட்டக் கற்றுக் கொண்டனர். சமதி முன்பே பழக ஆரம்பித்திருந்ததால் நன்றாக ஓட்ட ஆரம்பித்திருந்தாள். புதிது புதிதாக எல்லாவற்றையும் கற்க ஆரம்பித்தபோது, தன்னம்பிக்கையும் தைரியமும் எளிதாய் கைவசப்பட்டன.

அவளுக்காகவென்று ஒவ்வொரு விஷயத்தையும் பார்த்துப் பார்த்து அக்கறை எடுத்து அவன் செய்தபோது, அதை ஏற்காமலிருக்கவும் அவளால் முடியவில்லை.

அந்த வாரத்தில் ஒருநாள், சென்னையிலிருக்கும் ஒரு அனாதை ஆசிரமத்திலிருந்து, வீட்டிற்கு ஃபோன் வந்தது.

சரண் வெளியில் சென்றிருந்ததால், என்ன விபரம் என்று அவள் கேட்டபோது, "மேடம்! உதய் சரண் சாருக்கு அடுத்த வாரம் பிறந்த நாள் வருதில்லையா? எப்பவுமே அன்னிக்கு முழுக்க அவர் செலவுல நம்ம ஆசிரமத்துல இருக்கற குழந்தைகளுக்கு சாப்பாடு போடறது சாரோட பழக்கம்!



அதான், ஞாபகப்படுத்தலாம்னு பண்ணினேன்.. சார் வந்தா சொல்லிடுங்க" என்று கூறி வைத்தார்.

எந்தத் தேதியன்று அவர் கூறியது நினைவிற்கு வர, சரண் வீட்டிற்கு வந்ததும் ஆசிரமத்திலிருந்து போன் வந்ததாக மட்டும் கூறினாள் அவள்.

செலினாவும், அவளுமாகச் சேர்ந்து, அவனுக்கென்று ஒரு கேக் ஆர்டர் செய்துவிட்டு, பொக்கேயுடன் காத்திருந்தனர்.

முதல் நாளிரவு, அவன் வருவதற்குத் தாமதமாகவே சிநேகா உறங்கி விட்டாள்.

பதினோரு மணிக்கு அழைப்பு மணி ஒலித்ததும், வேகமாகச் சென்று அவள் கதவைத் திறந்தபோது, வாசலில் நின்றிருந்த சரண் மிகவும் களைத்துத் தெரிந்தான்.

அவனுக்கு டிபன் வைத்துவிட்டு, சிநேகாவுடன் உறங்கிக் கொண்டிருந்த செலினாவை எழுப்பியவள், விருந்தினர் அறையில் தயாராக வைக்கப்பட்டிருந்த பொக்கேயை எடுத்து அவள் கையில் கொடுத்து விட்டு தூங்கிக் கொண்டிருந்த சிநேகாவை எழுப்பினாள்.

சிணுங்கியபடி எழுந்த குழந்தையிடம், "செல்லம்.. உங்கப்பாவுக்கு இன்னிக்கு பர்த்டேன்னு சொன்னேன் இல்லை.. வாடா.. போய் 'ஹாப்பி பர்த்டே' சொல்லலாம்" என்றபோது, அவளும் புரிந்து கொண்டு தூக்கம் கலைந்து உற்சாகமானாள்.

சரியாக மணி பன்னிரண்டு அடித்தவுடன் அவனுடைய அறைக்குச் சென்றபோது, கதவின் கீழ் தெரிந்த வெளிச்சம் அவன் விழித்திருப்பதை உணர்த்தியது.

மெதுவாகக் கதவைத் தட்டிய சபர்மதி, சிநேகாவையும், செலீனாவையும் முன்னால் நிறுத்தி விட்டுப் பின்னால் நின்று கொண்டாள்.

உடனே, கதவைத் திறந்த சரணின் முகம் பதட்டமாய்!

இந்த நேரத்தில் யார் கதவைத் தட்டுவது என்ற பயமும், தன் பிறந்த நாள் ஒருவருக்கும் தெரியாதே என்ற உணர்வும், அவனை ஏதேதோ நினைக்கச் செய்தன.

பதறிப் போய் நின்றவனிடம், ''ஹேப்பி பர்த்டேப்பா..!'' என்றபடி பொக்கேயைக் கொடுத்தாள், சிநேகா.

''அண்ணா! மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ்!'' என்றபடி செலினா கைகளைப் பிடித்து குலுக்க, உடனே குனிந்து மகளைத் தூக்கிக் கொண்டான் அவன்.



16

அவன் விழிகள் ஒருவித எதிர்பார்ப்புடன் சபர்மதியிடம் பதிய, ''ஹேப்பி பர்த்டே'' மென்குரலில் கூறியவள், செலினாவிடம் கண்ணாலேயே ஜாடை காட்டினாள்.

உடனே அவள் ''அண்ணா! ஒரு நிமிஷம் எங்க கூட வாங்களேன்.. ஒரு சின்ன சர்ப்ரைஸ்!'' என்று அழைத்தாள்.

அவர்களைப் பின் தொடர்ந்தவன், அந்த அறையின் நடுவிலிருந்த கேக்கைப் பார்த்ததும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தான்.

உடனே அவர்கள் பிறந்த நாள் பாட்டுப்பாட கேக் வெட்டியதும், முதல் துண்டை எடுத்து சிநேகாவிற்கு



ஊட்டியவன், அடுத்ததை எடுத்துக் கொண்டு சபர்மதியை நோக்க, ''ம்.. அம்மாவுக்கும் ஊட்டுங்கப்பா..'' கைதட்டியபடி கூறினாள் சிநேகா.

சட்டென்று, நாணேற்றிய வில்லாய் விரைத்துப் போன சபர்மதியின் அங்க அசைவுகளையும், இறுகிய முகத்தையும் கவனித்தவன், கேக்கை அவள் கையிலேயே கொடுத்து விட்டான்.

பிறகு அவள் கேக்கை வெட்டி எடுத்து வைத்து விட்டு வெளியில் வந்தபோது அறை வாசலிலேயே அவனை மறித்தவன், ''சிநேகா எனக்கு பொக்கே குடுத்தா... கேக் செலீனாவோட ஐடியாவாம்! உனக்கு மட்டும் எந்தப் பரிசும் கொடுக்கத் தோணல இல்லை.. இந்த வெறுப்பு கொஞ்சம் கூட மாறலை... என்னை மன்னிக்கவே மாட்டே.. ம்..?'' ஆழமான குரலில் கேட்டான்.

''இல்லை.. அப்படி எல்லாம் இல்லை..'' தடுமாறியவளின் அருகில் வந்தவன், ''அப்போ குடுத்துடு.. நீ நினைச்சா நான் விரும்பியதை இப்பக் கூடக் குடுக்கலாம்.. எல்லாத்தையும் விட விலை மதிப்பில்லாத பரிசு அது!'' குறுகுறுத்த விழிகளுடன் குறும்பாகக் கூறினான்.

என்ன செய்வதென்று புரியாமல் நிலைகுலைந்து நின்ற நேரத்தில் ''அம்மா.. தூக்கம் வருது.. வாங்க..'' என்றபடி வந்தாள் சிநேகா.

உடனே, தப்பித்தோம் பிழைத்தோம் என்று அவனிடமிருந்து விலகியவள், ''தோ வரேன்டா செல்லம்!'' என்றபடி குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்.



''ஒரு நிமிஷம்.. குட்டிச் செல்லம்.. அம்மா எனக்குப் பர்த்டே ப்ரசன்ட் தரவேயில்லை.. கேட்டா ஓடறாங்க!'' குறும்புக் குரலில் குற்றம் சாட்டினான் சரண்.

''அம்மா.. அப்பாவுக்கு குடுத்துடுங்கம்மா... பாவம் இல்லை?'' கைகளை விரித்து அவள் கேட்டபோது, ''நாளைக்குத் தரேன்மா'' என்றபடி தங்கள் அறைக்குள் சென்று விட்டாள் சமதி.

நமட்டுச் சிரிப்புடன் அவளையே தொடர்ந்த விழிகளுடன் அங்கு நின்றிருந்த சரணின் முகம், ஏமாற்றமானது.

மறுநாள், அவனுக்குப் பிடித்த மெனுவாக செய்யச் சொன்னவள், கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்துவிட்டு பிரசாதம் எடுத்து வந்து அவனிடம் தந்தபோது முகத்தில் எந்த உணர்ச்சியுமின்றி அதைப் பெற்றுக் கொண்டான் சரண்!

அன்று மாலையில், அருணாசலம் அவர்களை டின்னருக்கு அழைத்திருக்க, அம்மாவுடன் சேர்ந்து, சமையலுக்கு உதவியவளை புடவையைப் பிடித்து இழுத்து அழைத்தாள் சிநேகா.

''என்னடா செல்லம்... ஏன் இப்படி வம்பு பண்றே..?'' என்றபடி அவள் ஹாலுக்குச் சென்றபோது, அருணாசலம் அவளை அழைத்தார்.

''என்னம்மா.. ஏதோ பிறந்த நாள் பரிசு வாங்கி வச்சிட்டு, இன்னும் மாப்பிள்ளைக்குக் குடுக்காம இருக்கியாம்... செலினாவும், சிநேகாவும் சொல்றாங்க..'' என்று கேட்டார்.

சட்டென்று முகம் சிவந்து சூடேற, இரு கன்னங்களிலும் அழகிய இளஞ்சிவப்பு ட்யூலிப் மலர்கள் மலர, அவள்



திடுக்கிட்டுத் திரும்பியபோது, குறும்புடன் சிரித்துக் கொண்டு நின்றிருந்தாள் செலீனா.

சிநேகா ஏதாவது உளறியிருக்க வேண்டுமென்பதை யூகித்தபடி ''இல்லப்பா.. மறந்துட்டேன்... அப்புறமா தரேன்.. வீட்ல இருக்கு'' உளறிக் கொட்டியவள், வேகமாக உள்ளே சென்று விட்டாள்.

பிறகு, பிறந்த நாள் வாழ்த்து கூறுவதற்காக கனடாவிலிருந்து பேசிய சதா, அவளிடமும் பேசினான்.

''சமதி.. எப்படிடா இருக்கே..? உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லலாம்னு தான் போன் பண்ணினேன்.''

''என்னண்ணா? அண்ணி, விஜய் எல்லாரும் எப்படி இருக்காங்க?''

''நல்லாருக்காங்க..! கவிதா விஷயமா உன்னோட பேசலாம்னு நினைச்சேன். சென்னையில ஒரு பெரிய 'சைக்யாட்ரிஸ்ட்' இருக்காராம்... அவரால சரி பண்ண முடியாத கேஸே இல்லையாம்.. இங்கே என் ஃப்ரெண்ட் சொன்னாரு.. சரண் கிட்டே சொல்லி, மூர்த்தியையும் கூடவே அழைச்சிட்டு வந்து அவர்கிட்டே காண்பிச்சி ட்ரீட்மெண்ட் பண்ணலாமே! நான் 'ஈமெயில்லே அவர் அட்ரஸும் போன் நம்பரும் அனுப்பறேன்னு சொல்லு..''

''சரிண்ணா... ட்ரை பண்ணிப் பார்ப்போம். அவங்க மட்டும் சரியாகிட்டா.. இவருக்கு ரொம்ப நிம்மதியா இருக்கும்... இப்பக் கூட மாசம் ஒரு தடவை போய் அவங்களைப் பாத்துட்டு வந்துட்டுதான் இருக்காரு... நான் சொல்றேன்'' என்றாள் சமதி.

அன்றிரவு, வீட்டிற்குத் திரும்பி வந்தபோது, மண்ணும், விண்ணும் மழையெனும் மௌனப் பரிபாஷையில் பேசிக் கொண்டிருந்தன.

சாரலாய் தூவிய மழையை ரசித்தபடி, யோசனையுடன் அவள் ஜன்னலருகே நின்றிருந்தபோது கவிதாவின் ஞாபகம் மனதில் வர, காதருகில் கீறலாய் ஒரு குரல் கேட்டது.

''என்னை ஏமாத்திட்டே இல்லை? ஹா்ம்.. எவ்வளவு வெறுப்பு மனசுல நிறைஞ்சிருந்தா, இத்தனை தடவை நான் கேட்டும் தர மறுத்திருப்பே... சாரி.. இனிமே நான் உன்னைத் தொந்தரவு செய்ய மாட்டேன்... குட்நைட்!'' கூறிவிட்டு விருட்டென்று திரும்பினான்.

''ஒரு நிமிஷம்..!'' என்றவள், சதானந்த் அவளிடம் போனில் கூறிய விபரத்தைப் பற்றிச் சொல்லும்போதே, அவன் விழிகளில் சட்டென்று ஒரு மலர்ச்சி வந்தது.

''ம்.. நான் உடனே ஏற்பாடு பண்றேன்'' என்றவன் அவள் புறம் திரும்பாமலே வெளியேறினான்.

ஆனால், அவள் மனம் மட்டும் பெரும் சஞ்சலமாய்!

சமீப காலங்களில், அவனை வெறுக்க வேண்டும் என்ற எண்ணமே, தனக்கு வராததும், அப்படியே வெறுக்க நினைத்தாலும், அந்த நினைவே ஆதவனைக் கண்ட பனியாய், உடனே மறைவதும், நினைவிற்கு வந்தது.

ஆனால், அவனை ஏற்றுக் கொள்ளவும் மனம் முரண்பட்டு நிற்க, இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்துப் போனாள் அவள்.



மறுவாரமே, சரண் தன் பெரியம்மாவிடம் பேசி, மூவரையும் சென்னைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தான்.

சென்னையில், ஒரு வீடு எடுத்துத் தங்கி அவர்கள் சிகிச்சைக்காக செய்ய வேண்டிய உதவிகளை வெங்கடேஷும், லெனினும் கவனித்துக் கொண்டனர்.

கவிதாவுக்கு அந்த மருத்துவமனையில் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. நரம்பு சம்பந்தமான நிபுணர்களும் மனநல மருத்துவர்களும் அவளைப் பரிசோதித்து குணப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

அந்த வாரத்தில் அது சம்பந்தமாக, சரண் சென்னைக்குச் சென்றிருந்தான்.

அன்று, செலினாவின் துணையுடன், சிநேகாவை பார்க்கிற்கு விளையாட அழைத்துச் சென்றாள் சபர்மதி.

சரண் இல்லையென்றால், சிநேகா மட்டுமல்லாது, இப்போது எல்லாம் தானும் இனம் புரியாமல், ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படுவதை அவள் உணர ஆரம்பித்திருந்தாள்.

குழந்தையின் மனநிலையை மாற்றவே, பீச் பார்க் என்று அவள் அழைத்துச் சென்றிருந்தபோது, பார்க்கில் மற்ற குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருக்க, செலினாவுடன் பேசிக் கொண்டிருந்தாள் அவள்.

''அக்கா! நான் ஒரு விஷயம் கேட்டா, தப்பா நினைச்சிக்க மாட்டீங்களே? நீங்களும், அண்ணனும் எவ்வளவு அழகான ஜோடி தெரியுமா? அதோட, உங்களுக்கு சிநேகா வேற ஒரு



போனஸ் மாதிரி இருக்கா... ஆனா ரெண்டு பேரும் இத்தனை வருஷமா பிரிஞ்சு இருந்தது எனக்கு ரொம்ப ஆச்சர்யம்...

''எங்கண்ணா, வெங்கடேஷ் அண்ணால்லாம் கூட உங்களைப் பத்தி சொல்லியிருக்காங்க. கீதாக்காவுக்கு நீங்க ஃப்ரெண்ட்டாமே.. அவங்க வெளிநாட்டுக்குப் போறதுக்கு முன்னாடி நாங்க எல்லோரும் ஏதாவது ஃபங்ஷன், கெட் - டு - கெதருக்காக ஒன்னா சேரும் போதெல்லாம், உங்களைப் பத்தியேதான் அவங்க பேசிட்டிருப்பாங்க..

''எல்லாருக்கும் உதவி பண்றவரு.. அனாதை ஆசிரமங்களுக்குன்னு வருஷா வருஷம் பணம் ஒதுக்கி நல்லது செய்யணும்னு நினைக்கிற, நல்ல மனசு இருக்கிற சரண் அண்ணா இப்படித் தனியா இருக்காங்களேன்னு நாங்க எல்லாருமே வருத்தப்படுவோம்.

''நாங்களும் எவ்வளவோ பேசிப் பார்த்துட்டோம்னு எங்கண்ணா கூடச் சொல்லுவாங்க. ஆனா இப்ப எல்லாம் சரியாகி நீங்க ரெண்டு பேரும் சேர்ந்ததுமே, எங்க எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷம்!

''ஆனா, இப்படி சிநேகா மேலயும் உங்க மேலயும் இந்த அளவுக்கு உயிரா இருக்கிற அண்ணா.. ஏன் அப்படி?'' கேள்வியுடன் நிறுத்தினாள்.

ஒரு கணம், என்ன சொல்வதென்று புரியாமல் தவித்தவள், ''அதெல்லாம் சொன்னா உனக்குப் புரியாது செலீனா! நீ சின்னப் பொண்ணு!'' என்றபடி மெலிதாக முறுவலித்தாள் சமதி.




''என்கிட்ட சொல்ல மாட்டீங்க, இல்லை.. ஒரு வேளை சரண் அண்ணா, நீங்க பிரிஞ்சிருந்த காலத்துல வேற யாரையாவது கல்யாணம் செஞ்சிக்கிட்டிருந்தா, என்ன பண்ணியிருப்பீங்க?''

சட்டென்று ''அவர் அந்த மாதிரியெல்லாம் செய்ய மாட்டாரு! அவ்வளவு மோசமான ஆளில்லை, உங்க சரண் அண்ணா!'' என்று கூறிவிட்டாள்.

தன்னையுமறியாமல் அவனுக்கு ஆதரவாகத் தன் இதழ்கள் பேசியதை அவளாலேயே நம்ப முடியவில்லை.

''ஓ...'' என்று கூச்சலிட்ட செலீனா, ''பார்த்தீங்களா அண்ணா மேல எவ்வளவு அன்பு வச்சிருக்கீங்க... நீங்க ரெண்டு பேரும் ரொம்பப் பொருத்தமான ஜோடிக்கா!'' உற்சாகத்துடன் கூறினாள்.

சட்டென்று அவளுக்குள் ஒருவித ஏக்கம் பரவியது.



17

மறுநாள், சரணிடம் இந்த விஷயத்தை செலினா போட்டு உடைப்பாளென்று சமதி எதிர்பார்க்கவில்லை.

அன்றிரவு அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, ''அண்ணா! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? நீங்க அங்கே இருந்தாலும், அக்கா உங்களையே தான் நினைச்சிட்டிருக்காங்க'' நமட்டுச் சிரிப்புடன் கூறினாள் செலீனா.

"ம்.. நம்ப முடியலையே..!" இருபுருவங்களும் நெரிய, ஒற்றைப் புருவம் உயர்த்திக் கேட்டான் சரன்.

"அன்னிக்கு நாங்க பீச்சுக்குப் போயிருந்தோமா, நானும் சிநேகாவும் விளையாடிட்டிருந்தோம். அக்கா மட்டும் கரையிலே உக்காந்து மணல்லே ஏதோ எழுதிட்டிருந்தாங்க.. நான் என்னன்னு போய் மெதுவாய் பார்த்தா அங்கே 'உதய்'ன்னு உங்க பேர் எழுதி இருக்குண்ணா.. ஆனா கொஞ்ச நேரத்துல அலை வந்து அவங்க எழுதினதை அழிச்சிடுச்சி!" சோகமாக முடித்தாள் செலீனா.

சட்டென்று உயர்ந்த சரணின் பார்வையில், மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ந்திருந்தன.

அர்த்தச் செறிவு மிகுந்த பார்வையும், சொற்களின் சுகப்பிரசவம் இல்லாத மௌனமும், அங்கு சில நிமிடங்கள் பலமாய் ஆட்சி செய்தன.

ஒற்றைப் பார்வையால, தன் மனதையே பறித்துச் செல்லுகின்ற சக்தி அவனுக்கிருப்பதை, சபர்மதி இன்றுதான் உணர்ந்தாள்!

சட்டென்று விழிகளை இறுக மூடியவளுக்குள், பழைய நாட்களின் பதிவுகள் கவிதையாய் உலா வரத் துவங்க ஆழ்மனதில் புதைந்திருந்த நேசவிதை மென் துளிர் விட ஆரம்பிப்பதை உணரும் போதே செலினாவின் குரல் அவளைக் கலைத்தது.

"அதுமட்டுமில்லைன்னா! உங்களை ஒரு வார்த்தை சொன்னா கூட, விட்டுக்குடுக்கவே மாட்டேன்றாங்க.. அக்காவுக்கு உங்க மேல ரொம்ப நம்பிக்கை... தெரியுமா?"



என்றவள் பார்க்கில் தாங்கள் இருவரும் பேசியதை விலாவாரியாக விளக்கினாள்.

அவள் கூறும்போதே, பெருமையுடன் இல்லாத சட்டை காலரை தூக்கி விடுவது போல் அவன் பாவனை செய்ய சட்டென்று சிரித்தபடி குனிந்த சபர்மதிக்கு புரையேறி விட்டது.

அவசரமாக எழுந்து இடக்கையால் அவள் தலையில் அவன் தட்டியபோது, "அண்ணா... பாத்து! பாவம் அக்கா.. இதான் சாக்குன்னு இப்படி வேகமாகத் தட்டறீங்க! வாடா சிநேகா... அப்பா சாரி கேட்கட்டும்... நாம போகலாம்" என்றபடி குழந்தையை அழைத்துக் கொண்டு கை கழுவச் சென்றாள்.

உடனே அவளருகில் குனிந்தவன், "ரொம்பத் தேங்க்ஸ்.. என் மேல் ப்ரியம் இருக்கிற மாதிரி.. என்னை விட்டுக் கொடுக்க மனசில்லாத மாதிரி.. செலினாகிட்டே நடிச்சதுக்கு!" என்றபடி வேகமாக எழுந்து சென்றான்.

'இல்லை.. நான் நடிக்கவில்லை!" என்று கூற வேண்டும் போல்..!

தன் சுய விருப்பத்தை கௌரவத்தை எல்லாம் விட்டு விட்டு தன்னை இழந்து இப்படி சலனப்பட்டு நிற்பது, தான் தானா என்ற கேள்வி மனதில் எழ, சட்டென்று ஒருவித ஆயாசம் மனதில் பரவியது.

பிறகு வந்த நாட்களில், அவனிடம் இனம் புரியாத ஒரு இறுக்கமும், விலகல் தன்மையும் தெரிந்தன.

கவிதா விஷயமாக, அடிக்கடி அவன் சென்னைக்குச் செல்ல வேண்டி இருந்தது. அவளுடைய உடல் நிலையில் பெரும் முன்னேற்றம் தெரிந்ததாக, மூர்த்தி போனவாரம் போன் செய்திருந்தான்.



மனதிற்கு நிம்மதியாக இருந்தது. அவளுக்கு எப்படியாவது சரியாகி விட்டால் நல்லதென்று தோன்றியது.

அன்று, பள்ளியிலிருக்கும் போது, அருணாசலம், அவளுக்கு போன் செய்திருந்தார்.

"என்னப்பா..? இன்னிக்கு காலையில இருந்து உங்களை எதிர்பார்த்துட்டிருக்கேன்.. வரலையா?" இயல்பாகக் கேட்டாள் சமதி.

"இல்லைடா.. நான் கிளம்பும்போது அம்மா திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துட்டா.. அதான் ஆஸ்பிடல்லே அட்மிட் பண்ணியிருக்கேன். நீ உடனே வரமுடியுமா? மாப்பிள்ளை வேற இந்த சமயத்துல ஊரிலே இல்லை.. ஸ்கூல்லே நீயாவது இருக்கணுமே.. அதான் யோசனையா இருக்கு..!" கம்மிய குரலில் கேட்டார்.

ஒரு நிமிடம் அவள் உலகமே ஆடிப் போனது.

"நான் உடனே கிளம்பி வரேன்ப்பா.. அதுக்கு ஏன் இவ்வளவு தயக்கம்ப்பா! இங்கே யாராவது பார்த்துப்பாங்க" என்றவள் பிரின்சிபாலிடம் விபரத்தைக் கூறிவிட்டு உடனே செலினாவுடன் கிளம்பினாள்.

மருத்துவமனைக்கு சென்றிருந்தபோது, எல்லா டெஸ்ட்களும் எடுக்கப்பட்டு, ஐசியூவில் அனுமதிக்கப் பட்டிருந்தார் மங்களம்.

சுற்றிலும் மருத்துவ உபகரணங்கள், ட்யூப்கள் என்று சூழ்ந்திருக்க, உணர்வின்றி படுத்திருந்தவரைப் பார்த்தபோது உடைந்து போய் அழ ஆரம்பித்தாள் அவள்.



உடனே, செலீனா போன் செய்து சரணிடம் கூறிவிட, அவன் உடனே கிளம்பி விட்டான்.

அன்று மாலையே வந்துவிட்ட சரன் எல்லாவற்றையும் பொறுப்பேற்றுக் கொள்ள, செலினா சிநேகாவை கவனித்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் டாக்டர்கள் மங்களத்திற்கு 'கிட்னி ஃபெயிலியர்' என்று கூறி மாற்று சிறுநீரகம் பொருத்த வேண்டும் என்றபோது, தந்தையின் தோளில் சாய்ந்து கண்ணீர் வடித்த சபர்மதியைக் கவலையுடனும் வேதனையுடனும் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அந்த நிலைமையிலும், ஒரு ஆறுதலுக்குக் கூட அவள் தன்னை நெருங்காதது அவன் இதயத்தில் சம்மட்டி அடியாய்!

பிறகு டாக்டர்களிடம் பேசியவன், உடனே அவருக்கு ஆபரேஷனுக்கு ஏற்பாடு செய்தான்.

சபர்மதி, தன் கிட்னியைத் தர முன் வந்தபோது தடுத்தவன், தான் எல்லாம் பார்த்துக் கொள்வதாகவும், அவளை கவலைப்படாமலிருக்கும்படியும் ஆறுதல் கூறினான்.

பிறகு வந்த நாட்கள் இருண்ட பொழுதுகளாய் சபர்மதிக்கு ஒருவித பயத்தை விளைவிக்க, அவளையும் தேற்றி, குழந்தையையும் கவனித்து, பள்ளி வேலைகளையும் அவன் பார்த்துக் கொண்டபோது, அவளால் அவனை மெச்சாமலிருக்க முடியவில்லை.

அருணாசலமும், மருமகனின் அன்பினாலும், அவன் செய்த உதவிகளாலும் பெரிதும் நெகிழ்ந்து போயிருந்தார்.

ஒரு மாதத்திற்குப் பிறகு, மங்களம் உடல் நிலை தேறி வீட்டிற்கு வந்தபோதுதான், சபர்மதியால் நிம்மதியாகவே மூச்சுவிட முடிந்தது.

வீட்டிலேயே எப்போதும் மங்களத்துக்குத் துணையிருக்க, ஒரு நர்ஸையும் அவன் ஏற்பாடு செய்தபோது, அவனிடம் தான் பெரும் நன்றிக்கடன் பட்டிருப்பது, சபர்மதிக்குப் புரிந்தது.

ஒருநாள், தனிமையில் அவனிடம் நன்றி சொன்னபோது "அவங்க எனக்கும் அம்மா மாதிரிதான்! சின்ன வயசிலேயே அம்மாவை இழந்தவன் நான். அம்மாவோட அனுசரணை இல்லாமலேயே வளர்ந்தவன்! அந்தக் கஷ்டம் நீயும் பட.. நான் விடமாட்டேன்" உறுதியுடன் கூறினான் சரண்.

அவளுடைய விழிகள் நீரால் நிறைந்தன. இதயம் கனத்துப் போனது.

மனக்குடம் நன்றியிலும் வேதனையிலும் ததும்பி, கண்ணீராய் சிதறின.

சட்டென்று அவள் சோகம் துடைக்க வேண்டுமென்று எழுந்த ஒரு ஆர்வத்தையும், உயர்ந்த கைகளையும் அடக்கிக் கொண்டவன், "சமதி! உன்னைப் பெரிய தைரியசாலின்னு நினைச்சிட்டிருந்தேன். ப்ளீஸ்.. கண்ட்ரோல் யுவர்செல்ஃப்" என்றபடி தன் கைக்குட்டையை எடுத்துக் கொடுத்தான்.

அவளுக்குள் பெரும் மாற்றம்!

மனம் கனத்துப் போகின்ற வேளைகளில், மயிலிறகால் மனதை வருடி ஆறுதல் படுத்தியது, அவன் துணை மட்டுமே!

எந்த ஒரு பலவீனமான தருணத்திலும், அவனை தன்னிடம் நெருங்க விடக் கூடாது என்று அவள் தன் மனதில்



எழுப்பியிருந்த வைராக்யக் கோட்டை பொடிப் பொடியாய் உடைந்து சிதற ஆரம்பித்தது.

பிறகு வந்த நாட்களில், மனம் சிறிது சமாதானமாகி வாழ்க்கையை அதன் போக்கில் இயல்பாக ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தபோது, செலினா ஊருக்குச் செல்லும் நாளும் வந்தது.

ஆனால், அவள் கிளம்பும் போதே ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

"அக்கா! நம்ம ஸ்கூல்லே வேலை பாக்கிற ப்ரகாஷ் என்னை விரும்புறாரு.. நானும் அவரை..!" மெதுவாக நிறுத்தினாள்.

"செலினா..." அதிர்ச்சியுடன் நிமிர்ந்தவள், 'நான் தப்புப் பண்ணிட்டேனே... என் கவலையிலே உன்னைக் கவனிக்காம பாத்துக்காம இருந்திட்டேனோன்னு கில்ட்டியா இருக்கு செலினா.."

"நீ நினைக்கிற மாதிரி அவர் நல்லவர் இல்லை. பெண்களைப் பார்த்தாலே வழியற ஆள்.. அதோட ஒவ்வொரு நேரத்துக்கு ஒவ்வொரு பெண் பின்னாடி சுத்தற ஒரு அயோக்கியன்.. ஒரு ஸ்திரத்தன்மை இல்லாதவரு..

"நீ சின்னப் பொண்ணு செலினா! நான் சொல்றதப் புரிஞ்சுக்கற பக்குவம் உனக்கு இருக்குமான்னு தெரியலை! ஆனா இது தப்பு.. ப்ரகாஷ் வேண்டாம்னு சொல்ற உரிமை எனக்கு உண்டு.. இல்லையா?" கனிவுடன் கேட்டாள் சபர்மதி.

"ம்... ஆனா எனக்கு ஒரு சந்தேகம்! நீங்க கூட ஒரு காலத்துல சரண் அண்ணாவைப் பத்தி தப்பாத்தானே





நினைச்சிப் பிரிஞ்சீங்க..? அது மாதிரி இதுவும் தப்பாவே இருந்தா..?" அழுத்தமாகக் கேட்டாள் செலினா.

அந்தக் கயவன் இந்தச் சிறு பெண்ணின் மனதில் இவ்வளவு நஞ்சைக் கலந்திருப்பானென்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"செலினா! நான் உங்க சரண் அண்ணாவைத் தப்பா நினைச்சிப் பிரிஞ்சி போகலை.. அப்படி உனக்கு யார் சொன்னது? அவர்தான் என்னைப் பிரிய முடிவெடுத்தாரு.. இப்ப அதுக்கான காரணம் தப்புன்னு தெரிஞ்சு அவரே மன்னிப்பு கேட்டப்ப, முதல்லே மறுத்தாலும் அப்புறம் சிநேகாவுக்காக நான் ஒத்துக்கிட்டேன்..

"அதோட நான் என் கண்ணாலேயே பாத்திருக்கேன்.. நான் நம்ம ஸ்கூல்லே வேலை செய்யும் போதே அவரோட நடவடிக்கைகள் வித்தியாசமா புரிய ஆரம்பிச்சது எனக்கு! எப்படி சொல்றது.. அவர் தொடர்ந்தது நிறைய பெண்கள்! நான்.. பிருந்தா.. இன்னொரு சின்னப் பொண்ணு.. இப்ப நீ... இந்த லிஸ்ட் தொடர்ந்துகிட்டே போனாலும் போகலாம்.

"ஆனா இந்த லிஸ்டுலே எல்லாருமே அவரைப் பத்தி புரிஞ்சி.. ஒன்னு சுமுகமா விலகினாங்க.. இல்லை, நிர்வாகத்தில கம்ப்ளெயின்ட் பண்ணினாங்க..

"வேண்டாம்! இந்த வயசுல நல்லது கெட்டது பிரிச்சிப் பார்க்கத் தெரியாது!

"தூரத்துப் பச்சை எப்பவுமே அழகாக இருக்கும். ஆனா கிட்டப் போனப்புறம்தான் தெரியும்! அது புல்வெளியா, இல்லை புதைகுழியான்னு!



"நான் அது புதை குழிங்கறேன்.. நீ புல்வெளிங்கறே! என்னை நம்ப வேண்டாம்.. உங்க சரண் அண்ணா சொன்னா நம்புவியா?" கூர்மையுடன் கேட்டாள் சபதி.

ஒரு கணம் யோசித்தவள், "இது அண்ணாவுக்குத் தெரிய வேண்டாம். நான் உங்களை நம்பறேன்க்கா!" என்றாள் செலினா முடிவாக.

உடனே மனதில் பெரும் நிம்மதி வந்தது. தம் பொறுப்பிலிருக்கும் பெண்ணிற்கு எந்த பாதிப்பும் வரக் கூடாதே என்ற பரிதவிப்பை, சொன்னவுடன் புரிந்து கொண்ட செலினாவின் பக்குவமான பேச்சு, மறையச் செய்தது.

மறுநாளே, பிரகாஷை தனியே அழைத்து அவள் எச்சரிக்கை செய்ய, செலினா குற்றவுணர்வுடன் ஊருக்குக் கிளம்பினாள்.



18

சிநேகாவிற்குதான் பெரும் வருத்தமாய்! மங்களம் மருத்துவமனையிலிருந்த நாட்களில், தனிமையில் செலினா தான் அவளை அனுசரணையாக கவனித்துக் கொண்டாள்.

பிறகு அடுத்த விடுமுறைக்கு வருவதாகக் கூறி அவள் கண்ணீருடன் விடைபெற்ற போது, அவள் பிரிவு ஒரு தோழியை இழந்த உணர்வை சபர்மதியிடம் வரவழைத்தது.

சரண், செலினாவை சென்னையில் விட்டு விட்டு டெல்லிக்கு ஒரு தொழில் முறை கூட்டத்திற்கு செல்வதாகக் கூறி விடைபெற்றுச் சென்றான்.

அவன் வருவதற்கு மூன்று நாட்கள் ஆகுமென்பதால், அந்த ஞாயிறன்று குழந்தையுடன் தாயின் வீட்டிற்கு சென்றாள் சபர்மதி.

இப்போது, மங்களம் தன் வேலைகளைத் தானே பார்த்துக் கொள்கின்ற அளவு தேறி இருந்தார்.

சமையல்காரப் பெண் சமைத்துக் கொண்டிருக்க மகளைத் தனியே அழைத்தவர், "சபர்மதி! நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே! உனக்கு ஒரு அற்புதமான மனுஷரை கடவுள் துணையாக குடுத்திருக்காரு! நான் கூட முதல்லே அவரை சரியா புரிஞ்சிக்கலை..

"அவர் உன்னைப் பிரிஞ்சதையே எடுத்துக்க.. அந்த நேரத்துல, அவர் நிலையில யார் இருந்தாலும் அந்த முடிவுதான் எடுத்திருப்பாங்க.. மனுஷ குணம் அப்படி! தப்புதான்... அதை நான் இல்லேங்கலை..

"ஆனா இப்ப உண்மை தெரிஞ்சவுடனே, உன்னை பூவாகத் தாங்கறாரு.. குழந்தையை அப்படிப் பாத்துக்கறாரு.. உங்கப்பாவோட எதிர்காலத்தை நினைச்சி அவருக்கு ஒரு வேலை போட்டுக் குடுத்து.. எனக்கு ஒரு மகன் மாதிரி என்னை கவனிச்சி.. இப்படிப் பாத்துப் பாத்து செய்யற ஒருத்தரை மன்னிச்சுடுடா..

"எனக்கென்னவோ நீ பிடிவாதமா இருக்கறது சரின்னு படலை.." என்று மூச்சு வாங்க நிறுத்தினார்.

"சரிம்மா.. எனக்கும் புரியுது.. ஆனா பழசை மறக்கவே முடியலை.. நீங்க இதை எல்லாம் நினைச்சி கவலைப்படாம ரெஸ்ட் எடுங்க" என்று கூறி விட்டு வெளியில் வந்தாள். மனம் முழுவதும், கேள்விகள் தேனீக்களாய் சூழ்ந்தன!



அப்போதுதான், அருணாசலம் பதட்டத்துடன் ஓடி வந்தார்.

"சமதி! மாப்பிள்ளை போன ப்ளேன் ஏதோ காரணத்தால வேகமா லேண்ட் ஆனதால, பின் பக்கம் தீப்பிடிக்க எரிஞ்சதா சொல்றாங்க.. நியூஸ்ல காமிச்சாங்களாம்.. ஆனா பயணம் செஞ்சவங்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லையாம்! இப்பதான் வெங்கடேஷ் போன் பண்ணினாரு!" என்றார் பதட்டத்துடன்.

உடனே தன் உயிரைப் பலமாகப் பிடுங்கி யாரோ வேரோடு வெளியில் எறிந்ததைப்போன்ற ஒரு வலியுடன் மலங்க மலங்க விழித்தபடி கண்ணீருடன் நின்றவளை மங்களம்தான் ஆறுதல்படுத்தினார்.

"அதான் யாருக்கும் ஒன்னும் ஆகலைன்னு அப்பா உறுதியாக சொல்றாங்களே.. கடவுள் நமக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டாரும்மா.. தைரியமா இரு!" அவளை அணைத்தபடி கூறினார்.

ஆனாலும் 'செல்லில்' அவன் குரலைக் கேட்ட பிறகுதான் போன உயிரே திரும்பி வந்ததைப் போல் இருந்தது அவளுக்கு!

"அங்கே ஒன்னும் ப்ராப்ளம் இல்லையே? அப்பா சொன்னாங்க!" தவிப்புடன் கேட்டாள் அவள்.

'இல்லை.. இந்த வெங்கடேஷ், சும்மா இல்லாம மாமாவுக்கு போன் செஞ்சி பயமுறுத்தியிருக்கான்... பைலட் ஸ்மார்ட்டா லேண்ட் பண்ணினதாலே தப்பிச்சிட்டோம். அப்புறம் இன்னொரு குட்நியூஸ்! எனக்கு சிறந்த இளம் தொழிலதிபர் விருது அறிவிச்சிருக்காங்க.. சென்னையிலே நாளன்னிக்கு ஃபங்ஷன் இருக்கு!" மகிழ்ச்சியுடன் கூறினான்.



"கங்கிராட்ஸ்! நான்.. நானும் சிநேகாவும் வரலாமா?" சட்டென்று கேட்டுவிட்டு உதட்டைக் கடித்துக் கொண்டாள் அவள்.

"ம்.. நான் உடனே ஃப்ளைட் டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்றேன்.." ஆழ்ந்த குரலில் கூறினான் சரண்.

"நாளைக்கு நாங்க கிளம்பி வரோம்.. அப்பா உங்களோட பேசணுமாம்" என்று போனை அவரிடம் கொடுத்து விட்டு தனிமையில் நின்று யோசித்தபோது, அவனுக்கு ஆபத்து என்றவுடனே மனதிற்குள் பெரிதாக எதையோ இழந்தது போல் வலி வந்ததும், துடித்துப் போனதும், இனி, தனக்கென்று வாழ்வில் எந்தவொரு பிடிப்பும் கிடையாதென்பதைப் போன்ற ஒருவித விரக்தி நிலை உருவானதும், தன் மன நிலையை அவளுக்கே வெளிச்சம் போட்டுக் காட்டுவதாய்!

மனதில் பலப்பல எண்ணங்களுடன், அவள் சென்னை விமான நிலையத்திற்குச் சென்று அன்றிரவு இறங்கியபோது, சபர்மதியின் விழிகள் ஒரு அலைப்புறுதலுடன் சரணைத் தேடித் தவித்தன.

தூரத்தில் நின்றிருந்த அவன் உருவத்தை வேகமாக ஆராய்ந்தவள், அவனுக்கு எந்த விதத்திலும் ஆபத்தில்லை என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டபோதுதான், அவனருகில் நின்றிருந்த அந்த உயரமான பெண்ணைக் கவனித்தாள்.

பாப் செய்த தலை, இறுகப்பிடித்த ஜீன்ஸும், உடலழகை கவர்ச்சியாய் வெளிப்படுத்திய 'லேஸ் டாப்ஸும்' அணிந்து சரணுடன் ஒட்டியபடி நின்றிருந்த அந்தப் பெண் யாரென்ற யோசனையில் அவள் இறங்கும் முன்பே "அக்கா.." என்றபடி உற்சாகத்துடன் ஓடி வந்தாள் செலினா.



உடனே சிநேகா அவளிடம் உற்சாகத்துடன் ஓட, அவள் கவனம் சிதறியது.

அருகில் வந்த செலினாவை பாசத்துடன் அணைத்தபோது "உங்களுக்கு இந்த சுரிதார் ரொம்ப அழகா இருக்குக்கா." என்று பாராட்டினாள் அவள்.

பிறகு சரண் வேகமாக முன்னால் வந்து சிநேகாவைத் தூக்கிக் கொள்ள, "சரண்! என்னை உங்க மனைவிக்கு அறிமுகப்படுத்தவே மாட்டீங்களா?" கொஞ்சும் குரலில் கேட்டாள் அந்தப் பெண்.

உடனே தன் மனைவியிடம் திரும்பியவன், "பெட்டர் ஹாஃப்'.. சமதி" என்று அவளிடம் கூறியபோது, சட்டென்று சிரித்தாள் அவள்.

"என்னாச்சு..?" என்றவளிடம் "இல்லை... ஒரே ஒரு எழுத்து வித்தியாசப்பட்டா போதும்.. அர்த்தமே மாறிப் போய் 'பிட்டர் ஹாஃப்'னு வருமேன்னு நினைச்சேன்.. சிரிப்பு வந்தது" தோள்களைக் குலுக்கியபடி ஸ்டைலாகக் கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தாள் டயானா.

சமதியின் இதயம் சட்டென்று உலர்ந்தது போன்ற ஒரு உணர்வுடன் தவிக்க உள்ளே இருள் பரவியது.

அவளுக்குள் உறங்கிக் கிடந்த நேசம் நெஞ்சக் கதவுடைத்து மெதுவாக வெளிவர ஆரம்பித்த நேரம், டயானாவின் வரவும், வார்த்தைகளும் சூறாவளிப் புயலொன்றை மனதில் வரவழைக்க, இதயம் மௌனத் தாழ்ப்பாளிட்டு இறுகியது.

காலத் தண்டவாளத்தின் இரு கோடுகளாய் தாங்கள் இணையவே முடியாதாவென்ற சஞ்சலம் பரவுவதாய்!

உடனே, ''அக்கா! சும்மாயிரு! சமதி அக்கா எவ்வளவு நல்லவங்க தெரியுமா? அவங்களாலே யாருக்குமே துன்பம் தர முடியாது.. சரண் அண்ணாவோட வாழ்க்கைய இனிமையாக்கிட்டிருக்கிறவங்க அவங்க!'' சட்டென்று கூறினாள் செலினா!

''ஏய்! முந்திரிக் கொட்டை.. நான் உன்கிட்டே சொல்லலை... சரண்கிட்டதான் சொன்னேன்'' என்றவள், வேகமாகச் செல்ல, அனைவரும் பின் தொடர்ந்தனர்.

அவனைக் காண வேண்டுமென்று, சமதியின் மனப் பறவை, ஏக்கத்தில் தன் சிறகு விரித்துக் காத்திருந்த நேரத்தில், டயானாவின் வரவு, இருவருக்குமிடையே கண்ணுக்குத் தெரியாதபடி ஒரு மாயச் சுவரை எழுப்பியது.

பிறகு ஹோட்டலுக்குச் சென்றபோது, சிநேகாவுடன் அவன் விளையாடிக் கொண்டிருக்க, செலினா அவளிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

''அக்கா! எனக்கு இங்கே வந்தப்புறம்தான் தெரியுது.. ப்ரகாஷ் என் வாழ்க்கைத் துணை இல்லைங்கிறது.. அப்படி இருந்திருந்தா.. ஒரு காதலனைப் பிரிஞ்சி வந்ததுக்கு என் மனசு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கணும்? நீங்க சொன்ன மாதிரி இது வெறும் இனக் கவர்ச்சிதான்!'' சிறு புன்னகையுடன் கூறினாள் செலினா.



''ம்.. உனக்கு அது புரியணும்னுதான் நான் ஆசைப்பட்டேன்! நல்ல வேளை.. உடனே புரிஞ்சுக்கிட்டே!'' ஒரு பாரம் இறங்கிய நிம்மதி தெரிந்தது, சமதியின் குரலில்!

''எனக்கு மனசே சரியில்லாமதான் அங்கே வந்தேன்.. டயானாக்கா, ஃபாரின்லேருந்து அவங்க ஹஸ்பெண்ட்கிட்டே சண்டைபோட்டு டைவர்ஸ் வாங்கிட்டுப் பிரிஞ்சி வந்ததிலேருந்து ஒரே குழப்பம் எங்க வீட்டிலே! எங்கண்ணாவுக்கு இது பிடிக்கலை! ஆனா அக்கா அம்மா செல்லம்! அவ அட்டகாசம் அதிகமாக ஆரம்பிச்சிடுச்சி, தினம் ஒரு பாய் ஃப்ரெண்ட்டோட வீட்டுக்கு வரதும், ட்ரக்ஸ் உபயோகிக்கிறதும், பாத்தா என்னால தாங்கவே முடியலை..

''நல்லவேளை! ஒரு சுய பச்சாதாபத்திலயும், உடனே சாஞ்சுக்க ஒரு தோள் கிடைச்ச சந்தோஷத்திலயும், நான் தவறான ஒருத்தரை என் கணவரா முடிவு செய்யப் பார்த்தேன்.. இதுவே எங்கக்காவாக இருந்தா கூட என்னைப் பத்தி இவ்வளவு கவலைப்பட்டு அட்வைஸ் பண்ணியிருக்க மாட்டா...

''ஆனா நீங்க.. எனக்கு ஒரு அம்மா ஸ்தானத்துல இருந்து எனக்கு 'கைட்' பண்ணினீங்க. எங்கம்மாவுக்கு கூட எங்க மேல இவ்வளவு அக்கறை கிடையாது.. அவங்களுக்கு லேடிஸ் கிளப், சமூக சேவைன்னே பொழுது போயிடும். வீட்டைப் பத்தி யோசிக்கவே மாட்டாங்க'' என்றவளை ஆறுதல் படுத்தி அனுப்பி வைத்தாள் சபர்மதி.





19

மறுநாள் காலையிலேயே அவளும், சரணும் சிநேகாவும் கவிதாவைப் பார்க்க செல்ல, மூர்த்தி அவர்களுக்காக மருத்துவ மனையின் வாசலிலேயே காத்திருந்தான்.

அவர்கள் உள்ளே சென்றபோது, அந்த அறையில் கவிதாவுடன் பங்கஜமும் இருந்தார்.

மகளுக்கு சாப்பாடு ஊட்டிக் கொண்டிருந்தவர், அவர்களைக் கண்டதும், பாசத்துடன் வரவேற்க, திரும்பிய கவிதாவின் உருவத்தில் பெரும் மாற்றம் தெரிந்தது.

உடல் நிலை நன்றாகத் தேறி, பழைய தளர்வின்றி தீர்க்கமாய் ஊடுருவும் பார்வையும், அமைதியான நடவடிக்கைகளும் கைவசப்பட்டிருந்தன.

அவனைக் கண்டதும், உணர்ச்சியின்றித் திரும்பியவள், அருகில் நின்றிருந்த ஸ்நேகாவைக் கண்டதும் ஓடி வந்து தூக்கி அணைத்ததும், பதறிப் போனாள் சமதி.

'என் புஜ்ஜி..'' என்றபடி அவள் முத்தமழை பொழிந்ததும், மிரண்டுபோன சிநேகா பயத்தில் அழ ஆரம்பிக்க, சட்டென்று அவளிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டான் சரண்.

''கவி! போ.. முதல்லே போய் சாப்பிடு'' அழுத்தமான குரலில் அவன் கூற உடனே அடி பணிந்தவள், அமைதியாக அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள்.

'இவ, சரணுக்கும், மூர்த்தி தம்பிக்கும் மட்டும்தான் அடங்கி சாப்பிடுவா! எனக்கு பயப்படறதேயில்லை..'' சலித்தபடி கூறினார் பங்கஜம்.



''அம்மாட்டே பாசம் மட்டும்தானே எப்பவும் இருக்கும்... பயம் வராது! அண்ணா.. கட்டிக்கப் போறவர்னா.. ஒரு வித மரியாதை கலந்த பாசம் இருக்கும் அதான்! இல்லை கவி!''

சபர்மதி கேட்டபேது, புரிந்தாற்போல் தலையாட்டினாள் அவள். ஆனால் பார்வை மட்டும் சிநேகாவிடம் ஆர்வத்துடன் பதிந்திருந்தது.

சமதியின் முகத்தைக் கண்ட பங்கஜம் ''பயப்படாதேம்மா, அவ இப்ப ரொம்ப மாறிட்டா, குழந்தைகளைப் பார்த்தா மட்டும் ரொம்ப ஆசை! அன்னிக்குக் கூட பக்கத்து ரூமுக்கு வந்த குழந்தையைக் கட்டிப் புடிச்சி முத்தம் குடுத்து ஒரே ஆர்ப்பாட்டம்! அவங்க பயந்துட்டாங்க! நமக்கு தெரியும்.. அவ குழந்தைகளுக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டாள்னு! ஆனாலும் பயம்தானே! பழைய ஞாபகங்கள் சீக்கிரமே வந்திடும்னு டாக்டர் சொல்றாரு! கடவுள்தான் துணை... பார்ப்போம்..''

''அவ சரியாகணும்! அப்பதான், உங்கண்ணனோட தியாகத்துக்கும், சரணோட அன்புக்கும், மூர்த்தி தம்பியோட முயற்சிக்கும் ஒரு பலன் கிடைச்ச மாதிரி இருக்கும்'' பெருமூச்சுடன் நிறுத்தினார்.

''கவலைப்படாதீங்கம்மா.. எல்லாம் சரியாயிடும்! கூடிய சீக்கிரம் கவிதாவுக்கு உடல்நிலை நல்ல குணமாகி மூர்த்தி அண்ணாவோட சேர்ந்து வாழ்ந்து, உங்களுக்கு நம்ம சிநேகா மாதிரி ஒரு பேத்தியத் தரப் போறாங்க பாருங்களேன்'' என்றாள் ஆறுதலுடன்.

பிறகு அவர்கள் விடைபெறும்போது, "என்னம்மா சுபர்மதி! எனக்கு ஒரு பேரனை எப்போ பெத்துத் தரப் போறீங்க?" என்று கேட்டு, ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் பங்கஜம்.

சட்டென்று, சமதியின் முகம் நாணத்தில் சிவந்துவிட, கண்ணோரம், அவளை நோக்கிய சரணின் முகத்தில் சிறு குறுகுறுப்பு!

பதிலாக ஏதும் கூறாமல் அவள் குனிந்துகொள்ள, அவளுடைய வெட்கத்தைக் கண்டவர், "அப்போ கூடிய சீக்கிரம் நல்ல சேதிசொல்லப் போறீங்கன்னு சொல்லு!" என்றார் நிறைவுடன்.

ஏதோ ஒரு இனம் புரியாத வேதியல் மாற்றம் உள்ளுக்குள் நடக்க, அமைதியானாள் சுபர்மதி!

காரில் திரும்பிச் செல்லும்போது, "உனக்கு குட்டிப் பாப்பா வேணுமா சிநேகா.. தம்பி வேணுமா.. தங்கச்சி வேணுமா..?" குறும்புடன் அவளையே பார்த்தபடி கேட்டான் சரண்.

அவள் தாங்க முடியாமல் வெளிப்புறம் திரும்பிக் கொள்ள, உடனே அவன் முகம் பெரும் ஏமாற்றத்துடன் சுருங்கியது.

முன்பு போல், அவள் முகம் சிவக்க, அதன் அழகை காணலாம் என்று காத்திருந்தபோது, அவள் முகம் திருப்பியது பெரும் வேதனையாய்..!

உணர்வுகளின் விசுவரூபம் இருவரையும் ஆட்சிசெய்ய, மௌனமாகவே தொடர்ந்தது கார்ப்பயணம்!

அன்று மதியம், லெனின் தன் வீட்டிற்கு அவர்களை விருந்திற்கு அழைத்திருந்தாள்.



அழகிய கிரேப் சில்க்கில், பிங்க் ரோஜாக்கள் எம்பிராய்டரி செய்யப்பட்டிருந்த அந்த வண்ணத்திலேயே பொருத்தமாய் மணிகள் கோர்க்கப்பட்ட 'செட்' அணிந்து, ரவிவர்மாவின் ஓவியம் போல் தயாராகி வந்தாள் சமதி.

அவளைக் கண்டதும், சரணின் மனதில் மகிழ்ச்சி சலங்கைகளின் சப்தம் இனிதாய் ஓசையெழுப்ப, காதலின் எதிரொலி, அவன் கண்களில் தெரிந்தது.

ஆனால் அவர்களுடைய வீட்டிற்குச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஏன் சென்றோம் என்று ஆகிவிட்டது, சுபர்மதிக்கு!

செலினாவும், லெனினும் இயல்பாகப் பழக, டயானா ஆண்களிடமே பேசிக் கொண்டிருந்தாள்.

ஜெசிந்தாவிற்கு, லேடீஸ் கிளப், சமூக சேவை என்று தன் புகழ் பாடவே பொழுது சரியாக இருந்தது.

தங்கள் கிளப்பில் செய்கின்ற சமூக சேவைகளைப் பற்றி அவர் கூறும் போதே, இவர் தன் குடும்பத்திற்கும் சிறிதுநேரம் செலவழித்து, அக்கறை காட்டினால் தேவலாமென்று தோன்ற தனக்குள்ளேயே புன்னகைத்துக் கொண்டாள்.

உடனே அவர், "இதை எல்லாம் நான் உன்கிட்டே போய் சொல்றேன் பாரு! நீங்கள்லாம் மிடில் கிளாஸ்! உழைக்கிற வர்க்கம்! இதுக்கெல்லாம் நேரமும் இருக்காது... பழக்கமும் இருக்காது" பெருமையாகவும் நக்கலாகவும் கூறினார்.

"உழைக்கிற வர்க்கம் இல்லைன்னா, மேல் தட்டு மக்களுக்கு எப்படி ஆன்ட்டி பணம் வரும்.. 'நாங்க சேத்துல



கால் வச்சாதான் நீங்க சோத்துல கையே வைக்க முடியும்'னு ஒரு பழமொழி நான் கேள்விப்பட்டிருக்கேன்.."

அவள் உடனே பதில் கொடுத்தது பிடிக்காமல் சரணிடம் திரும்பியவர், "ஏன் சரண்! உன் மனைவிய லேடீஸ் கிளப் மெம்பராக்கிடு.. நம்ம சர்க்கிள்லே நாலு பேரோடப் பழகக் கத்துக்குடுப்பா!" அலட்டலாகக் கூறினார்.

"வேண்டாம் ஆன்ட்டி! இதெல்லாம் அவளுக்குப் பிடிக்காது.. எனக்கும் அவ்வளவா இன்ட்ரஸ்ட் இல்லை. அவ, தன்னோட 'ஒரிஜினாலிட்டியைத் தொலைக்காம, இயல்பா இப்படியே இருக்கட்டும்... அதான் எனக்குப் பிடிக்கும். ஆனா அதுக்காக நான் லேடீஸ் கிளப்பை குறை சொல்லலை.. சொசைட்டிக்கு நிறைய நன்மை செய்யற கிளப் நிறைய இருக்கு.. இவளுக்கு அதுவேண்டாம்!"

மறுகணமே அவர் முகம் தொங்கிப் போய்விட, உடனே சமாளித்தவர், "எனக்கு உன்னைப் பத்தித் தெரியாதா? டயானா.. தம்பிக்கு பிடிக்கும்னு நீயே ஸ்பெஷலா ஒரு ஜூஸ் செஞ்சியே.. அதக் கொண்டு வந்து கொடு!" பெருமையுடன் ஏவினார்.

இன்னும் சிறிது நேரம் இங்கிருந்தால், இந்த அலட்டல் சாம்ராஜ்யத்தின் இறுக்கத்தில் மூச்சு முட்டி செத்துவிடுவோம் என்று தோன்ற, செலினாவின் நிலையை நினைத்தால் பரிதாபமாய்!

பிறகு, சாப்பிட்டு விட்டுக் கிளம்பிய போதுதான் நிம்மதியாக உணர்ந்தாள் சமதி.



ஹோட்டலுக்கு செல்கின்ற வழியில் தான் சென்னை வந்தால் தங்குவதற்கென்று பதிவு செய்து வாங்கி இருந்த ஃப்ளாட்டிற்கு சரண் அவர்களை அழைத்துச் செல்ல, அங்கு வேலைகள் முடிந்திருந்தன.

எல்லா இடமும் சுற்றிப் பார்த்தபோது, கூடவே வந்து மிருதுவான குரலில் அவன் விளக்க ஆரம்பிக்க, சமதியின் மனம் தன்னிலை இழக்க ஆரம்பித்தது.

மனம் மகிழ்ச்சியில் மிதக்க அந்த நிம்மதியும் சந்தோஷமும் அன்றிரவே தொலைந்துபோகப் போவதை அவள் அறியவில்லை.

பத்து மணிக்கு மேல் ஒரு ஃபோன் வர, அவன் அவசரமாகக் கிளம்பி சென்ற பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் ஹோட்டல் அறைக்கதவு தட்டப்பட 'சரண்' என நினைத்து அவள் ஆர்வத்துடன் கதவைத் திறந்தாள்.

அங்கு ஜெசிந்தா நின்றிருந்தார்.

"வாங்க.. என்ன இந்த நேரத்துல.. அவரும் அவசரமா வெளியில போயிருக்காரு" என்று வரவேற்றாள் சமதி.

"எனக்குத் தெரியும்.. சரண் இப்ப எங்க வீட்டுலதான் இருக்காரு.. உன்னோட பேசத்தான் நான் வந்தேன்.." அழுத்தமான குரலில் கூறினார் அவர்.

புரியாமல் விழித்தவளிடம், "உனக்குப் புரியலை இல்லை.. நான் விபரமா சொல்றேன்! சரணும், என் பொண்ணு டயானாவும், முன்னாள் காதலர்கள்.. ஆனா உன்னைப் பழிவாங்கறதுக்காக சரண் உன்னைக் கல்யாணம் செஞ்சுக்க,

அத அறியாத என் பொண்ணு ரொம்பக் கோபமாகி, உடனே ஃபாரீனுக்குக் கிளம்பிப் போயிட்டா..

''அவ வேற கல்யாணம் செஞ்சிக்கிட்டப்புறம்தான் நீ குழந்தை உண்டான உடனே உன்னை அவர் திருப்பி அனுப்பின விஷயமே எங்களுக்குத் தெரிஞ்சது... அப்புறம் சரணை மறக்க முடியாம, புருஷன்கிட்டே டைவர்ஸ் வாங்கிட்டு அவ திரும்பி வந்தப்ப, நீயும் அவரோட வாழ்க்கையில திரும்ப வந்திட்டே! அதைத்தான் அவளால தாங்க முடியலை!

''ட்ரக்ஸ்' உபயோகிக்கப் பழகிட்டா! இப்பவும் சரணுக்கு மட்டும்தான் அவ கட்டுப்படுவா! அவளும் சரணும், கணவன் மனைவியா இணைஞ்சு வாழ ஆரம்பிச்சு ரொம்ப நாளாச்சு. இப்ப கூட சரனோட அணைப்பில நிம்மதியா தூங்கிட்டு இருப்பா!

''அவங்க ரெண்டு பேரு வாழ்க்கையிலயும் விரும்பாம இடையில வந்த நீ இப்பவே ஒதுங்கிடறதுதான் உனக்கு நல்லது!'' மிரட்டுவது போல் கூறினார் ஜெசிந்தா.

சபர்மதியின் உடல் முழுவதும் கூசிப் போனது. இதயம் தீப்பற்றினாற் போல் தகித்தது. ஆனாலும் வீம்புடன் நிமிர்ந்து ''நான்.. நம்ப மாட்டேன்'' என்றபோதும் மனதிற்குள் பயச் சிறகுகள் தடதடத்தன. நெஞ்சமே ஆடிப் போனது.

''ம்.. நம்பலைன்னா பின்னாடி உனக்குத்தான் நஷ்டம்! இங்க வந்து டயானாவோட இருக்கறதுக்காகவே அங்கே உங்க அப்பாவை ஸ்கூல்லே நிர்வாகியா நியமிச்சிட்டு, தான் இங்க வந்துடறதா அவரே டயானாகிட்டே சொன்னாராம்!



''மாசத்துல பாதி நாளு, இங்கே ஓடி வந்திடறாரு.. இன்னுமா உண்மை புரியலை.. முட்டாளாட்டம் இருக்கியே? இந்த ஒரு குழந்தையை வச்சுக்கிட்டு புருஷனை வளைச்சிடலாம்னு தப்புக் கணக்குப் போடாதே!'' ஏளனமாகச் சிரித்தார் அவர்.

மனம் மெலிதாய் கதற ஆரம்பிக்க, அந்த வேதனைத் ததும்பல்களை வெளிக்காட்டாதிருக்க, அவள் படாதபாடு பட வேண்டியிருந்தது.

தாமரை இலையின் மேல் ஜனித்த பனித் துளியின் யாத்திரை தொடங்கியவுடனே முடிவதைப் போல், தன் வாழ்க்கையும், முடிந்துவிடப் போகிறதோ என்று தவித்தது மனது.



20

பிறகு, அவர் கிளம்பிச் சென்று வெகு நேரம் கழித்துத்தான் வந்தான் சரண்.

அவன் தன்னிடமிருந்த சாவியில் கதவைத் திறந்து கொண்டு வந்து படுத்தபோது, உறங்குவதுபோல் அசையாமல் படுத்திருந்தாள் சபர்மதி.

மறுநாள், காலையில் சரணுக்கு விருது வழங்கும் விழாவிற்குச் சென்றபோது, லெனின் குடும்பமும், வெங்கடேஷும் அங்கு வந்திருந்தனர்.

மனதிற்குள் மிகவும் பெருமையாக உணர்ந்தாலும், நேற்று ஜெசிந்தா கூறிய வார்த்தைகள் முள்ளாய் நெஞ்சைக் கீறி வலிக்கச் செய்து கொண்டிருந்தன.





வரவேற்க, அருணாசலம் மகிழ்ச்சியுடன் அவன் கைகளைப் பிடித்துக் குலுக்கியபடி வாழ்த்தினார்.

ஆனால், அவன் விழிகள், யோசனையும், சுருங்கிய முகமுமாய் நின்றிருந்த சபர்மதியையே தழுவி நின்றன.

அவளுக்குள் பெரும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. சரண் யாருக்கு சொந்தம் என்று புரியாத உரிமைப் போராட்டம்!

அவள் மனமிறங்கி, சரணின் உயர்ந்த உள்ளம் புரிந்து, நேசத்துடன் அவனை நெருங்க ஆரம்பித்த நேரத்தில்தான், ஜெசிந்தாவின் சொற்களும், சரணின் பொய்மையும் அவளை நொறுக்கிப் போட்டிருந்தன.

ஜெசிந்தா வந்து சென்ற பிறகு ஊருக்குக் கிளம்பும் போது அவள் சரணிடம் மெதுவாக, ''நேத்து ஏன் லேட்டாயிடுச்சு'' என்றாள் மெல்லிய குரலில்.

கண்களில் தீவிர யோசனையுடன் நிமிர்ந்தவன் ''பிசினஸ் விஷயமா ஒருத்தரைப் பார்க்கப் போயிருந்தேன்... அவங்க வீட்ல உடம்பு சரியில்லை! அதான்'' அவளையே அளவிட்டபடி கூறினான்.

அந்த பதில் அவளுக்கு அக்னிப் பந்தாய் உரசுவதாய்! அவன் வார்த்தைகளிலிருந்த தயக்கமும், பொய்யும், அவளுக்குள் தீயாய் தகிப்பதாய்..!

இன்று, அந்த இரவும் அவளுக்குச் சாதகமான பொய்களும் நினைவில் படர்ந்து சபர்மதியின் மனம் இரண்டாகப் பிளப்பது போல் வலிக்க ஆரம்பித்தது.



ஆனால் இது எதையுமே அறியாத சரண், அவள் அருகாமையை.. தனிமையை எதிர் நோக்கி ஆவலுடன் காத்திருந்தான்.

அன்றிரவு!

அருணாசலம் பேத்தியை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட, சரண் அவளுடைய அறைக்கு வருவானென்று அவள் எதிர்பார்க்கவில்லை.

இரவு உடைக்கு மாறி,உறக்கம் வராமல் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது, கதவு மெலிதாகத் தட்டப்பட்டு சரண் உள்ளே வந்தான்.

பதட்டத்துடன் எழுந்தவளின் கையிலிருந்த புத்தகம் கீழே விழ, அதை எடுத்து அவளிடம் கொடுத்தவன், ''சமதி.. எனக்காக தூங்காமக் காத்திட்டிருந்தியா?'' மென்குரலில் கேட்டான்.

உடனே இரண்டு நாட்கள் முன்பு அவன் டயானாவின் வீட்டிற்குச் சென்றதும், அவள் கேட்டபோது சிறு யோசிப்பிற்கு பிறகு தன் நண்பனைப் பார்க்கச் சென்றிருந்ததாகப் பொய் கூறியதும் வேதனையுடன் நினைவுப் பரப்பில் மிதந்தன.

மறுகணமே நிமிர்ந்தவள், ''இல்லை... நான் உங்களுக்காக காத்திருக்கலை! எனக்கு தூக்கம் வரலை.. அதான்!'' என்றாள் கடுமையான குரலில்!

''என் ப்யூரிட்டனுக்கு.. என் தேவதைக்கு என்ன கோபம்? என் வரவுக்காக அவ ஆவலா காத்திருந்தா... எனக்கு அங்கே விபத்துன்னு தெரிஞ்சவுடனே துடிச்சிப் போயிட்டதா..உடனே

கிளம்பி என்னைப் பார்க்க ஓடி வந்ததா.. நான் கேள்விப்பட்டேன்..'' சீண்டலுடன் கேட்டான்.

''இல்லை.. எல்லாம் பொய்! நீங்க.. அந்த டயானா.. உங்களுக்குள்ளே இருக்கற தப்பான உறவு.. அது மட்டும் தான் நிஜம்னு எனக்குத் தெரிஞ்ச போச்சு! அதுக்காக என்னை சமாதானப்படுத்த வந்தீங்களா?'' வார்த்தைகளைத் தணலாய் அவன் மேல் வீசினாள்.

''அன்பால் மட்டுமே எதையும் சாதிக்க முடியும்'' என்று சொல்லித் தந்திருந்த அருணாசலத்தின் வார்த்தைகள், அந்த நிமிடம் பயனற்றுப் போனது.

உண்மையை உணராமல் ஒரு வஞ்சகப் பெண்மணியின் வார்த்தைகளை நம்பியதால், பொங்கிப் பெருகிய கோப வெள்ளத்தில், யோசிக்கும் திறனும், நியாயமும் சிறு சிறகாய் விழுந்து மறைய, அவன் முகம் கடும் சினத்துடன் பளபளத்தது.

''என்ன சொன்னே..?'' நம்ப இயலாத வியப்புடனும், கோபத்துடனும் அவளையே வெறித்தவன், கடித்த பற்களிடையே சீறினான்.

''ஏன்.. உங்களோட தவறான செய்கையெல்லாம் எனக்குத் தெரிஞ்சிடுச்சேன்னு அதிர்ச்சியா இருக்கா? இப்படிக் கேவலமான ஒருத்தரை நான் விரும்பினேன்.. சே..''

முகத்தை தன் கைகளால மூடியபடி அழ ஆரம்பித்தவளையே ரௌத்ரமாய் வெறித்தவன், ''சே.. நானும் இப்படி ஒரு சந்தேகப் பிசாசை.. மனசு முழுக்க நஞ்சா இருக்கிறவளையா உயிரா நினைச்சேன்... ஹூம்.. நீ என்னை



நம்பலை இல்லை? இனிமே நான் உன்னை நெருங்கினேன்னா என்னைக் கொன்னுடு.. மனசை விட.. உயிரைக் கொல்றது ரொம்ப சுலபம்...!'' கடும் சினத்துடன் கூறிவிட்டு திரும்பிப் பார்க்காமல் அங்கிருந்து வெளியேறினான்.

மறு நாளிலிருந்தே, இருவருக்குமிடையே சாதாரணமாக இருந்து வந்த பேச்சுவார்த்தைகள் கூட அறுந்து போய், நடுவே சீனச் சுவராய் எழும்பி நின்றன.. பிடிவாதமும், கோபமும்!

காலையில் பேத்தியுடன் வந்த அருணாசலம், தான் எதிர்பார்த்ததற்கு மாறாக, இருவரும் கடுவன் பூனைகளாக முகத்தை வைத்துக் கொண்டு, எதிரெதிர் துருவத்தில் நிற்பதைக் கண்டு, மிகுந்த வருத்தத்துடன் சிநேகாவுடன் பள்ளிக்குச் சென்றார்.

அன்று முழுவதும் தன் அறையிலேயே கிடந்தவளை, அவன் கோபம் பெரிதும் உருக்கியது.

ஆனால் தான் தப்பு செய்துவிட்டு, பிறரிடம் கோபப்படுவதில் என்ன நியாயம் இருக்கிறதென்றும் எண்ணி அவள் மனம் சீற்றமானது.

பிறகு வந்த நாட்களில் பனிப்போர் தொடர, சரணுடைய முகம் ஏனோ களையிழந்து போயிருக்க, ஓய்ந்து தெரிந்தான் அவன்.

இப்போதெல்லாம், அவனிடம் சிரிப்பையே காண முடியவில்லை. ஏதோ ஒருவித இறுக்கமும், யோசனையும் தெரிந்தது அவனிடம்!

அன்று மாலையில், விளையாடும் போது சிநேகா அவனுடைய ஃபைலில் ஏதோ இங்க் பாட்டிலை சரித்து விட,




உடனே சரண் அவளைக் கோபமாகக் கடிந்தபோது, பெரும் கோபம் வந்தது அவளுக்குள்!

''போதும்! என்னையும் என் குழந்தையையும் பிடிக்க லைன்னா, நாங்க இன்னிக்கே எங்க அம்மா வீட்டுக்குப் போறோம்.. எங்களை அங்கேயாவது நிம்மதியா வாழ விடுங்க'' என்றபடி குழந்தையுடன், தன் பொருட்களையும் எடுத்துக் கொண்டவள் அவன் என்ன தடுத்தும் கேளாது பிடிவாதத்துடன் தன் வீட்டிற்கு சென்று விட்டாள்.

அவள் பிரிவைத் தாங்க முடியாமல் மௌனமாக அழ ஆரம்பித்த மனதை அடக்கியவனுக்குள், இதய வீணையின் நரம்பொன்று பட்டென்று அறுந்தது போல் ஒருவித வலி பரவியது.

காலம் தன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கட்டும் என்ற உறுதியும், வீம்பும் மனதில் நிறைந்தன.



21

அவர்களிருவரும் வீட்டை விட்டுக் கிளம்பியதும், காயம்பட்டிருந்த மனதைப் பெரும் சூன்யம் வியாபிக்க, உடனே அன்றிரவே சென்னைக்குக் கிளம்பி விட்டான் சரண்.

மறுநாள் காலையில் அவன் ஹோட்டலுக்கு சென்று தங்கியபோது, அவன் முன்பதிவு செய்திருந்த அவர்களின் ஃப்ளாட் தயாராகி விட்டதாக, அந்த பில்டர் ஃபோன் செய்திருந்தார்.



அங்கு சென்றபோது, தான் போன முறை அவளுடன் வந்தபோது, இங்கு இனிமையாய் நடந்த நிகழ்வுகள் மறவாமல் கண் முன்னால் வந்தன. மனமெங்கும் சமதியின் நினைவுகள்!

அன்று, சிநேகா அங்குமிங்கும் ஓடி விளையாட சபர்மதியின் அருகில் வந்தவன், ''என்ன.. பிடிச்சிருக்கா? இதுதான் நம்ம பெட்ரூம்!'' குறும்புடன் அவன் கூறியபோது, வெட்கத்துடன், அவள் முகம் சிவக்க, இமைகள் சிப்பியாய் விழிகளை மூடிவிட, அசையாமல் ஒரு நொடி அவள் நின்ற கோலம், நினைவிற்கு வந்து இன்று அவனை வதைத்தது.

அவளை, திடீரென்று முரண்படச் செய்தது, என்னவாக இருக்கும் என்ற யோசனை அவனுக்குள் நெருடலாய்!

அன்று விமான நிலையத்திலும், பிறகு டயானா அவனை முத்தமிட்ட போதும் சமதியின் முகமே அவளுடைய பொறாமையையும், கோபத்தையும் காட்ட, அதனாலேயே முதல் நாளிரவு அவர்கள் வீட்டிற்குச் சென்றதை மறைத்து, தான் மாற்றிக் கூறியதையும், நினைத்துப் பார்த்தான் சரண்.

லெனினுடன் தொழில் தொடர்பான ஒரு அவசர ஆலோசனைக்காக அவன் செல்ல, அப்போது அங்கு டயானா அதிகமான போதைப் பொருளை உட்கொண்டதால் கத்தி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தாள்.

அவனும், லெனினுமாகச் சேர்ந்து அதட்டல் போட்டு அவளை அடக்கி உறங்க வைத்து விட்டு, பிறகு வெளிநாட்டு ஆர்டருக்கான டெண்டரைப் பற்றி ரகசியமாக விவாதித்து விட்டுக் கிளம்பிய போது, மணி ஒன்றாகி விட்டது.

அதனாலேயே சமதியிடம் தொழில் சம்பந்தமாகப் போனதாகவும், அங்கு ஒருவருக்கு உடம்பு சரியில்லை என்றும் உண்மையையே சிறிது மாற்றிக் கூறியதும் நினைவிற்கு வந்தது.

அவள் தன்னை நம்பவில்லை என்ற எண்ணமே அவனுடைய இதயத்தை சுக்கு நூறாய் உடைப்பதாய்!

அவளைத் தன் இணையாக மனதில் வரித்தபிறகு, வேறு எந்தப் பெண்ணுமே தனக்கு நிறைவை அளிக்க முடியாதென்ற உண்மை, ஏன் அவளுக்குப் புரியவில்லை என்று செல்லமாய் மறுகியது அவன் மனம்!

அக்னிக் குஞ்சொன்று நாபிக்குள் எரிவது போன்ற ஒரு வித தகிப்பு நிலை உருவாகி, உடம்பெல்லாம் சூடாகியது.

மறுநாள், அவன் லெனினை சந்திக்க சென்றபோது தான், செலினா அவனிடம் பெரிய மாற்றத்தை உணர்ந்தாள்.

அதைப்பற்றித் தன் அண்ணனிடம் கவலையாகக் கூறி அதை விசாரிக்கும்படி கூறினாள் அவள்.

மருத்துவமனையில் கவிதாவை அன்று மாலையிலேயே போய் சரண் சந்தித்தபோது, அவனை உணர்ந்ததன் அடையாளம் சிறு புன்னகையாய் முதன் முறையாய் அவள் முகத்தில் இயல்பாகத் தெரிந்தது.

அவனையும் தாண்டி பார்வை வாசலில் பதிந்து விட, "பாப்பா..?" என்றாள் கேள்வியாய் முணுமுணுத்தபடி!

உடனே ஆவலாக அவளிடம் சென்ற மூர்த்தி, "வருவா! நாளைக்கு அழைச்சிட்டு வரோம்" என்றான் ஆறுதலான குரலில்.



பங்கஜம் சரணிடம் "நீங்க அன்னிக்கு வந்துட்டுப் போனதிலிருந்து "பாப்பா.. பாப்பா.."ன்னு சிநேகாவைப் பத்தியே நினைச்சி கேட்டிட்டிருக்காப்பா! இன்னிக்கு உன்னைப் பார்த்ததும் திரும்பவும் ஞாபகம் வந்திடுச்சி" என்றார்.

'இது ரொம்ப நல்ல மாற்றம்தான் பெரியம்மா! மத்தவங்களை அடையாளம் தெரிஞ்சிக்கிறது... நல்லா நினைவுபடுத்தி வந்துட்டுப் போனவங்களைக் கேக்கற தெல்லாம்.. நல்ல முன்னேற்றமாச்சே.. ரொம்ப சந்தோஷமா இருக்கு! கூடிய சீக்கிரமே நம்ம கவிதா குணமாயிடுவா!" என்றபடி அவள் தலையைப் பாசமாக வருடினான் சரண்.

"ஏம்ப்பா.. என்னவோ போல டல்லா இருக்கே? உடம்பு சரியில்லையா?" அக்கறையுடன் விசாரித்தார் பங்கஜம்.

"இல்லை பெரியம்மா... கொஞ்ச பிஸி.. அவ்வளவுதான்" என்றவன் உடனே கிளம்பி விட்டான்.

அவனைத் தொடர்ந்து வந்த மூர்த்தி "இப்போ அவளுக்கு தன் வயித்தில் இருந்த குழந்தை நினைவு வர ஆரம்பிச்சிருக்கு சரண்! சிநேகா வந்திட்டுப் போனதிலிருந்து தன் வயித்தைத் தடவி 'பாப்பா.. பாப்பா..' ங்கிறா.

"எனக்குதான் ரொம்ப கில்ட்டியா இருக்கு! என்னாலதானே எல்லாப் பிரச்சனையும்! இங்கே நடந்த எல்லாத்துக்கும் மூல காரணமா ஆணிவேரா நான்தான் இருந்திருக்கேன்றதை நினைச்சா.. என் மேலயே எனக்கு வெறுப்பா இருக்கு." குற்றவுணர்ச்சியுடன் கூறினான் மூர்த்தி.



"எது நடக்கணுமோ அதுதான் நடந்திருக்கு மூர்த்தி... செஞ்ச தப்பை உணர்ந்து திருந்தினப்புறமும் அதையே நினைச்சி கவலைப்படக் கூடாது. மேலே ஆக வேண்டிய காரியத்தைப் பாருங்க! கவி சரியாகணும்.. நமக்கு அதுதான் இப்ப ரொம்ப முக்கியம்! அதுக்கு உங்களால என்ன முடியுமோ அத செய்ங்க.. டேக் கேர்!"

அவனுடைய தோளைத் தட்டியபடி கூறிவிட்டுக் கிளம்பியபோது, தன்னுடைய பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படாமலே இருப்பதை சரணின் மனம் நினைவு கூர்ந்தது.

அனுபவங்களின் வலித்தடங்கள், மனதில் வடுக்களை உருவாக்கியிருந்தன.

நெஞ்சம் சபர்மதியின் அருகாமையை எதிர்பார்த்து தவிக்க, பட்டுப் புழுவாய் தன்னைச் சுற்றி ஒரு கூடு கட்டிக் கொண்டு அதற்குள்ளேயே வாழ்பவனாக எண்ணி பெரிதும் ஏக்கமாய்...

சிநேகாவிடம் உடனே பேச வேண்டும் போல்..!

உடனே தன் மாமனாரின் வீட்டிற்கு அவன் போன் செய்தபோது, பேசிய சிநேகா, அழுகையுடன் உடனே அவனைப் பார்க்க வேண்டுமென்றாள்..

"அப்பா! அம்மா என்னைத் திட்டறாங்க.. பாட்டி தான் என்னைப் பார்த்துக்கறாங்க.. அம்மா சாப்பிடவேயில்லை. ஒரே அழுகை.. நீங்க வாங்கப்பா!"

உடைந்த குரலில், சலுகையுடன் அவள் கேட்க, "நாளைக்கே கிளம்பி வரேன்டா!" என்று அவளை சமாதானப்படுத்தினான்.



பிறகு பங்கஜத்திடம் பேசியபோது, "என்ன மாப்பிள்ளை, உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல என்னப்பா பிரச்சனை? அவ சென்னைக்கு கிளம்பிப் போகும்போது இருந்த துள்ளல், சந்தோஷம் எல்லாம் திரும்பி வந்தப்போ காணாமப் போயிருந்தது. அதான் கேக்கறேன்.." என்றார் அவர் மெதுவாக.

"ஒண்ணுமில்லத்தை.. எங்களுக்குள்ளே ஒரு சின்னப் பிரச்சனை.. அது சரியாப்ப் போயிடும்.. நீங்க எங்களுக்காக கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்காதீங்க.. இப்ப சமதி எங்கே" என்றபோது, "அவ கோவிலுக்கு போயிருக்காப்பா!" என்றவரை சமாதானம் செய்துவிட்டு போனை வைத்தவனுக்குள் பெரும் யோசனை.

உணர்வுகள், அவனுக்குள்ளேயே பதறி ஓடும் பறவையாய் சடசடத்து, அவள் தன்னை நம்பவில்லையே என்ற வேதனையை அதிகப்படுத்தின. ஆனாலும் தன் மனைவியை விட்டுத்தர மனமின்றி காரணத்தை மறைத்துப் பேசி அவன் வைத்துவிட பங்கஜத்திற்கு பெரும் வேதனையாய்... ஆனால், இது எதையுமே உணராத சமதி, அவனைப் பிரிந்து விட முடிவெடுத்திருந்தாள்.



22

மறுநாள் காலையில், தன் அம்மாவைத் தேடிச் சென்ற செலினாவின் காதுகளில் அவரும் டயானாவும் பேசிக் கொள்வது, ஸ்பஷ்டமாக விழுந்தது.

"என்னடி.. இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறே..? முன்னாடி நீ சரணை விரும்பினது

உண்மைதானே? நான் கூட நீ பெரிய புளியங் கொம்பாத்தான் பிடிச்சிருக்கேன்னு அப்ப ரொம்ப சந்தோஷப்பட்டேன். இடையில சனியனாட்டம் அந்த சபர்மதி புகுந்திட்டா.. சரணும் அவளைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டான்.. உடனே நீ கோபப்பட்டுப் பாரின் போனே! ஆனா அவன் உன்னைத் தன் தங்கை மாதிரிதான் நினைச்சதா உங்கண்ணன் கிட்டே சொன்னதை ஒருநாள் நானே கேட்டேன்...

''உனக்கு, உன் புருஷனோட ஒத்துப் போகலைன்னா உடனே, தன் பொண்டாட்டியைப் பிரிஞ்சிருந்த சரணை மனசிலே வச்சிட்டுதான், நான் நீ டைவர்ஸ் வாங்கிட்டு இந்தியா வரதுக்கு, கேட்டப்ப உடனே சரின்னேன்..

''அதுக்குள்ளே, இங்கே சரண் அவளைத் திரும்ப அழைச்சிட்டு வந்துட்டான்.. எப்படியாவது அவங்களைப் பிரிச்சி உன்னோட சரணை சேத்து வைக்கணும்னு நான் அந்த கவிதா பைத்தியத்தை பாக்கற மாதிரிப் போயி அவங்கம்மா வாயைக் கிளறினேன்.

''அப்பதான், சரண் தன் தங்கச்சியோட வாழ்க்கையைப் பாழாக்கிட்டதா நினைச்சி அதற்காக பழி வாங்கத்தான் சபர்மதியைக் கல்யாணம் செஞ்சுக்கிட்ட விபரம் தெரிய வந்தது.

''நம்ம வீட்டு சின்ன ஞூஸ் இருக்கே.. செலினா.. அவளும் எனக்கு ஒரு தகவலைப் போனஸாக் குடுத்தா!

''சரண் தம்பியும், சபர்மதியும் இப்பவாவது சந்தோஷமாக சேர்ந்து வாழறாங்க... நீ யாரோட படுத்துப்பேன்னு நைஸாப் பேசி முகத்தை பரிதாபமாக வச்சிக்கிட்டு கேட்டப்ப, அவ உண்மையப் போட்டு உடைச்சிட்டா!



''இல்லம்மா! அக்கா என் கூடவும் சிநேகா கூடவும் தான் படுத்துப்பாங்க.. அண்ணா கிட்டே சரியாப் பேச மாட்டாங்க''ன்னா!

''அதை எல்லாம் அழகாக் கோர்த்து, எனக்கு எல்லா விஷயமும் தெரிகிற மாதிரி சபர்மதிகிட்டே சொல்லி அவளை குழப்பி விட்டேன்.

''சரணும் உன்னை விரும்பறதா பொய் சொல்லி, உனக்கும் அவனுக்கும் தப்பான உறவு இருக்கிறதாகவும், அவங்க ரெண்டு பேரும் கணவன் மனைவியா வாழாதது எனக்குத் தெரியும். அதனாலதான் சரண் என் மகளைப் பார்க்க சென்னைக்கு அடிக்கடி ஓடி வந்துடறான்னு நான் சொன்னவுடனே அவ துடிச்சிப் போயிட்டா!

''இனிமே அவங்க கனவுல கூட சேர்ந்து வாழ முடியாதபடி அவளை நல்லா 'கீ' குடுத்து அனுப்பி வச்சிருக்கேன்.

''நீ அவனைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டா, நமக்குத்தான் நல்லது! நிறைய சொத்துக்கு நீ அதிபதியாகலாம். லெனினுக்கும் பார்ட்னர்ஷிப்புல எந்தப் பிரச்சனையும் வராம பார்த்துக்கலாம்னு நான் எல்லாத்தையும் நல்லா ப்ளான் பண்ணிக் காயை நகர்த்திட்டிருக்கேன். இப்ப போய் சரணை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்றே? இந்த போதை மருந்து பழக்கம் வேற, நான் என்னடி பண்றது உன்னை வச்சுக்கிட்டு..?'' புலம்பிக் கொண்டிருந்தார் ஜெசிந்தா.

''ஏம்மா! நான் சரணை விரும்பினது உண்மைதான்! ஆனா வெறுத்துப் போய்த்தான் நான் ஃபாரின் போயிட்டேன். அங்க போனப்புறம் சுதந்திரமா இருக்கப் பழகிட்டேன். என்னால ஒருத்தரைக் கல்யாணம் செஞ்சுக்கிட்டு, அவருக்கு அடிமையா



வாழ்ந்து குழந்தை பெத்துக் குடுக்கற, வாழ்க்கை எல்லாம் இப்போ வாழ முடியாது.. 'லைஃப்'னா அனுபவிக்கணும்...

அதனால, இப்படியே வாழ்ந்திடலாம்னு நான் முடிவு பண்ணிட்டேன்.. என் புருஷன் கிட்டே இருந்து வந்த ஜீவனாம்சம் எனக்கு அளவுக்கு அதிகமாகவே இருக்கு.. என்னால பாய்ஃபிரண்ட்ஸ், டிஸ்கொதே, ட்ரக்ஸ் எல்லாம் இல்லாம வாழ முடியாது... என்னைக் கேக்காம ஏம்மா இப்படிச் செஞ்சே?'' கடுப்படித்தாள் டயானா.

''அப்புறம் ஏன்டி மனைவிய அழைக்க சரண், ஏர்போர்ட்டுக்குப் போறான்னவுடனே கோபமா கூடவே போனே?''

''ம்.. அவ எப்படி இருக்கான்னு பாக்கத்தான்! ஆனா அவ அழகைப் பார்த்தவுடனே, ஒரு காலத்துல சரணை விரும்பின பொறாமையில மனசு கொதிச்சதென்னவோ உண்மைதான்..

''அதனாலதான் அவளைக் கொஞ்சம் வெறுப்பேத்தினேன். அதுக்காக என் வாழ்க்கைய பலிகடாவா ஆக்கிப்பேன்னு நினைச்சா, நீ ஒரு முட்டாள்மா!'' என்றாள் டயானா ஏளனமாக.

''அன்னிக்கு உரிமையா சரணோட கன்னத்துல முத்தம் குடுத்தே?''

''ஓ.. அங்கே எங்க கல்ச்சர்ல முத்தமெல்லாம் சகஜம்மா! டெய்லி ஒருத்தரோட டேட்டிங் போவோம்.. இதுக்குப் போய் அலட்டிக்கிறியே... தினம் பாக்கற ஃப்ரெண்ட்ஸ்.. ஆஃபீஸ் கலீக்ஸ் எல்லாருக்குமே இப்படித்தான் குடுப்போம்.. இதுக்கெல்லாம் அர்த்தம் கண்டு பிடிச்சிட்டிருந்தா, அப்புறம் அவ்வளவுதான்!'' என்றாள், அலட்சியமாக!



பிறகு, போதைப் பொருள் நிரப்பிய, சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தபடி, வெளியில் கிளம்பினாள்.

அறை வாசலில் நின்று அனைத்தையும் கேட்டிருந்த செலினாவின் நெஞ்சம் பதறிப் போய் சர்வாங்கமும் ஒடுங்கிப் போனது.

''அம்மா..'' இடியாய் எழுந்த குரல், யோசனையுடன் அமர்ந்திருந்த ஜெசிந்தாவை அவசரமாகத் திரும்பச் செய்ய, ஒரு ஏளனப் புன்னகையுடன் வெளியில் சென்றாள் டயானா.

''ஏம்மா இப்படிப் பண்ணினீங்க? உங்க பொண்ணோட வாழ்க்கை நல்லா இருக்கணும்னு, ரொம்ப நல்லவங்களான சபர்மதி அக்காவோட வாழ்க்கைய பலியாக்கி இருக்கீங்களே... உங்களை அம்மான்னு சொல்லிக்கவே, எனக்கு வெக்கமா இருக்கு..

''இந்த மாதிரி சில அம்மாக்கள் இருக்கறதாலதான் பல பேரோட வாழ்க்கை சீரழிஞ்சு போகுது.. முதல்லே உங்களை சுத்தி என்ன நடக்குது.. உங்க குடும்பத்துக்கு என்ன தேவைன்னு பாக்காம, ஊருக்கெல்லாம் போய் சமூக சேவை செஞ்சு என்ன பிரயோஜனம்?

''இந்த மாதிரி ட்ரக்ஸுக்கு அடிமையாகற பொண்ணு... உங்க கவலையாலேயே தனக்குன்னு ஒரு வாழ்க்கையைத் தேடிக்க பயப்படற ஒரு பையன்.. அம்மாவோட அன்பும், அரவணைப்பும் சரியாக் கிடைக்காததாலே உடைஞ்சு போய், தவறான ஒரு துணையைத் தேடிக்க முயன்ற என்னை மாதிரி ஒரு பொண்ணு... இதெல்லாம்தான்.. உங்க படாடோபத்துக்கும், பணக்காரத்தனத்துக்கும், சமூக சேவைக்கும், குடும்பத்தை கவனிக்காம ஊர்ச் சுத்தினதுக்கும், கிடைச்ச பரிசு!

''நல்லவேளை! என்னைச் சரியான சந்தர்ப்பத்துல சரியான பாதையில 'கைட்' பண்ணினாங்க சபர்மதி அக்கா! அவங்களுக்குப் போயி சே.. உன் வயித்துல பிறந்தேன்னு சொல்லவே எனக்கு வெக்கமா இருக்கும்மா!'' செலினா கண்ணீருடனும், சுய வெறுப்புடனும் முடித்தபோது, இருண்டு போனது அவர் முகம்!

தன் பிள்ளைகளை கவனிக்காமல், ஊர் பிரச்சனைகளை தலையில் தூக்கி ஆடியதற்கு நல்ல பரிசாய்.. மகளின் வார்த்தைகள்! இப்போது அவருக்கு கொஞ்சம் கொஞ்சமாய் மகள் கூறிய உண்மையும், பிள்ளைகளின் தனிமை உணர்வும் புரிய ஆரம்பித்தன.

பெண்ணே, தனக்கு அறிவுரை கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோமே என்ற சுய பச்சாதாபமும், அவள் வார்த்தையிலிருந்து உறைக்க, தன் தவறை உணர்ந்து, நெஞ்சம் உடைந்து, செயலிழந்து போய் நின்றிருந்தார் ஜெசிந்தா.



23

அன்று மதியம் விமானத்தில் டிக்கெட் எடுத்திருந்த சரணுக்குள், சமதியின் ஞாபகங்கள் அதிகமாய்!

தன் நேசத்துக்குரியவளிடம் அதன் எதிரொலி சிறிது கூட இல்லாதது, இதயத்தை வலிக்கச் செய்வதாய்..!

அவன் ஃபைலில் ஆழ்ந்திருந்தபோது, அறைக்கதவு தட்டப்பட்டு ஜெசிந்தாவுடன் செலினாவும் மெதுவாக உள்ளே நுழைந்தனர்.



''என்ன ஆன்ட்டி இந்த நேரத்துல.. அதுவும் இங்கே ஆபீஸுக்கே வந்திருக்கீங்க? லெனின் ஒரு கான்ட்ராக்ட் விஷயமா வெளியிலப் போயிருக்கான். மதியமதான் வருவான்.. ஹாய் செலினா... என்ன நீயும் அம்மா கூட..?''

ஆர்வத்துடன் வரவேற்றவனிடம், ''இல்லைப்பா! உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்'' மெலிந்த குரலில் கூறினார் ஜெசிந்தா.

பிறகு, அவர் சரணின் கையைப் பிடித்தபடி மன்னிப்பு கேட்க, விபரம் புரியாமல் பதறிப் போனான் அவன்.

ஜெசிந்தா கண்ணீருடன் எல்லா விஷயங்களையும் கூறி அவனிடம் தன்னை மன்னித்து விடும்படி குற்றவுணர்வுடன் கெஞ்ச, உறைந்து போய் சிலையாய் நின்று விட்டான் அவன்.

குற்றவுணர்வுடன் அவனருகிலேயே நின்று எல்லா வற்றையும் கவனித்துக் கொண்டிருந்த செலினாதான் அவனைக் கலைத்தாள்.

''அண்ணா! நன் இப்பத்தான் சமதி அக்காவுக்குப் ஃபோன் பண்ணி எல்லா உண்மையையும் சொன்னேன்... அம்மாவும் பேசினாங்க.. அவங்க உங்களோட பேசறேன்னு சொன்னாங்க'' எனும்போதே அவனுடைய செல் சங்கீதமாய் அழைத்தது.

அவனுக்குள், சபர்மதியின் நினைவுகள் சாரலாய் வீச, மனதில் பதிந்த நல்வயிரமாய், அவள் ஞாபகங்கள்!

தன் கண்மணி ஏன் தன்னைச் சந்தேகப்பட்டாள் என்பது புரிந்தவுடனே, பெரிய தடை அகன்றது போல் ஒரு நிம்மதி!

★ ★ ★

கோயம்புத்தூரில் சபர்மதியின் நிலை அதைவிடப் பெரும் தவிப்பாய்!

இரு நாட்களாக எரிமலையாகக் குமுறிய மனதில் சட்டென்று பரவிய வசந்தமாய், செலினாவின் அழைப்பு!

எல்லா உண்மைகளையும் தெரிந்த பிறகு இந்த இரு நாட்களாக தானும் ஆழ்நரகத்தில் உழன்று, சிநேகா, மங்களம், அருணாசலம் மூவரையும் வேதனைக்குள்ளாக்கிய தவறும் புரிந்து சமதியின் மனம் குற்றவுணர்வுடன் தவித்தது.

நெஞ்சத்திற்குள் கீற்றாய் ஒரு நம்பிக்கை வெளிச்சம் ஒளிர, தாயின் மடியில் சாய்ந்து கதறியவள், தன் மனதை முதன் முதலாக அவரிடம் பகிர்ந்து கொண்டாள்.

அவளை ஆறுதல்படுத்தியவர், உடனே சிநேகாவையும் அருணாசலத்தையும் வரவழைத்து, அந்த மகிழ்ச்சியை பங்கு போட்டுக் கொண்டார்.

அவளை ஆசீர்வதித்த அருணாசலம், ''நாங்க சிநேகாவை அழைச்சிட்டு இன்னிக்கு காரிலக் கிளம்பி, நம்ம கிராமத்துக்குப் போறோம்... நாளைக்கு சனிக்கிழமைதானே? ரெண்டு நாள் ரிலாக்ஸா அங்கே தங்கிட்டு வர்றோம்.. நீங்க ரெண்டு பேரும் எந்தத் தடையுமில்லாம எல்லாம் பேசி முடிச்சி சந்தோஷமா இருக்கணும்... கூடிய சீக்கிரம் இவளுக்கு ஒரு தம்பிப் பாப்பாவ பரிசாத் தரணும்'' கம்மிய குரலில் வாழ்த்தினார்.

''ஹை.. தம்பிப் பாப்பா.. வந்தாச்சு..'' என்று கைதட்டி ஆர்ப்பரித்த சிநேகாவிடம், குனிந்தவர், ''செல்லம்... நாம



மூணு பேரும் காரில ஊருக்குப் போகலாமா?'' கொஞ்சலாகக் கேட்டார்.

''அம்மா... அப்பா..?'' கேள்வியாய் ஒற்றைப் புருவத்தை உயர்த்தியவளிடம், ''பின்னாடி வருவாங்க.. நாம இப்ப போகலாம்.. சரியா?'' என்றவுடன் அவளும் உற்சாகமாகத் தலையசைத்தாள்.

அவளை முத்தமிட்டு ''சாரிடா.. அம்மா ரெண்டு நாளா உன்னைத் திட்டிட்டேன் இல்லை'' என்று மன்னிப்பு கேட்டாள் சபர்மதி.

''சரிம்மா.. நாங்க அப்போ நர்ஸையும் கூட அழைச்சிட்டுக் கிளம்பறோம்... நீ ஸ்கூலுக்கு போக வேண்டாம்.. ஏதாவது கையெழுத்து வேணும்னா, யாரையாவது அனுப்பி வாங்கிக்கச் சொல்றேன்'' என்றபடி அவளைத் தயாராக்கி, சரணுடைய வீட்டிற்கு அனுப்பினார்.

தங்கள் வீட்டினுள் நுழைந்ததுமே, முதல் வேலையாக அவள் சரணுக்கு போன் செய்ய, உடனே எடுத்தவன், 'ஒரு நிமிஷம் சமதி!' என்றபடி சில நொடிகள் அமைதி காத்தான்.

மீண்டும் அவன் குரல் கேட்கத் தவமிருந்த அந்த நிமிடங்களில் அவன் ஜெசிந்தாவையும், செலினாவையும் அனுப்பி வைத்ததை அவள் அறியவில்லை.

''என் மகனுக்கு எந்த உண்மையும் தெரிய வேணாம்ப்பா.. அவன் என்னை வெறுத்துடுவான்.. அப்புறம் எனக்கு சாகறதைத் தவிர வேற வழியே இல்லை!'' கண்ணீருடன் கும்பிட்டவரை, தான் லெனினுக்கு இந்த விஷயமே தெரியாதபடி பார்த்துக் கொள்வதாக உறுதியளித்து அனுப்பி வைத்தான் சரண்.



அவசரமா செல்லை எடுத்து காதில் வைத்தவன், ''சமதி.. மை லவ்!'' என்றான் மிருதுவான குரலில்!

''சாரிங்க.. உங்களைத் தப்பா நினைச்சிட்டேன்.. என்னை மன்னிப்பீங்களா? ப்ளீஸ்..'' மென்குரலில் கேட்டாள் சபர்மதி. அவளுடைய குரல் பூஞ்சிறகாய் அவனை வருடியது.

''நீ என்னைப் 'ப்ளீஸ்' பண்ணினாப் போதும்! இப்படிப் 'ப்ளீஸ்'னு கெஞ்ச வேண்டாமே.. ரொம்ப நாளா நமக்குள்ளே ஒரு கடன் வசூலாகாம பாக்கி இருக்கு.. இன்னிக்கு வட்டியோட வந்து அதை வாங்கிக்கப் போறேன்..'' குறும்புடன் கூறினான் சரண்.

''சரி! அப்பாவும், அம்மாவும், சிநேகாவோட எங்க கிராமத்துக்குப் போயிருக்காங்க! வீக் எண்டுக்கு! நான் உங்களுக்காகக் காத்திட்டிருக்கேன்'' தவிப்புடன் வந்தது அவள் குரல்.

''நானும்தான்! சிறகிருந்தா இந்நேரம் பறந்து வந்து உடனே உன்னைப் பாத்திருப்பேன்... சரி.. ஃப்ளைட்டுக்கு நேரமாச்சு.. நான் கிளம்பி நேரா வரேன்..'' என்றவன், பேசி முடித்து செல்லிற்கு மெதுவாக முத்தமிட்டபோது, வெகு தூரத்தி லிருந்தாலும் அவளை வெட்கத்தில் சிவக்கச் செய்தது. அந்த ஒற்றை ஒலி! அவனிடம் பேசவே, புதிதாய் ஏதோ ஒருவித வெட்கம் வந்து தடுத்தது.

தன்னை விட, அவனைத் தான் விரும்புவது, இன்றுதான் அவளுக்குப் புரிந்தது!

அவனுடைய அன்பு தரும் சுகமே, இனி தன்னை உயிர்ப்புடன் வாழ வைக்கப் போவதும் உறுதியாய்..!



மெல்ல மெல்லத் தன் மனதை கொள்ளையடித்து உட்புகுந்து, நின்று தனக்குள் ஒருயிராய் அவன் கலந்து விட்டதும், பல ஜென்மங்களாக உள்ளுக்குள் புதைந்திருந்த காதலும், நேசமும், இன்று உயிர்த்தெழுந்ததும், தாமதமாகப் புரிந்து, உள்ளே மின்னல் பூக்கள் மலர்ந்தன.

இன்று.. பிரிவுகள் மூச்சுத் திணறச் செய்ய, அவன் நினைவுகளே சுவாசமாய்!

அவள் உணர்வுகள் வானம்பாடியாய் சிறகு விரிக்க, நெஞ்சம் அவன் வருகைக்காகத் தவமிருந்தது.

இத்தனை நாட்கள் அவன் மேல் தான் பூசியிருந்த போலியான, வெறுப்பு வர்ணம், உதிர்ந்து சிதறி நெஞ்சம் அவனுக்காக உருகித் தவிப்பதை வெட்கத்துடன் உணர்ந்தாள் சபர்மதி!



24

சரணுக்குப் பிடித்த இளம்பச்சை நிறத்தில் புடவையணிந்து அவனுக்காகக் காத்திருந்த போது ஒவ்வொரு மணித் துளியும் நீண்ட பொழுதுகளாய்!

தவிப்புகளோடு தனிமை மட்டும் அவளுக்கு துணையிருக்க, அவன் நீங்கிச் சென்றவுடனே தன்னுடைய உலகம் இருட்டாகிப் போனதை, இன்று உணர்ந்தாள் சபர்மதி.

சிறு தூறலாய், அவன் பார்வைகள்.. பேச்சுகள்... அவள் மனதில் பதியன் போட்டன.

அழைப்பு மணி ஒலிக்க ஆவலுடன் ஓடிச் சென்று கதவைத் திறந்தபோது, அங்கு ப்ரகாஷ் நின்றிருந்தான்.

''என்ன விஷயம்?'' ஏமாற்றப் பார்வையுடன் அவள் கேட்க, ''இந்த ஒரு ஃபைலில் நீங்க கையெழுத்துப் போடணும்.. அர்ஜெண்ட்.. அதான் வந்தேன்'' என்றவனை உள்ளே அழைத்து ஹாலில் அமர வைத்து விட்டுத் திரும்பி உள்ளே சென்று பேனாவை எடுத்தபோது, அவன் குரல் வெகு அருகில் கேட்டது.

''அதோட என் லைஃப்லே உன் குறுக்கீட்டைப் பத்தியும் கொஞ்சம் பேசணும்!''

வக்ரமான குரலில் பேசியவனை, கோபத்துடன் நோக்கியவள், ''வெளியே போ! முதல்லே என் அனுமதி யில்லாமல் என் அறைக்கு வந்ததே தப்பு.. அதோட மரியாதை இல்லாம என்னை வா.. போன்னு.. பேசறியா?'' அழுத்தமான குரலில் கூறிவிட்டு, வெளிப்புறம் கைகாட்டினாள்.

''நான் போக மாட்டேன்.. எனக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகணும்... செலினாவை ஏன் என்கிட்டே இருந்து பிரிச்சே? அதுக்கான பலனை நீ அனுபவிச்சுதான் ஆகணும்!'' என்றபடி முன்னால் வந்தான் அவன்.

''நானே உன்னை வார்ன் பண்ணணும்னு இருந்தேன். அவ சின்னப் பொண்ணு! உன் ரொமான்ஸை எல்லாம் வேற எங்கயாவது வச்சிக்க..'' கடுமையான குரலில் அறிவுரை கூறினாள்.

''ஏன்.. உன் புருஷன் மட்டும்தான் அவகிட்ட ரொமான்ஸ் பண்ணணுமா.. அதுக்கு நீயும் உடந்தையா? அதான் அவரு



எப்பப் பார்த்தாலும் சென்னைக்கு போயிடறாரு..'' கொச்சையாகக் கூறினான்.

மனதில் வீசிய சூறைக் காற்று, பெரும் கோபமாய் சுழன்றடிக்க, ''யூ.. டர்ட்டி டெவில்! யாரைப் பத்தி ... யார்கிட்டப் பேசறோம்னு தெரிஞ்சுதான் பேசறியா! அவர் எப்படிப் பட்டவர்னு தெரியுமா உனக்கு? உன்னை மாதிரியே எல்லாரையும் நினைக்காதே! அவர் கால் தூசிக்கு கூட நீ சமமாக மாட்டே! முதல்லே வெளியில போ!'' அடிக்குரலில் சீறினாள்.

''என்னடி.. புருஷன் கூட ஒத்துமையா வாழாதப்பவே இவ்வளவு வக்காலத்து வாங்கறே! கட்டின புருஷனாச்சே.. அதான் விட்டுக் கொடுக்க முடியலை போலிருக்கு..!'' என்று கூறியபடி அருகில் வந்து அவளுடைய கையை அவன் பிடிக்க, அவள் விடுவிக்கப் போராடிய போதுதான், அவன் நன்றாகக் குடித்திருப்பது தெரிந்தது.

''ஏய்..'' என்ற இடிபோன்ற குரலும், அதைத் தொடர்ந்து மின்னலாய் உள்ளே வந்த சரணின் வருகையும், அவளைத் திடுக்கிட்டுத் திரும்பச் செய்ய அவனைக் கண்டதும் சர்வாங்கமும் ஒடுங்கி, நின்று விட்ட பிரகாஷ், உடனே பேச்சை மாற்றினான்.

''மேடம்தான் என்னை தனியா சந்திக்க வரச் சொன்னாங்க.. அதான் சார் வந்தேன்.. நீங்க ஊரிலேயே இல்லாதப்ப நாங்க ஜாலியா இப்படி இருக்கறது பழக்கம்தான்..'' வக்ரப் புன்னகையுடன் கூறினான் அவன்.

''அடப்பாவி!'' நம்ப இயலாமல் முணுமுணுத்தபடி அவள் மிரட்சியும், தவிப்புமாய் சரணை நோக்கியபோது, பிரகாஷைப் புரட்டி எடுத்து விட்டான் அவன்.



பெண்ணிடம் வீர முழக்கம் இட்டவன், அவனிடம் தோற்றுப் போய் ஒடுங்கிக் கிடந்தான்.

பிறகு தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு சரணுடைய கால்களில் அவன் விழுந்தபோது, ''அவளை யாருன்னுடா நினைச்சே... என் உயிர்டா அவ.. அவளைப் பத்தி நீ சொன்னா, உடனே நான் நம்பிடுவேனா? அந்தக் கடவுளே வந்து சொன்னாலும், நான் நம்ப மாட்டேன்!

''இந்த நிமிஷம்தான், நான் உன்னைப் பாக்கற கடைசி நொடியா இருக்கணும். இனி ஒரு நிமிஷம் இங்கே நின்னே... நானே உன்னைக் கொன்னு போட்டுடுவேன்... போ வெளியே!'' புலியாய் உறுமினான் சரண்.

தப்பித்தோம்.. பிழைத்தோம்.. என்று அவன் எழுந்து ஓட அப்படியே சரிந்து அமர்ந்து அழ ஆரம்பித்தாள் சுமதி.

தன் மேல் எவ்வளவு நம்பிக்கை இருந்தால், அவன் இப்படிச் சொல்லி இருப்பான் என்ற எண்ணமும், அந்த நம்பிக்கை அவன் மேல் ஒரு சதவீதம் கூட தனக்கில்லையே என்ற சுயத் தேடலும், வெறுப்பும், அவள் மனதிற்குள் பெருத்த அடியாய்..!

பலப் பல எண்ணங்கள் கலவையாக மோத உணர்வுகள் உருகி, உயிரும் கரைந்து விடும்போல் அழுதவளை, ஆதரவுடன் அணைத்துக் கொண்டான் சரண்.

மனதிற்குப் பிடித்தவரிடம் தோற்றுப் போவது கூட, சில நேரங்களில் இன்பமாய்!

''உதய் ஐ.. லவ்.. யூ. சாரி.. உதய்'' என்ற கதறலுடன் அவன் மார்பில் முகம் புதைத்து அழத் துவங்கினாள் அவள்.



வெகு நாட்களாக அவன் கேட்க விரும்பிய வார்த்தைகள் அவை!

இன்று அவனை ஆனந்தப் பரவசத்தில் மூழ்கடித்து சொர்க்கத்தின் வாசற்படியை.. ரம்யமாக அறிமுகப்படுத்த, அவளை ஒரு பொக்கிஷம் போல் இறுக அணைத்துக் கொண்டான் சரண்.

இந்த ஒரு நாளுக்காகவே காத்திருந்ததைப் போன்ற ஒரு உணர்வு இருவருக்கும்!

உயிரிலிருந்து பிறந்து, உணர்வுகளை ஸ்பரிசித்த அந்த ஒற்றை வார்த்தை.. அவளுடைய மனதின் அடி ஆழத்திலிருந்து, உதய்சரண் மேல் உயிரையே வைத்திருந்த காலத்தில் அவள் உச்சரித்த, ''உதய்..'' இன்று அவனுடைய காயம்பட்ட இதயத்தை மயிலிறகாய் வருடி ஒத்தடம் தரும் இனிய மருந்தாய்!

இனி, உன்னை விட்டு நான் ஒரு கணமும் நீங்க மாட்டேன் என்ற உறுதியும், சத்தியமும், அவன் விழிகளில்!

மனதில், இனி வானத்தையும், வசப்படுத்த முடியுமென்ற பெரும் வெற்றிக் களிப்பு..! வசந்தமே தன் வாசல் தேடி வந்த உணர்வு!

அவளை மென்மையாக வருடி ஆறுதல் படுத்தியவன், ''சமதி.. ப்ளீஸ்.. அழக் கூடாது.. நீ அழுதா என்னால தாங்க முடியாது...'' என்றான் சரண் பெரும் அலைப்புறுதலுடன்!

சிறிது நேரம் கழித்து தன்னை சமாதானப்படுத்தியபடி நிமிர்ந்தவளின் முகத்தில் வெட்கம் வந்து அழையாத தோழியாக இளஞ்சிவப்பாய் ஒட்டிக் கொள்ள, மெதுவாக

எம்பி அவன் கன்னத்தில் தன் இதழ் பதித்து வெகு நாட்களாய் அவன் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்தப் பரிசைக் கொடுத்தாள் சபர்மதி.

உடனே, அவனும் தன்னை இழக்க, அங்கு இதழும் இதழும் கலந்துரையாடல் நடத்தி, சுகக் கவிதைகளைப் பிரசவித்தன.

அந்த நிமிடம் அவன் மனதில், இந்த அன்பிற்கு முன்னால் வேறெதுவும் தேவையில்லை என்று தோன்றியது.

கொடியினில் அரும்பாகி, தெய்வத்தின் மார்பில் சரமாகி மலரும் மாலையாய் சபர்மதி!

வெளியே, மழை பூமியை முத்தமிட, ஆரம்பித்தது.. சாரலாய் பூக்களை சரசமாக வருடியது.

சங்க இலக்கியத்தில் வருகின்ற தலைவனின் நிலையிலிருந்தான் உதய்!

''உலகிற்கு ஆணியாகப் பலர் தொழ..'' என்று தொடங்கும் நற்றிணைப் பாடலின் பொருளைப் போல் ''உலகிற்கு ஆணியாக விளங்கும் மழையினது தன்மையைப் போல், தன் வாழ்விற்கு ஆதாரமானவள் என் தலைவி'' என்ற பெருமிதம் அவனுள் நிறைந்திருந்தது.



# 25

சரியாக ஒரு வருடத்திற்குப் பிறகு...

அந்த மருத்துவமனையின் வெராண்டாவில் கவலை ரேகையுடன் அருணாசலமும், மங்களமும் நின்றிருக்க, முகத்தில் தவிப்பை சுமந்தபடி உதய் சரண் காத்திருந்தான்.



சிநேகாவின் கைப்பிடித்தபடி செலினா நிற்க, புதிதாகத் திருமணம் முடித்த தம்பதிகளாய் கவிதாவும், மூர்த்தியும் அங்கு பதட்டத்துடன் அமர்ந்திருந்தனர்.

வெகு நேரக் காத்திருப்பிற்குப் பிறகு, சீருடை அணிந்த நர்ஸ் ஒருத்தி வெளியில் வந்து, ''கங்கிராஜுலேஷன்ஸ்.. உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு.. சுகப் பிரசவம்தான்! இன்னும் அரை மணி நேரம் கழிச்சி ரெண்டு பேரையும் பார்க்கலாம்..'' இனிமையான குரலில் கூறிவிட்டுச் சென்றாள்.

சரணின் மனதிற்குள் வானவில்லைத் தூளியாக்கி அதில் தலை சாய்த்தது போல் ஒரு உணர்வு!

சுகமாய் கண்களை மூடிக் கனவுகளை வரிசைப்படுத்த அந்தப் பட்டியல் முழுவதும் அவளின் முகவரி மட்டுமே..!

யாரோ தன் கையைப் பிடித்துக் குலுக்குவதையும், வாழ்த்துச் சொல்வதையும் உணர்ந்து அவன் விழித்தபோது, எதிரில் அருணாசலம் முகம் நிறைந்த புன்னகையுடன் நின்றிருந்தார்.

பிறகு வந்த நிமிடங்களில், வானையும் தொட்டு விடத் துடித்தது மனம்! அவனுக்குள் புதிதாய் ஒரு பூவின் மலர்வு!

அரை மணி நேரத்திற்குப் பிறகு, அவர்கள் அழைக்கப்பட, முதல் ஆளாக, சரண் உள்ளே சென்றபோது, உடலிலிருந்த பலம் முழுவதும் உறிஞ்சப்பட்டது போன்ற ஒரு விதத் தளர்ச்சியுடன் கண் மூடிப் படுத்திருந்தாள் சபர்மதி.

மெதுவாக அவள் தலையை வருடி விட்டு அருகிலிருந்த தொட்டிலுக்குத் திரும்பினால், இன்றுதான் மொட்டவிழ்த்த



ரோஜாவைப் போல் கை கால்களை அசைத்துக் கொண்டு படுத்திருந்தது அவன் குழந்தை!

அவன் விழியோரங்கள் மெல்லக் கசிய, இந்த முறை அவளைத் தான் ஒரு அரிய பொக்கிஷமாய்ப் பார்த்துக் கொண்டது நினைவு வந்தது.

சிநேகா பிறந்த போது இப்படித் தானே இருந்திருப்பாள் என்ற உணர்வும், அவளுடைய பிஞ்சுப் பருவத்தில் உடனிருக்கின்ற பாக்கியத்தை தான் இழந்து விட்டதும் தாமதமாகப் புரிந்து, எல்லாவற்றிற்கும் சேர்த்து ஈடுகட்டி தன் அன்பெனும் மழையில் மூவரையும் நனையைச் செய்ய வேண்டுமென்ற உறுதி வந்தது.

''உதய்...'' மென்மையான குரலில் அவள் அழைப்பதை உணர்ந்து திரும்பியவனின் விழிகள், நேசத்தையும் காதலையும் வருடலாய் வெளிப்படுத்த, இதமான அந்தப் பாச நிழலில் சுகமாக இளைப்பாறியது, சபர்மதியின் மனது.

''என்னடா.. ரொம்ப வலிச்சதா...?'' அவன் கேள்வி சில்லென்று ஒருவிதக் குளுமையை மனதில் படரச் செய்து விட ''ஊஹூம்... வலிக்கிறப்போ உங்களை நினைச்சிக்கிட்டேன் வலி போயிடுச்சி!'' மிருதுவாகக் கூறினாள் சமதி.

''பூச்சாண்டி வருதுன்னு சொன்னா குழந்தைங்க பயப்படுமே அதுமாதிரியா?'' குறும்புடன் கேட்டு விட்டு கண் சிமிட்டிச் சிரித்தவன், அவளுடைய கையை ஆதரவாகப் பிடித்துக் கொண்டான்.

''உதய்..'' என்று ஒரு வார்த்தை நீ கூறினால் என் காயங்கள் மறைந்து விடும்.. என் வலிகள் விலகி ஓடி விடும்..' என்று தான் தவித்திருந்த நாட்கள்.. இன்று மறவாமல் கண் முன் வந்தன.



தன்னை மூடிய வெண்பனியாய்...

தன்னை வருடிய பூங்காற்றாய்...

தன்னைத் தழுவிய மெல்லிசையாய்...

தன்னுள் உறைந்த உயிரோசையாய்!

அவள் தன்னுள் கலந்ததை எண்ணி அவன் விழிகளில் மகிழ்ச்சிப் பூக்கள் மின்னின.

சிலும்பலாய் அவளுடைய நெற்றிப் பரப்பில் கோலமிட்டிருந்த முடிக் கற்றையை ஒதுக்கியபடி மென்மையாக அவன் முத்தமிட்டபோது ''ஹை... தம்பிப் பாப்பா வந்தாச்சு'' உற்சாகக் குரலுடன் சிநேகா உள்ளே வர, மற்றவர்கள் பின் தொடர்ந்து வந்தனர்.

உடனே அவளைத் தூக்கி தொட்டிலில் இருந்த குழந்தையை அவன் காண்பிக்க, அவள் மகிழ்ச்சியில் துள்ளினாள்.

''குழந்தை அப்படியே சமதி அக்கா ஜாடைதான்!'' செலினா கூற, அருகிலிருந்த சரணின் இடுப்பில் மெல்லக் கிள்ளிய சபர்மதி ''ஆசைக்கு ஒன்னு.. ஆஸ்திக்கு ஒண்ணு.. போதுமா உதய்..?'' என்றாள் குறும்புடன்.

''எது.. குழந்தையத் தானே சொல்றே?''

குறும்புடன் அவள் காதருகில் கேட்டுவிட்டு அவன் ஒற்றைக் கண் சிமிட்ட, ''ஏய்.. உதய்..'' என்ற செல்ல அதட்டலுடன், ஒற்றை விரலைக் காட்டி, 'பத்திரம்' என்பது போல் எச்சரித்தாள் சபர்மதி!

அவளுடைய செல்லக் கோபம் கூட மிக அழகாய்.. வெகுவாக ரசிக்க முடிந்ததாய்..!

"நீதானே என் வசந்தம்" என்ற செல்லச் சிணுங்கல் அவன் விழிகளில்..! வானவில்லொன்று, வசந்தமாய் தன் வாழ்வில் வந்ததும் புரிவதாய்!

அங்கு, காதல் பாடத்தை விழிகள் நான்கும் மௌன மொழியில் பேச, வெளியே மழைக்கால மேகங்கள், வான் வெளியைத் தீண்டிப் பார்க்க முயன்று கொண்டிருந்தன.

வானவில்லை மாலையாக்கி.. நீர்ப் பூக்களின் தோரணமாய், மழையை பூமிக்கு அனுப்பி, அலங்காரம் செய்ய ஆரம்பித்தது வானம்!

